# களத்தில்


நாம் ஒருவரையும் ஏமாற்றவும் இல்லை. துரோகம் இழைக்கவும் இல்லை. ஆனால் எம்மை யாரும் ஏமாற்றினால் அல்லது எமக்குத் துரோகம் இழைத்தால் நாம் பதிலடி கொடுக்கத் தயங்க மாட்டோம்.

- தமிழீழத் தேசியத் தலைவர்


திருவள்ளுவர் ஆண்டு 2027 கடகம் 10 (24.07. 1996) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் அன்பளிப்பு: 60 p


## விடுதலை வரலாற்றில் மாபெரும் சாதனை!

# பலம்வாய்ந்த முல்லை இராணுவத்தளம் விடுதலைப் புலிகளால் தாக்கியழிப்பு!

- 1000க்கும் மேற்பட்ட படையினர் பலி
- உலங்கு வானூர்தி சுட்டுவிழ்த்தப்பட்டது
- 'ரணவிரு' பீரங்கிக் கப்பல் மூழ்கடிப்பு
- ஆயுதக் கிடங்கு கைப்பற்றப்பட்டது
- தரை, கடல், வான் மூலமான தரையிறக்கல் முயற்சியை எதிர்த்து கடும்மோதல்

தமிழீழ விடுதலை வரலாற்றில் மாபெரும் வீரகாவியம் ஒன்று, 18.07.1996 வியாழக்கிழமையன்று, வரலாற்றுச் சிறப்புமிக்க முல்லை மண்ணில் எழுதப்பட்டது. இரண்டாயிரத்திற்கும் அதிகமான ஆளணிப் பலத்தையும் கனரக நவீன ஆயுதங்கள், கவச வாகனங்கள், ஆட்டிலறிகளுடன் கூடிய அதி உயர் பாதுகாப்பையும் கொண்டிருந்த சிறிலங்காவின் இராணுவ கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த முகாம்களில் ஒன்றான முல்லைத்தீவு இராணுவத்தளம் யூலை மாதம் 18ஆம் திகதி அதிகாலை 12.10 மணியளவில் புலிகளால் ஆரம்பிக்கப்பட்ட 'ஓயாத அலைகள்" (Unceasing Waves) இராணுவ நடவடிக்கை மூலம் வெற்றிகரமாகக் கைப்பற்றப்பட்டது.

மூன்று பக்கம் கடல் நீராலும், தரைப்பகுதி காட்டு மரங்களாலும் சூழப்பட்ட இப் படைத்தளத்தை அதன் வடக்கு-தெற்குப் பகுதிகளிலிருந்து நெருங்கிய ஆயிரத்திற்கும் மேற்பட்ட புலிவீரர்களைக் கொண்ட அணிகள் தளத்தின் முன்னணிக் காவலரண்கள் மீது மோட்டார்கள், சிறு எறிகணைகள், துப்பாக்கிகள் மூலம் கடும் தாக்குதலைத் தொடங்கின. சில மணிநேரத்தில் முன்னணி நிலைகளை உடைத்துக்கொண்டு உள்நுழைந்த புலிவீரர்கள், முகாமின் மையப்பகுதியைக் கைப்பற்றி, பின்னர் வானொலித் தொடர்பு நிலையத்தினையும் ஆயுதக் கிடங்கினையும் கைப்பற்றினர். தொடர்ந்து கடற்கரை நோக்கியிருந்த காவலரண்களும் கைப்பற்றப்பட்டன. வானொலித் தொடர்பு நிலையம் கைப்பற்றப்பட்டமையால் சிறிலங்கா இராணுவத் தலைமையகத்திற்கும் முகாம் தாக்குதலில் சிக்குண்ட இராணுவத்தினருக்குமான தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டன.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை சிறிலங்கா இராணுவத் தலைமையகம் தரை, கடல், வான் வழிகளால் இம் முகாமை மீட்க எடுத்த சகல முயற்சிகளும் புலிகளால் தடுத்து நிறுத்தப்பட்டது. 1000க்கும் மேற்பட்ட படையினரின் இறப்பை உறுதிப்படுத்தியுள்ள விடுதலைப்புலிகள், முகாமிற்கு வெளியே தப்பி ஓடி பற்றைகளுக்குள்ளும், மீதமிருந்த முகாம் கட்டிடங்களுக்குள்ளும் ஒளிந்து நிலையெடுத்திருக்கும் படையினரை தேடியழிக்கும் நடவடிக்கையில் நான்காம் நாளாக (21-07-96) தொடர்ந்தும் ஈடுபட்டனர். தரையிறக்கப்பட்ட படையினர் மீதான தாக்குதல்களும் தொடர்வதால் படையினரின் இறப்புவீதம் இன்னமும் அதிகரித்துக்கொண்டே செல்லலாம் எனத் தெரிவித்துள்ளனர். முதல் நாள் இடம்பெற்ற உக்கிரமான மோதல்களின் போது 40 போராளிகள் வீரச்சாவடைந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.



முல்லை மண்ணில் வீரகாவியம் படைத்த மாவீரர்களுக்கு எமது வீரவணக்கங்கள்

## பலகோடி பெறுமதிவாய்ந்த ஆயுதங்கள் புலிகள் வசம்

இம்மகத்தான தாக்குதலில் முல்லைத்தீவு முகாமை தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த விடுதலைப் புலிகள் இரண்டு நடுத்தர 120மி.மி ஆட்லறி பீரங்கிகள், மூன்று கவசவாகனங்கள், பல வகையான மோட்டார்கள், அதற்குப் பொருத்தமான எறிகணைகள், ஆர்.சி.எல் ரக பீரங்கிகள் உட்பட பெருந்தொகையான நவீன கனரக ஆயுதங்களையும், தானியங்கித் துப்பாக்கிகள், பல இலட்சக்கணக்கான ரவைகள் மற்றும் இராணுவ தளபாடங்களையும் கைப்பற்றினர். கைப்பற்றப்பட்ட ஆயதங்களையும் உபகரணங்களையும் பாதுகாப்பான இடத்திற்கு புலிகள் கொண்டு சென்றனர். அப்பகுதியில் வாழ்ந்த மக்கள் தமது உயிருக்கும், உடமைக்கும் அச்சுறுத்தலாகவிருந்த இம்முகாம் புலிகள் வசம் வீழ்ந்த மகிழ்ச்சியில் மிகுந்த உற்சாகத்துடன் காணப்பட்டதுடன் தாமாகவே முன்வந்து சண்டைக்களத்தில் நின்ற போராளிகளுக்குப் பல்வேறு உதவிகளையும் செய்திருந்தனர்.

## அலம்பிலில் தரையிறக்கப்பட்ட படையினர் மீதும் கடும் தாக்குதல்

முல்லைத்தீவு முகாமிற்குள் சிக்கிக் கொண்ட தமது சகாக்களை மீட்கவென, முகாமிலிருந்து 10 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள அலம்பில் என்ற கடற்கரைக்கிராமத்தில் சிறிலங்கா விமானப்படை உலங்குவானூர்திகள் மூலம் தரையிறக்கப்பட்ட 300 வரையிலான விசேட பயிற்சி பெற்ற படைப்பிரிவினரும் விடுதலைப் புலிகளால் சுற்றிவளைக்கப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டனர். இப்பகுதியில்


தொடர்ச்சி 2 ம் பக்கம்...


புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# முல்லைச் சமரில் முதல்நாள் வீரச்சாவடைந்த மாவீரர்கள்

**இதுவரை கிடைக்கப்பெற்ற வீரச்சாவடைந்த போராளிகளின் விபரங்கள்**

- வீரவேங்கை இன்பா (நடராசபிள்ளை உசாநந்தினி, இடைக்காடு, அச்சுவேலி, யாழ்)
- வீரவேங்கை வதனி (ஜெகநாதன் சசிகலா, மாத்தளை, தற்போது வண்ணார்பண்ணை)
- வீரவேங்கை வேங்கையன் அல்லது வதனன் (சுப்பிரமணியம் கேதீஸ்வரன், தெல்லிப்பளை, யாழ்.)
- வீரவேங்கை எழில்செல்வன் அல்லது ரஞ்சித் (முத்துசிவராசா, புன்னாலைக்கட்டுவன், யாழ்.)
- வீரவேங்கை சூடாமணி அல்லது அன்சன் (நடராசா நடனகுமார், பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்.)
- வீரவேங்கை திருவிடைச்செல்வன் (வெங்கடாசலம் பாலசுப்பிரமணியம், குடத்தனை, யாழ்.)
- வீரவேங்கை ஜெயா (முத்துக்குமார் விஜயகுமாரி, மைலனை, சுன்னாகம், யாழ்.)
- வீரவேங்கை சமுத்திரன் (சண்முகசுந்தரம் சந்திரவாசா, தனங்கிளப்பு, சாவகச்சேரி, யாழ்.)
- வீரவேங்கை முத்தமிழன் (கிருஸ்ணபிள்ளை மனோகரன், கஸ்தூரியார் வீதி, யாழ்., தற்போது கலை பண்பாடு வீதி, முள்ளியவளை, முல்லைத்தீவு)
- வீரவேங்கை பரமதேவா (மருதன் சண்முகலிங்கம், கரவெட்டி, யாழ்.)
- வீரவேங்கை இம்ரான் அல்லது மகாலிங்கம் (தம்பிமுத்து மதியழகன், மயிலிட்டி, யாழ்.)
- வீரவேங்கை மன்மதன் (தேவசிகாமணி முகுந்தப்பிரியன், வல்வெட்டித்துறை, யாழ்.)
- வீரவேங்கை கோபி (தவநாதன் றொபேட் கோகுலசேகர், வசாவிளான், யாழ்.)
- வீரவேங்கை அறிவொளி (நடராசா மோகனராசா, நெடுந்தீவு, தற்போது பெரியதம்பனை, வவுனியா)
- வீரவேங்கை சிவகீதன் (மாயவன் மகேந்திரன், சுளிபுரம், செல்வபுரம், வவுனியா)
- வீரவேங்கை நல்லதம்பி (தங்கராசா வினாயகமூர்த்தி, மகிழமுனை, மட்டக்களப்பு)
- வீரவேங்கை மணிமாறன் (ராசப்பர் தேவசகாயம், அக்கறைப்பற்று, மட்டக்களப்பு)
- வீரவேங்கை விமலகுமார் (ஆனந்தன் உதயகுமார், ஏறாவூர், மட்டக்களப்பு)
- வீரவேங்கை ஆதிகரன் (பத்மன் பத்மசீலன், சின்னப்போடி, மட்டக்களப்பு)
- வீரவேங்கை நித்தி (மோகனதாஸ் தயாகுமார், பெரியபோடி, மட்டக்களப்பு)
- வீரவேங்கை அற்புதமேனன் (பொன்னையா சுப்பிரமணியம், சித்தாண்டி, மட்டக்களப்பு)
- வீரவேங்கை சிவராஜ் (குழந்தைவேல் உலகநாதன், கன்னங்குடா, மட்டக்களப்பு)



- வீரவேங்கை அக்கினோ (சிற்றம்பலம் செல்வராசா, துறைநிலாவணை, மட்டக்களப்பு)
- வீரவேங்கை மன்னன் (சிவகுணம் சிவரஞ்சன், களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு)
- வீரவேங்கை புயலவன் (கணேசபிள்ளை தமிழ்செல்வன், கும்புறுப்பிட்டி, திருமலை)
- வீரவேங்கை மகாதேவி (செல்வத்தம்பி ஜெயலக்சுமி, ஆனியவளை, தாளையடி, யாழ்.)
- வீரவேங்கை கிருபா (ராசையா கலாநிதி, கணேசபுரம், அளவெட்டி, யாழ்.)
- வீரவேங்கை தனபாலினி (நல்லையா சுபாந்தினி, சிவப்பிரகாச வீதி, யாழ்.)
- வீரவேங்கை கோதை (அருட்பிரகாசம் ராணி, யாழ்ப்பாணம்)
- வீரவேங்கை கலைமதி (குழந்தையன் சுதாயினி, உரும்பிராய் தெற்கு, யாழ்.)
- வீரவேங்கை தளிர் (நித்தியானந்தம் நிசாந்தினி, கொக்குவில், யாழ்.)
- வீரவேங்கை வேதினி (தர்மன் தர்சினி, மயிலிட்டி, யாழ்.)
- வீரவேங்கை இசைக்கோன் (பத்மநாதன் யோகேஸ்வரி, இருபாலை, யாழ்.)
- வீரவேங்கை தமிழேந்தி (குமாரசாமி சிவகேதீசன், உரும்பிராய் தெற்கு, யாழ்.)
- வீரவேங்கை மதிநிலவன் (கருநாதன் ராகுலன், துன்னாலை மேற்கு, கரவெட்டி, யாழ்.)
- வீரவேங்கை மகாசோதி (தம்பிமுத்து ரவீந்திரன், சாவகச்சேரி, தற்போது குமுழமுனை, முழங்காவில், மன்னார்)
- வீரவேங்கை மனவீரன் (முத்தையா தனபாலன், மானிப்பாய் வீதி, யாழ்.)
- வீரவேங்கை மதி (திருநாவுக்கரசு சிவசக்தி, வசாவிளான், யாழ்.)
- வீரவேங்கை ரமா (பாலசிங்கம் ராஜலோசினி, உருத்திரபுரம், கிளிநொச்சி)
- வீரவேங்கை நிதிபாலன் (அழகுப்போடி உமாசுதன், கன்னங்குடா, மட்டக்களப்பு)

## விடுதலை வரலாற்றில் மாபெரும்...

### அலம்பிலில் தரையிறக்கப்பட்ட...

நடைபெற்ற முதல்நாள் சண்டையிலேயே இவ்அணிக்குத் தலைமைதாங்கி வந்த லெப்.கேணல் பஸ்லி லாபீர், மற்றும் அவருக்கு அடுத்ததாக படைநடத்த அதிகாரம் பெற்றவரான மேஜர் ரணசிங்கா என்பவரும் கொல்லப்பட்டனர். அத்துடன் 70ற்கும் மேற்பட்ட படையினர் படுகாயமடைந்த நிலையில் சிறிலங்கா உலங்குவானூர்திகள் மூலம் திருகோணமலை கடற்படை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவ் உலங்கு வானூர்திகள் மீதும் தொடுக்கப்பட்ட தாக்குதலில் இரண்டு வானூர்திகள் முதல்நாளும் மறுநாள் ஒரு வானூர்தியும் படுசேதமடைந்ததாக கொழும்பிலுள்ள சர்வதேச செய்தி முகவர்கள் தெரிவித்திருந்தனர். இத்தாக்குதலில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் சிப்பாய் ஒருவர் "கடுமையான எதிர்ப்பை சந்தித்த எம்மால் அதனைச் சமாளித்து முன்னேற இயலவே இயலாது போனது" எனக் குறிப்பிட்டுள்ளதாக சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. இத்தாக்குதலின்போது கொழும்பில் தங்கியிருந்துவிட்டு தரையிறக்கப்பட்ட படையினருடன் வந்த முல்லைத்தீவு முகாம் பொறுப்பாளர் லோறன்ஸ் பெர்ணார்டோவும் கடுங்காய முற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிந்திக் கிடைத்த களமுனைச் செய்திகள்

- ✳ 1208 படையினர் பலி
- ✳ 241 போராளிகள் வீரமரணம்
- ✳ முகாம் தொடர்ந்தும் புலிகளின் பூரண கட்டுப்பாட்டில்

தலைமைப்பீடத்தில் இருந்து 22-07-96 அன்று கிடைக்கப்பெற்ற செய்திகளின் படி முல்லை முகாமில் இருந்த படையினர் முற்றுமுழுதாக அழிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இதில் 1208 படையினர் கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். 5ஆம் நாளாகவும் முகாம் தொடர்ந்தும் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. இவ் வரலாற்றுப் பெருமைமிகு சமரில் 68 பெண் போராளிகள் உட்பட 241 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

அரசியல் ரீதியாக பாதிப்பு ஏற்படும் என்ற பயத்தில், நூற்றுக்கணக்கான படையினரின் உடல்களை ஏற்றுக்கொள்ள சிறிலங்கா அரசு மறுத்துள்ளது. இதனால், பெரும்பாலான உடல்கள் அடையாளம் காணப்பட முடியாமல் சிதைந்துள்ளது எனக்கூறி 55 உடல்களை மட்டும் பெரும் சங்கடத்துடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்று, சிறிலங்கா அரசிடம் ஒப்படைத்துள்ளது. மிகுதி உடல்கள் கிளிநொச்சி அரச அதிபரிடமும், முல்லைத்தீவு அரச அதிபரிடமும் ஒப்படைக்கப்பட்டன.

தொடர்ந்தும் தரையிறக்கப்பட்ட படையினருடன் பெரும் மோதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பெரும் இழப்புக்களுடனும், சகல வளங்களையும் பயன்படுத்தி சிறிலங்காப் படையினர் முகாமிலிருந்து 2 கிலோமீற்றர் தொலைவில் கடல்வழி மூலமாக சுமார் 300 பராத் துருப்புக்களைத் தரையிறக்கியுள்ளது. இருப்பினும் இவர்களும் புலிவீரர்களின் முற்றுமுழுதான சுற்றிவளைப்புக்குள்ளாகினர். விடுதலைப் புலிகளின் கடும் மோட்டார் தாக்குதல்களுக்குள்ளாகியுள்ள நிலையில், இதுவரைக்கும் சிறிலங்காப் படைகளால் முகாமை நெருங்க முடியாத நிலையே தொடர்ந்து கொண்டிருக்கின்றது. மோதல்கள் தொடர்கின்றன. ✳

## 40 கடற்படையினருடன் 140 அடி நீளமுடைய 'ரணவிரு" கப்பல் மூழ்கடிப்பு

முகாமிற்கு, கடல்வழியாக மேலதிக துருப்புக்களைத் தரையிறக்க திருகோணமலையிலிருந்த சிறிலங்காக் கடற்படையினர் முதல்நாள் தொடக்கம் (18-07-96) பெரும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். எனினும் கடற்பரப்பில் ரோந்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் கடற்புலிகளால் இவ் முயற்சிகள் யாவும் முறியடிக்கப்பட்டன. இரண்டாம் நாள் (19-07-96) முல்லைக்கடற்பரப்பில் தரையிறக்கல் முயற்சிக்காகத் திருமலையிலிருந்து வந்த சிறிலங்காக் கடற்படையினரின் 7 கப்பல்களில் 'ரணவிரு' என்ற பீரங்கிக் கப்பல் 40 கடற்படையிருடன் கடற்புலிகளின் அதிவேகத் தாக்குதலால் மூழ்கடிக்கப்பட்டது.

தொடர்ந்தும் முல்லைக் கடற்பரப்பு கடற்புலிகளின் தீவிர கண்காணிப்பில் உள்ளது.

## 37 விசேட துருப்புக்களுடன் உலங்கு வானூர்தி சுட்டுவீழ்த்தப்பட்டது

அலம்பிலில் முற்றுகைக்குள்ளாகியுள்ள படையினருக்கு உதவி செய்ய விரைந்த சிறிலங்கா விமானப்படையின் உலங்கு வானூர்தியில் ஒன்று, படையினரை அப்பகுதியில் தரையிறக்க முயற்சித்தவேளையில் விடுதலைப்புலிகளின் விமான எதிர்ப்புப் படையணியால் சுட்டுவீழ்த்தப்பட்டது. இதன் போது அதில் பயணம் செய்த தலைமை அதிகாரி உட்பட 37 படையினரும் கொல்லப்பட்டனர். தமக்கு மிகவும் பரிச்சயமான அப்பிரதேசத்தில், விடுதலைப் புலிகளின் அதிரடிப் படையணிகள், தொடர் கடும் தாக்குதலை தரையிறக்கப்பட்ட படையினர் மீது மேற்கொண்டு வருகின்றனர். மேலதிக படையினரை வான்வழிமூலம் தரையிறக்கும் முயற்சி இவ் வானூர்தியின் இழப்பினால் பாதிக்கப்பட்டுள்ளது.

## இராணுவத்தின் உடல்கள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிப்பு

இம் முகாம் தாக்குதலின்போது கொல்லப்பட்ட 1000க்கும் மேற்பட்ட படையினரின் உடல்களில் கிட்டத்தட்ட 800 படையினரின் உடல்களை கட்டிட இடிபாடுகளுக்குள்ளும், காவலரண்களுக்குள்ளும் இருந்து மீட்ட புலிகள், அவற்றினை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக சிறிலங்கா அரசிடம் ஒப்படைக்க

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

# முல்லைத் தாக்குதல் உணர்த்தும் உண்மை!

யாழ்குடாநாட்டு ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து, "விடுதலைப் புலிகளைக் காட்டுக்குள் விரட்டிவிட்டோம்" எனச் சிறிலங்கா அரசு பிரச்சாரம் செய்த போது, தமிழீழத் தேசியத்தலைவர் மிகவும் அடக்கத்துடன் ஆனால் கண்டிப்புடன், "பெரும்படையைத் திரட்டி நிலத்தைக் கைப்பற்றுவது கடினமான காரியமல்ல. ஆனால் கைப்பற்றிய நிலத்தில் காலூன்றி நிற்பதுதான் கடினமான காரியம். உலகெங்கும் ஆக்கிரமிப்பாளர் எதிர்கொண்ட வரலாற்று உண்மையிது. இந்த வரலாற்று உண்மையைச் சிறிலங்கா இராணுவம் படித்துக் கொள்ள வெகுகாலம் எடுக்காது" எனக் கூறினார்.

தலைவரின் இவ் வார்த்தைகள், இலங்கைத்தீவின் இன்றைய வரலாறாக மாறத் தொடங்கிவிட்டது என அண்மையில் ஆசிரிய தலையங்கம் ஒன்றில் குறிப்பிட்டிருந்தோம். இம்முறை தலைவர் அவர்கள் கூறிய, "சிங்கள ஆக்கிரமிப்புப் படையினருக்குத் தமிழீழ மண்ணே புதைகுழிகளாகிவிடும்" என்ற தீர்க்கதரிசனம் முல்லை மண்ணில் நிறைவாகியிருப்பதைக் காண்கிறோம். ஒன்றல்ல, இரண்டல்ல ஆயிரக்கணக்கான சிங்கள இராணுவத்தினரின் சவக்குழிகளாக முல்லைத்தீவு இராணுவ முகாம் காட்சியளிக்கிறது.

அதுமட்டுமல்ல, விடுதலைப் புலிகளால் இனிமேல் கெரில்லாப் பாணியிலான தாக்குதலே செய்ய முடியும் என்றும் கூறினார்கள். ஆனால் இன்று, அதே விடுதலைப் புலிகளின் மரபுவழிச் சமருடன் தாக்குப் பிடிக்க முடியாது, அவர்களின் இரண்டு அணிகளின் தாக்குதலுக்கு முல்லை இராணுவ முகாமையும், அதிலிருந்த ஆயிரக்கணக்கான படையினரையும் நவீன ஆயுதங்களையும் சிறிலங்காப் படைகள் இழந்துள்ளன. அது மாத்திரமல்ல, அண்மைக்காலமாகத் தமிழீழத்தின் பல பாகங்களிலும், அதிலும் குறிப்பாகத் திருமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஈறாக இன்று முல்லைத்தீவு வரை சிறிலங்கா இராணுவம் பெரும் தோல்விகளைச் சந்தித்து வருகிறது. இவைகளை இராணுவச் செய்திகளுக்கான செய்தித்தணிக்கை மூலம் இருட்டடிப்புச் செய்தாலும், இறந்த இராணுவத்தினரின் உடல்கள் தென்பகுதிக்குச் செல்லும்போது சிங்கள மக்கள் உண்மை நிலையை உணரவே செய்கின்றனர்.

'இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு' எனக்கூறி ஆட்சிக்கு வந்த சந்திரிகா, பின்னர் இராணுவ மேலாதிக்கத்தில் நம்பிக்கை கொண்டு "சமாதானத்திற்கான போர்" என இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காண விளைந்தார். இதனால் மீண்டும் தமிழ் மக்கள் மேல் போர் திணிக்கப்பட்டது. இதனையே தலைவர் அவர்கள், "படைபலத்தை அடிப்படையாகக் கொண்டே சிறிலங்கா அரசானது தமிழரின் அரசியற் தலைவிதியை நிர்ணயிக்க முனைகின்றது" எனச் சிறிலங்கா அரசின் வலிகாமம் ஆக்கிரமிப்பின்போது தெரிவித்திருந்தார்.

இராணுவத்தீர்வின் மூலம் தமிழ் மக்களுக்கு அரசியல்தீர்வை வழங்கப்போவதாகக் கூறிய சந்திரிகா அரசுக்கு விடுதலைப் புலிகள், புதிய புதிய இராணுவத் தந்திரோபாயங்களூடாக தமிழர்களின் தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தியதுடன், இராணுவத்தீர்வினால் அரசுக்கு ஏற்படும் - ஏற்படப்போகும் பாரிய விளைவையும் தற்போது நடைபெற்ற முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதல் மூலம் தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளனர்.

வழமைபோல் இராணுவத் தோல்விகள் ஏற்படும் போதெல்லாம் சிறிலங்காப் படைகள், அப்பாவித் தமிழ் பொதுமக்களைப் பழிவாங்குகின்றது. 18-07-96 அன்று கிளிநொச்சி வைத்தியசாலை மீது எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டு 5 நோயாளிகளைப் பலியெடுத்து 16 பேரை காயப்படுத்தியுள்ளது. இதனைச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஜெனீவாவிலுள்ள தனது தலைமைக் காரியாலயத்திற்கும் தெரியப்படுத்தியுள்ளது.

இந்நேரத்தில் பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. நீல் ஜெராட் அவர்கள் எழுப்பிய, "அரசியல் தீர்வுக்கு வற்புறுத்த வேண்டிய சர்வதேச நாடுகள் இராணுவத்தீர்வை வளர்க்கக்கூடிய இராணுவப் பயிற்சிகள் - உதவிகளை அளித்தல் எவ்வகையான அரசியல் தீர்வுக்கு ஊக்கமளிக்கும்?" என்ற கேள்வியை, நாம் உலக சமாதானத்தில் மனிதாய நலனில் அக்கறையுள்ள ஒவ்வொரு தேச அரசுக்களுக்கும் எடுத்துக்கூறவேண்டும்.

தமிழீழ மக்கள், தமது உரிமைக்காக - பாதுகாப்புக்காக - அமைதியான வாழ்வுக்காக ஆயுதம் ஏந்திப் போராட வேண்டியவர்களாக உள்ளனர். அவர்களின் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினையல்ல, சர்வதேசப் பிரச்சினை - தமிழ், சிங்கள அரசுகளுக்கிடையிலான பிரச்சினை - காலனித்துவம் தோற்றுவித்த அடக்குமுறையின் தொடர்ச்சியாக எழுந்த நவீன காலனித்துவத்திற்குப் புதிய வடிவம் கொடுக்க முற்படும் பிரச்சினை. இதனால், தமிழ் மக்கள் 50,000க்கு மேல் உயிரிழந்ததுடன், பல லட்சம் பேர் அகதிகளாக்கப்பட்டும் உள்ளனர். தமிழ் மக்களின் இத்தகைய அவல வாழ்வைப் போக்க விடுதலைப் புலிகள் நடாத்தும் மகத்தான தியாகம் மிகுந்த விடுதலைப் போராட்டத்தை அங்கீகரித்து, தமிழீழ மக்களின் 'தேசியஇனம்' என்ற வரலாற்றுத் தகுதியை ஏற்று, அவர்களின் சுயநிர்ணய உரிமைக்கான வாழ்வை உறுதிப்படுத்தி, இலங்கைத்தீவில் சமாதானம் - அமைதி உருவாக உலகநாடுகள் உதவட்டும். இதற்கு வழிவிடக்கூடிய வகையில் சிறிலங்கா அரசும் உண்மை நிலையை உணர்ந்து ஆக்கிரமிப்புச் செய்த பகுதிகளிலிருந்து விலகி, விடுதலைப் புலிகளின் அமைதிக்கான அழைப்பை ஏற்கட்டும்.

இல்லையேல், இலங்கைத்தீவில் என்றுமே அமைதி இருக்காது. இதனையே முல்லைத் தாக்குதல் வெளிப்படுத்துகின்றது. ✷

20-07-96 ஈழநாதம் (தமிழீழம்) ஆசிரிய தலையங்கம்

# இராணுவத்தீர்வுக்கு மற்றுமொரு பலத்த அடி

புவியியல் ரீதியாகப் பாதுகாப்பான அமைவிடத்தைக் கொண்டதும், சுமார் 2000க்கும் மேற்பட்ட துருப்புக்களைக் கொண்டதுமான முல்லைத்தீவு இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளனர். இத்தாக்குதலின் இறுதி முடிவு இன்னமும் தெரியாத வேளையிலும் இத்தாக்குதலில் புலிகளின் கை ஓங்கியுள்ளமை ஊர்ஜிதப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. அதாவது, இராணுவ முகாமின் மையப்பகுதியைக் கைப்பற்றிய விடுதலைப் புலிகள், இராணுவத்திற்குப் பெரும் உயிர்ச் சேதத்தை ஏற்படுத்திய அதே வேளை, பெரும் இராணுவத் தளபாடங்களையும் கைப்பற்றியதன் மூலம் புலிகளின் முக்கிய இலக்கு ஒன்று முடிக்கப்பட்டுள்ளது. இது சிறிலங்கா அரசைப் பொறுத்தும் இராணுவத்தைப் பொறுத்தும் ஒருவகையில் அதிர்ச்சியினையும் புறத்தில் கலக்கத்தையும் நிச்சயம் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

யாழ். குடாநாட்டின் மீது பாரிய படையெடுப்புக்களை நடாத்திய சிறிலங்கா இராணுவம், புலிகளின் பெரும் பலம் அழிக்கப்பட்டு விட்டதாகவும் பெரும் பொய்ப்பிரச்சாரம் செய்தது. சிறிலங்காவின் பிரதிப் பாதுகாப்பமைச்சர் ஜெனரல் ரத்வத்த, புலிகளில் 70 விகிதமானோர் அழிக்கப்பட்டுவிட்டனர். மீதி 30 விகிதமானோர் இவ்வாண்டு இறுதிக்குள் அழிக்கப்பட்டு விடுவார்கள் எனத் தெரிவித்திருந்தார். ஆனால், தற்போது விடுதலைப் புலிகள் இயக்கம் மேற்கொண்ட முல்லைத்தீவு இராணுவ முகாம் மீதான தாக்குதல், சிறிலங்கா இராணுவத்தின் பொய்ப்பிரச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளதோடு, இலங்கையில் அரசியல், இராணுவ ரீதியில் புதிய பரிணாமங்களையும் உருவாக்கியுள்ளது எனத் துணிந்து கூறலாம்.

இதில், இராணுவ ரீதியில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதாவது, விடுதலைப் புலிகள் இயக்கமானது ஒரு பெரும் கெரில்லா போராட்ட இயக்கமாக இருப்பினும், அதனிடம் முல்லைத்தீவு இராணுவ முகாம் மீதான தாக்குதல் போன்ற ஒரு மரபுவழி முறையிலான தாக்குதலை நடத்தும் ஆற்றல் இன்னமும் உள்ளது என்பதாகும். அதாவது, புலிகள் இயக்கமானது யாழ். குடாநாட்டின் மீதான சிறிலங்காப் படையெடுப்பினால் பலவீனப்படவில்லை என்பதை வெளிக்காட்டும் ஒன்று எனவும் இத்தாக்குதலைக் கூறமுடியும். இரண்டாவதாக, விடுதலைப் புலிகளின் போரிடும் ஆற்றல் முன்னரைவிட தற்போது மிக வலுப்பட்டுள்ளது என்பதாகும். அதாவது, 2000 பேருக்கு மேற்பட்ட துருப்புக்கள் உள்ள இராணுவ முகாமின் மையப்பகுதியைச் சில மணிநேரத் தாக்குதலில் கைப்பற்றியது, புலிகளின் போரிடும் ஆற்றலுக்கும் போர்த் திறனுக்கும் சிறப்பான எடுத்துக்காட்டாகவே உள்ளது எனலாம்.

இவை ஒருபுறம் இருக்க, முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து புலிகள் கைப்பற்றிய இராணுவத் தளபாடங்கள் எதிர்காலப் போர்முனையைப் புதியதொரு கட்டத்திற்கு நகர்த்திச் செல்லக்கூடிய தன்மையுடையதாக இன்று இருக்கின்றது என்றும் எதிர்பார்க்கலாம். அதாவது, 1993ஆம் ஆண்டு பூநகரிப் படைத்தளத்தின் மீதான தாக்குதல் கடற்புலிகளை வலிவடையச் செய்தமை போன்று, முல்லைத்தீவு முகாம் தாக்குதல் புலிகளின் இராணுவ ஆற்றலை வலுவடையச் செய்யக்கூடியது எனலாம். அதாவது, முல்லையில் கைப்பற்றப்பட்ட 'ஆட்டிலறி' எறிகணைப் பீரங்கிகள், அடுத்த போர்க்களத்தில் பலமான பாத்திரத்தை வகிக்கக்கூடும். இவ்வாறான இராணுவ வெற்றிகள் புலிகளால் பெறப்பட்ட அதேவேளை சிறிலங்கா அரசுக்கு, இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு என்ற அணுகுமுறையைப் பெரும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது. யாழ். குடாநாட்டுப் படையெடுப்புக்கள் மூலம், இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வைக் கட்டிவிடமுடியும் என்று சந்திரிகா அரசு முழுமையாக நம்பியது. ஆனால், அண்மையில் வடக்கு-கிழக்கில் புலிகள் நடாத்திய தொடர் தாக்குதல்கள் இதனைக் கேள்விக்குறியாக ஆக்கியுள்ளது. இதற்கு மேலாகப் புலிகளின் தாக்குதலானது, இனப்பிரச்சினைக்குப் புலிகளை தள்ளிவைத்து தீர்வு எதையும் கண்டுவிடமுடியாது என்பதை ஓரளவுக்கு உறுதிப்படுத்தியுள்ளது.

சுருக்கமாகக் கூறுவதானால், யாழ். படையெடுப்பின் மூலம் சந்திரிகா அரசு ஈட்டிய அரசியல் இலாபங்கள் குறித்த எதிர்பார்ப்புக்கள் பலவற்றையும் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது எனலாம். இந்த நிலையில், முல்லைத்தீவு இராணுவ முகாம் மீதான புலிகளின் தாக்குதலானது, இராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பலமான படிப்பினைகளை வழங்கியுள்ளது என்றே கூடிமுடியும். கடந்த கால அனுபவங்களைப் புரிந்துகொள்ள முடியாதவர்களுக்கு, இவ்வாறான அனுபவங்களே புரியவைக்கும். இதையும் புரிந்துகொள்ளத் தவறின், மேலும் மேலும் இவை போன்றவற்றை அனுபவிக்க வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. ✷

# யுத்தம் சரணம் ...

அவையில் மந்திரியாக இருந்த காமினி ஜெயசூரியாவைப் பலருக்கு ஞாபகமிருக்கும். இந்திய – இலங்கை உடன்பாட்டை எதிர்த்துத் தனது அமைச்சர் பதவியை உதறித் தள்ளியவர்.

அதன்பின், "சிங்கள ஆராக்சக சங்விதானய" என்ற அரசியல் அமைப்பொன்றைத் தோற்றுவித்து, சிங்கள பௌத்தத்தை நாடு முழுவதும் தூக்கிப்பிடித்து வருபவர்.

சனாதிபதி சந்திரிகாவின் அரசியல் பரவலாக்கல் யோசனைகளைக் கடுமையாக விமர்சித்து அதற்கு எதிராகப் பேசியும் எழுதியும் வருபவர்.

இந்தச் சிங்கள பௌத்த வெறியருக்கு அண்மையில் அஸ்க்கிரிய புத்தமதபீடமும் மல்வத்தை புத்தமதபீடமும் ஒருங்கிணைந்து பட்டங்கள் அளித்து கௌரவித்திருக்கின்றன. காமினி ஜயசூரியா புத்த சாசனத்தின் மேம்பாட்டுக்கும் சிங்கள இனத்துக்கும் ஆற்றிய அளப்பரிய சேவைக்காக அஸ்க்கிரிய புத்தமதபீடாதிபதி "சாசன பந்து விஷகரத ஜனரஞ்சன" என்ற பட்டத்தை வழங்கியுள்ளார். அஸ்க்கிரிய புத்தமத பீடாதிபதி வண. பலிப்பான சிறிசந்தானந்த மஹா நாயக்க தேரர் போலவே மல்வத்தை புத்தமத பீடாதிபதி வண. நம்புக்வல சிறி விப்பசி மஹாநாயக்க தேரர் காமினி ஜெயசூரியாவுக்கு "தேசாபிமானி" என்ற பட்டத்தை வழங்கியுள்ளார்.

வண. நப்புக்வல சிறிவிப்பசி மஹாநாயக்க தேரர் பேசும்போது, அநகாரிக தர்மபாலாவின் வாழ்க்கை காமினி ஜெயசூரியாவுக்கு முன்மாதிரியாக இருந்ததாகக் குறிப்பிட்டார்.

இன்னொரு தேரர் வண. பண்டித அகுரத்திய அமரவம்ச பேசும்போது, சிங்கள மக்களுக்கு எதிராகத் தீய சக்திகள் தலையெடுப்பதாகவும் அப்படியான சக்திகளுக்கு எதிராகக் காமினி ஜெயசூரியா தனது மந்திரிப்பதவியை உதறித்தள்ளிவிட்டு போராடி வருவதாகக் குறிப்பிட்டார். காமினி ஜெயசூரியா ஏனைய அரசியல்வாதிகளுக்கு ஒரு உதாரண புருசராக விளங்குவதாகவும் குறிப்பிட்டார்.

பட்டங்கள் வழங்கிக் கௌரவித்த புத்தமத பீடாதிபதிகளுக்கு நன்றி தெரிவித்துப் பேசிய காமினி ஜெயசூரியா, இந்த வைபவத்தைப் பார்க்கத் தனது தாயார் இருந்திருக்க வேண்டும் என்றும் அவர்தான், தான் நான்கு ஐந்து வயதாக இருக்கும் போதே சிறிலங்கா (அப்போது இலங்கை) ஒரு புத்தமத நாடு எனச் சொல்லிக் கொடுத்ததாகவும் புத்தமதத்தைப் பற்றியும் புத்தமத அரசர்களான தேவநம்பிய தீசன், கைமுனு பற்றியும் கதைவடிவில் சொல்லிக் கொடுத்ததாகவும் சொன்னார்.

இந்த மதபீடாதிபதிகள் தூக்கிப்பிடிக்கும் மதவாதமும் இனவாதமும் பரவாயில்லை என்று சொல்லும் அளவுக்கு, களனிப் பல்கலைக் கழக உபவேந்தராக இருக்கும் வண. டாக்டர் இராகுல தேரர் புத்தமதக் கோட்பாட்டின் பிரகாரம் "பயங்கரவாதத்தை முறியடிக்க ஆயுதம் ஏந்திப் போராடுவது" முற்றிலும் சரியென்று கூறியிருக்கிறார்.

புத்த மதம் யுத்தம் செய்வதைக் கண்டிக்கிறது. "தர்ம யுத்தத்தை"யும் அது ஆதரிக்கவில்லை. புத்தரின் போதனைப்படி யுத்தத்தில் தர்மம் இருக்க முடியாது. இரண்டும் ஒன்றோடு ஒன்று நேர் எதிர் முரண்பட்டவையாகும்.

ஆனால், இராகுல தேரர் அடித்துச் சொல்கிறார் புத்த மதம் போரைத் தடுக்கவில்லை என்று. அதாவது "அதர்மம் சரணம் கச்சாமி" என்கிறார். அஸ்க்கிரிய புத்தமத பீடாதிபதிகள் இனமத வெறியனான காமினி ஜெயசூரியாவுக்குப் பட்டங்கள் அளித்துக் கௌரவிக்கின்றனர்.

கருணைவடிவான புத்தரின் சீடர்கள், "யுத்தம் சரணம் கச்சாமி", "அதர்மம் சரணம் கச்சாமி" என்று போர் முரசு கொட்டும்போது, மற்ற வர்களைப்பற்றி சொல்லியா தெரிய வேண்டும்.. செச்சினியாவின் உருசிய அரசியல்வாதிகளும் இராணுவத் தளபதிகளும் படித்துக்கொண்ட பாடத்தை, சிறிலங்கா அரசியல்வாதிகளும் இராணுவத் தளபதிகளும் கஸ்ரப்பட்டு ஒருநாளைக்குப் படிக்கத்தான் போகிறார்கள். அந்த நாள் அதிக தூரத்தில் இல்லை. ✷

# விடுதலை வரலாற்றில் மாபெரும்...

## இராணுவத்தின் உடல்கள் ...

ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். இதனைப் பற்றி கிளிநொச்சியில் இருந்த செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிக்கும் அறிவித்திருந்தனர். எனினும் மிகவும் பழுதடைந்து அடையாளம் காணப்பட முடியாத நிலையில் இருந்த 300க்கும் அதிகமான உடல்கள் முகாம் சுற்றாடலிலேயே புலிவீரர்களால் தகனம் செய்யப்பட்டன. 21-07-96 அன்று ஞாயிற்றுக்கிழமை 441 படையினரின் உடல்கள் விடுதலைப் புலிகளால் கிளிநொச்சிக்கு எடுத்துவரப்பட்டு அங்கு வைத்து செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியிடம் ஒப்படைக்கப்பட்டன. விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர், இச்சடலங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியிடம் ஒப்படைத்தார். இருப்பினும் அடையாளம் காணக்கூடிய நிலையில் இரு 55 உடல்களையே சிறிலங் அரசிடம் ஒப்படைப்பதற்க சர்வதேச செஞ்சிலுவைச் சங் பிரதிநிதிகள் பெற் க்கொண்டனர். மீதி 3 உடல்களையும் கிளிந ச்சியிலேயே தகனம் செய்யுமா கிளிநொச்சி அரச அதிபரி ஒப்படைத்திருந்தனர். தொ ர்ந்தும் முகாம் பகுதிகளி உள்ள படையினரின் உட ளை மீட்கும் பணியில் புலி ர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## நோயாளிகளின்மேல் பழிவாங்கல்

வழமைபோல் இராணுவம் தோல்விகளைச் சந்திக்கத் தொடங்கியதும் தமது முகாம்களிலிருந்து பொதுமக்கள் மீது குண்டு வீச்சு, எறிகணை வீச்சு தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனர்.

ஆனைமிறவிலிருந்து கிளிநொச்சி நகரப்பகுதி, வைத்தியசாலைப் பகுதிகள் மீது கண்மூடித்தனமான எறிகணை வீச்சை நடாத்தியது. கிளிநொச்சி வைத்தியசாலையில் வீழ்ந்து வெடித்த எறிகணையால் 5 பொதுமக்கள் உயிரிழந்து, 16 போர் காயமுற்றுள்ளனர். சிறிலங்கா செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சித் தலைவர் திரு. விநாயகமூர்த்தியும் காயப்பட்டவர்களில் அடங்குவர். இன்னொரு எறிகணை, பிரான்சிய எல்லைகளின்றிச் சேவை செய்யும் (M.S.F.) வைத்தியர்கள் அமைப்பைச் சார்ந்தவர்களின் உத்தியோகபூர்வ குடியிருப்பு வளவுக்குள் விழுந்து வெடித்த போதிலும் தெய்வாதீனமாக யாருக்கும் காயமேற்படவில்லை. மேலும் தாண்டிக்குளத்தில் கொழும்புக்குச் செல்லவென காத்திருந்த பயணிகள் மீதும் துப்பாக்கிச் சூட்டை சிறிலங் இராணுவம் நடாத்தியுள்ள ஆயினும் பயணிகள் எவருக் காயமேற்படவில்லை எ செய்திகள் தெரிவிக்கின்றன. பழிவாங்கும் நோக்குடனே போ விதிகளை மீறி தமிழ்மக்க மீது சிறிலங்கா இராணுவத்த நடாத்தப்பட்ட தாக்குதல்க குறித்து சர்வதேச செஞ்சி வைச் சங்கம் ஜெனிவாவி அமைந்துள்ள தனது தல மையகத்திற்கும், சிறிலங்கா பாதுகாப்பமைச்சின் கவ த்திற்கும் கொண்டுவந்துள்ளது.

## இராணுவத் தீர்வுக்குக் கிடைத்த பலத்த அடி

இம் மகத்தான இராணுவ வெற்றி குறித்து கருத்து வெளியிட்ட விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினரும் சர்வதேச செயலக பொறுப்பாளருமான திரு. லோறன்ஸ் திலகர் கருத்துத் தெரிவிக்கையில், சிறிலங்கா அரசின் இராணுவ முயற்சிக்குக் கிடைத்துள்ள பலத்த அடி எனவும் இவ்வாறான தாக்குதல்கள் இராணுவத்தீர்வினால் இனப்பிரச்சினைக்குத் தீர் காணமுடியாது என்ற உண்மை யையும், இராணுவத் தீர் முயற்சியால் அரசு மிகுந்த நெருக்கடிக்குள்ளாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## 13 வருட காலத்து மிகப்பெரிய தாக்குதல்

இத்தாக்குதல் குறித்து கருத்து வெளியிட்டுள்ள பல சர்வதேச செய்தி முகவர் நிறுவனங்கள், 1983 ஆடிப் படுகொலைக்குப் பின் போராட்டம் உக்கிரமடைந்த 13 ஆண்டுகால விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஓர் மிகப் பெரிய தாக்குதல் என வர்ணித்துள்ளன. 1000க்கும் அதிகமான படையினர் இழப்பையும் பல நூற்றுக்கணக்கான படையினர் காயமடைந்தும் உள்ள சிறிலங்கா இராணுவத்தின் இழப்புக்களினால், ஒரு தாக்குதலிலேயே அதிக எண்ணிக்கை ஆளணி இழப்பை சிறிலங்கா சந்தித்துள்ளதாக இச் சர்வதேச செய்தி நிறுவனங்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கின்றன. சிறிலங்கா இராணுவம் முல்லைத்தீவு ஆயுதக் கிடங்கை விடுதலைப் புலிகளிடம் முற்றாக இழந்துள்ளமையால் விடுதலைப் புலிகளின் ஆயுத பலம் மேலும் பன்மடங்காக அதிகரித்துள்ளதாக இராணுவ ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். "தங்களை வெல்ல முடியா தென்பதையும், மிகச்சிறந்த, குறிப்பிடத்தக்க தாக்குதல் படையணியாக இருப்பதையும் இத்தாக்குதல் மூலம் மீண்டும் விடுதலைப் புலிகள் நிரூபித்துள்ளனர்" என, 'ரைம்ஸ் ஒப் இந்தியா'வின் பாதுகாப்புத்துறைச் செய்தியாளர் தினேஸ் குமார், 21-07-96 அன்று பி.பி.சி உலகசேவைக்கு அளித்த செவ்வியில் குறிப்பிட்டிருந்தார்.

# கிழக்கில் "பொங்கும் கடல் அலை" இராணுவ நடவடிக்கை

✷ விடுதலைப் புலிகளால் வெற்றிகரமாக முறியடிப்பு
✷ 10க் கும் மேற்பட்ட படையினர் பலி,
✷ 18 இராணுவத்தினர் காயம்

"பொங்கும் கடல் அலை" எனக் குறியீடு இடப்பட்ட இராணுவ நடவடிக்கை-1 இன் மூலம் கிழக்கில் அப்பாவிப் பொதுமக்களை கடந்த 10ம் திகதி முதல் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கிய சிறிலங்கா இராணுவம் மூன்று தினங்களின் பின் அதனைத் தற்காலிகமாக நிறுத்தியது. மீளவும் 17ம் திகதி "பொங்கும் கடல் அலை" இராணுவ நடவடிக்கை-2 ஐ தொடர சிறிலங்கா இராணுவம் முயற்சித்தபொழுது விடுதலைப் புலிகள் அதை வெற்றிகரமாக முறியடித்ததினால் பலத்த இழப்புக்களுடன் இந்நடவடிக்கையை நிறுத்தியுள்ளனர்.

இத்தாக்குதல்களில் 10க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டு 18 பேர் காயமடைந்தனர். தமக்குக் கடுஞ்சேதங்கள் ஏற்பட்டதை சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் ஏற்றுக்கொண்டுள்ளன. மட்டக்களப்பிலிருந்து 55 கிலோமீற்றரிலுள்ள வாகரை தமிழ்க் கிராமத்தைக் கைப்பற்றவென சிறிலங்கா இராணுவம் திட்டமிட்டுத் தொடங்கிய இவ் இன அழிப்புத் தாக்குதல்கள் முறியடிக்கப்பட்ட போதிலும் பொதுமக்கள் வாழ்வு கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பெண்கள், குழந்தைகள் உட்பட 1600 தமிழ் மக்கள் இந்நடவடிக்கையால் இடம்பெயர்ந்துள்ளனர்.

இராணுவ நடவடிக்கை தொடங்கிய நாளன்றே இராணுவத்தின் முன்னேற்றத்தை எதிர்த்து கடுமையாகித் தாக்கி அவர்களின் முன்னேற்றத்தை தடுத்த நிறுத்திய சண்டையில் 3 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

லெப். மதன் (கந்தபோடி சபாரட்ணம், மட்டக்களப்பு)

2ஆம் லெப். குணமூர்த்தி (வில்வலிங்கம் நேசராசா, மட்டக்களப்பு)

வீரவேங்கை தூரன் (தம்பிமுத்து சந்திரகுமார், மட்டக்களப்பு)

இவர்களுக்கு எமது வீர வணக்கங்கள்.

## ஆறு பொதுமக்கள் பலி

வாகரையைக் கைப்பற்றும் நோக்குடன் சிறிலங்காப் படைகள் நடாத்திய இவ் இராணுவ நடவடிக்கையின்போது 6 தமிழ் பொதுமக்களை இராணுவம் சுட்டுக்கொன்றுள்ளது. எண்மர் காயப்படுத்தப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் மூவர் மட்டுமே அடையாளம் காணப்படக்கூடிய நிலையில் இருந்தனர்.

திரு. கே. கதிர்காமத்தம்பி, திரு. கே. செல்லத்தம்பி (45), திரு. ஏ. ஜெகதீஸ்வரன் (18) மற்ற மூவரின் உடல்களும் இராணுவத்தினரால் அடையாளம் காணப்படுமுன்னரே கொண்டு செல்லப்பட்டுவிட்டன. ✷

# யுத்தம் சரணம் கச்சாமி!



# அதர்மம் சரணம் கச்சாமி!!!

> புத்த மதம் யுத்தம் செய்வதைக் கண்டிக்கிறது. "தர்ம யுத்தத்தையும்" அது ஆதரிக்கவில்லை. புத்தரின் போதனைப்படி யுத்தத்தில் தர்மம் இருக்கமுடியாது. இரண்டும் ஒன்றோடு ஒன்று நேர் எதிர் முரண்பட்டவையாகும்.

பயங்கரவாதிகள்
கொள்ளைக்காரர்கள்
காட்டுமிராண்டிகள்
கள்ளக் கடத்தல்காரர்கள்
பேச்சுவார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லை.

பிள்ளைப் பூச்சியை நசுக்கிவிடுவதுபோல, இவர்களை ஒரு வாரத்தில் நசுக்கிவிடுவோம்.

இப்படி யார் யாரை அர்ச்சிக்கிறார்கள்? எல்லாம் கேட்ட அர்ச்சனையாகவும், கேட்டுப் பழகிப்போன வசை மொழிதான் என்றும் நீங்கள் நினைக்கக்கூடும்.

முன்னாள் தேசிய பாதுகாப்பமந்திரிகளான அத்துலத் முதலி, இரஞ்சன் விஜயரத்தினா அல்லது இந்நாள் சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா, துணைப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த இவர்களில் யாரவது ஒருவர் விடுதலைப் புலிகளை விமர்சிப்பதாக நீங்கள் எண்ணக்கூடும்.

மேற்கண்ட வார்த்தைகளையும், வசை மொழிகளையும் அள்ளி வீசியவர் சாமானிய மனிதரோ அல்லது அரசியல்வாதியோ அல்ல.

உருசிய நாட்டின் மாண்புமிகு சனாதிபதி பொரிஸ் யெல்சன்தான் இப்படிப் பேசிய பெரிய மனிதராவர்.

ஆதிக்கக்காரர்களும், ஆணவக்காரர்களும், அவர்கள் உலகின் எந்தப் பாகத்தில் இருந்தாலும், இப்படித்தான் பேசக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

ஆன காரணத்தினால்தான் அத்துலத் முதலி, இரஞ்சன் விஜயரத்தினா, சனாதிபதி சந்திரிகா, அனுருத்த ரத்வத்த போன்றவரின் பேச்சுக்கும் பொரிஸ் யெல்சன் பேச்சுக்கும் துளியளவு வித்தியாசம்கூட இல்லாமல் இருக்கிறது.

1991இல் அன்றைய சோவியத் ஒன்றியம், உலகத்தின் இரண்டு பெரிய வல்லரசுகளில் ஒன்று. சூரியர், சந்திரர் இருக்கும் மட்டும் பூவுலகில் நிலைத்திருக்கும் என்று பலராலும் எண்ணப்பட்ட பொதுவுடமையின் சொர்க்க பூமி, அஸ்த்தமனம் அடைந்ததையடுத்து, செச்சினியா குடியரசு சுதந்திரப் பிரகடனம் செய்து, தன்னை உருசியக் குடியரசில் இருந்து வெட்டிக் கொண்டது.

செச்சினியா குடியரசின் சனாதிபதியாக ஆப்கானிஸ்தான் போரில் போரிட்டு புகழ்பெற்றிருந்த விமானப்படைத் தளபதி Dzhokchar Dudayev பதவியேற்றார்.

செச்சினியா கையளவு நாடு. உருசியாவின் தென் எல்லையான காக்கேசிய மலைத்தொடரை அண்டி இருக்கும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடு.

இந்த மலைத்தொடருக்கு அப்பால் சோவியத் ஒன்றியம் கலைந்தபோது, தங்களைச் சுதந்திர குடியரசுகளாகப் பிரகடனம் செய்த யோர்சியா, ஆர்மேனியா, அசெர்பச்சான் நாடுகள் இருக்கின்றன. இந்த நாடுகளில் தென் எல்லையில் இஸ்லாமிய குடியரசுகளான ஈரான், துருக்கி இருக்கின்றன.

காக்கேசிய மலைத்தொடர் எல்லை ஊடுருவப்பட்டால், உருசியாவின் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படும்.

அதுமட்டுமல்ல, உருசியக் குடியரசில் உள்ள 89 பிரதேசங்களும் நூற்றுக்கு மேலான தேசிய இனங்களும் செச்சினியாவை முன்னுதாரணமாக வைத்துக்கொண்டு தனிவழி நடக்க ஆரம்பித்து விடுவார்கள்.

இவற்றை மனதில் இருத்தித்தான், பொரிஸ் யெல்சன் 1994ம் ஆண்டு மார்கழி மாதத்தில் செச்சினியக் குடியரசுக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்தார்.

அந்தச் சமயம் செச்சினியாவின் தலைவர்களுக்கு எதிராக யெல்சன் ஏவிய வார்த்தை அம்புகளைத்தான் ஆரம்பத்தில் தந்திருந்தேன்.

ஒரு வாரத்தில் செச்சினியாவை வெற்றி கொண்டு அதன் தலைவர் துதாயேவை உயிரோடு பிடித்து, சுட்டுத்தள்ளிவிடப் போவதாகச் சபதம் செய்த யெல்சன், கடந்த மாதம் செச்சினியாத் தலைவர்களுடன் அதே பயங்கரவாதிகளுடன் சமாதான ஒப்பந்தம் ஒன்றை எழுதியுள்ளார். ஒரு வாரத்தில் செச்சினியாவை வெற்றி கொண்டு விடுவதாகச் சபதம் செய்தாலும், மொத்தம் 18 மாதங்களுக்குப் பின்னரும் உருசிய இராணுவத்தால் செச்சினியாவை வெற்றிகொள்ள முடியவில்லை, அடிபணிய வைக்கவும் இயலவில்லை.

இந்தப் 18 மாதங்களில் உருசியாவின் இராணுவமும் விமானப் படையும் பலத்த ஆள், ஆயுத இழப்புக்களைச் சந்தித்துள்ளது. இறந்த இராணுவத்தினரின் உடல்கள் மொஸ்கோவுக்கு தினம் வந்துகொண்டே இருந்தன. செச்சினியாவுக்கு எதிரான போருக்கு உருசிய மக்களிடம் இருந்து பலத்த எதிர்ப்புத் தோன்றியது. குறிப்பாக உருசிய நாட்டுத் தாய்மார்கள் ஆப்கானிஸ்தானில் வீணாக மாண்டு மடிந்த தங்கள் பிள்ளைகளைப் போலவே, இப்போது செச்சினியாவில் ஒரு விரும்பத்தகாத வேண்டப்படாத போரில் தங்கள் பிள்ளைகள் வீணே இறந்துபடுகிறார்கள் என நினைத்தார்கள்.

செச்சினியாவிற்கு எதிரான வெல்ல முடியாத போர் சனாதிபதி யெல்சனின் வெற்றியைக் கேள்விக்குறியாக்கியது. செச்சினியாவிலிருந்து உருசியத் துருப்புக்கள் வெளியேற வேண்டுமென வற்புறுத்திய முன்நாள் இராணுவத் தளபதி அலக்சாண்டர் லெபெட் இந்த மாதம் தொடக்கத்தில் நடந்த சனாதிபதித் தேர்தலில் 15 விழுக்காடு வாக்குகளைப் பெற்று மூன்றாவது இடத்தைப் பிடித்துக்கொண்டார். கடந்த யூலை 2ம் நாள் நடைபெற்ற இரண்டாவது கட்ட வாக்களிப்பில் வெற்றி பெற்ற யெல்சனுக்கு இவரது ஆதரவு தேவைப்படுகின்றது.



அலக்சாண்டர் லெப்பட்டின் ஆதரவுக்குப் பிரதி உபகாரமாக யெல்சன் லெப்பட்டை தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமனம் செய்துள்ளார்.

இது காலவரை, செச்சினியாவுக்கு எதிரான போரை உருசிய நாட்டின் தேசிய பாதுகாப்புச் சபையைச் சார்ந்த கடும் போக்காளர்களே எந்த விட்டுக்கொடுப்பும் இல்லாமல் முன் எடுத்து வந்தார்கள்.

இதில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் தளபதி Korzhkov, சமஷ்டிப் பாதுகாப்பு சேவைத் தலைவர் Mikhail. Barsukov, துணைப் பிரதமர் Oleg Soskovets, நீண்ட நாளைய பாதுகாப்பமைச்சர் Pavel Grachev முக்கியமானவர்கள்.

இந்த நால்வரும் யெல்சனால் இப்போது பதவி பறிக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

செச்சினியாவில் யுத்தம் நின்றுவிட்டது. செச்சினியத் தலைவர்களுக்கும் உருசியாவுக்கும் இடையில் போர் நிறுத்த உடன்பாடு காணப்பட்டு சமாதான உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டுவிட்டது. ஆனால், பிரச்சனைக்கு இன்னும் அரசியல் தீர்வு காணப்படவில்லை.

ஒன்றுமட்டும் நிச்சயம். செச்சினியா மீது உருசியா ஆதிக்கம் செலுத்தும் எந்தத் தீர்வையும் செச்சினியத் தலைவர்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. பாதுகாப்பு, வெளிவிவகாரம், தொலைத்தொடர்பு, பொது நாணயம் போன்ற துறைகளை உருசிய மத்திய குடியரசுக்குக் கையளித்து ஏனைய அரசியல் பொருளாதாரம் சம்பந்தமான சகல அதிகாரங்களையும் செச்சினியக் குடியரசு தன் கைகளில் வைத்திருக்கும்.

மொத்தம் 12 இலட்சம் மக்களை (இதில் மூன்றிலொன்று உருசிய இனத்தவர்கள்)க் கொண்ட செச்சினியா எமக்குச் சொல்லித்தரும் அரசியல் பாடம் என்ன?

ஒரு நாடும் அது எவ்வளவு சின்னம் சிறிய நாடாக இருந்தாலும்கூட, அதன் மக்களும் எண்ணிக்கையில் எவ்வளவு சிறிய தொகையினராக இருந்தாலும் கூட, சுதந்திரமாக வாழ முடிவு செய்துவிட்டால் அந்த முடிவை எந்தப் பெரிய வல்லரசும் துப்பாக்கி முனையில் ஆயுதப் பலத்தால் அந்த மக்களையும் நாட்டையும் அடக்கி ஆழ முடியாது என்ற பாடமாகும்.

இந்தப் பாடத்தைத்தான் சிறிலங்காவின் சிங்கள அரசியல்வாதிகளும் இராணுவத் தளபதிகளும் படிக்கப் பிடிவாதமாக மறுத்து வருகிறார்கள்.

தமிழீழ மக்களும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சிங்கள பௌத்த ஏகாதிபத்திய வாதிகளிடம் கேட்பதெல்லாம், "எங்களை எங்கள்பாட்டில் விடுங்கள்" என்பதாகும். வேறுவிதமாகச் சொல்வதென்றால், 'நீங்களும் வாழுங்கள். எங்களையும் வாழவிடுங்கள்" என்பதாகும்.

பதினெட்டு மாதப் போருக்குப் பின் உருசியத் தலைவர்கள் படித்துக்கொண்ட அரசியல் பாடத்தை மட்டுமல்ல, இராணுவப் படிப்பினையும் பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பின்னரும் சிறிலங்காவின் ஆட்சியாளர்கள் படித்துக்கொள்ளவில்லை. படிப்பார்கள் என்ற அறிகுறியை சிங்கள அரசியல்வாதிகளிடம் மட்டுமல்ல, பெரும்பாலான சிங்கள மக்களிடத்தும் காணோம். செச்சினியாவுக்கெதிரான உருசியாவின் ஆதிக்கப் போரை உருசியத் தாய்மார்கள் எதிர்த்தார்கள். தமிழீழத்துக்கெதிரான சிறிலங்காவின் ஆதிக்கப் போரைச் சிங்களத் தாய்மார்கள் எதிர்ப்பதாக இல்லை. போரை எதிர்க்காதது மட்டுமல்ல, அந்தப் போருக்குச் சிங்கள இனம் தூபதீபம் காட்டி மேலும் அதை முடுக்கி விடுகிறது.

இந்தத் திருப்பணியில் புத்தரின் சீடர்கள் கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு முன்னணியில் நிற்கிறார்கள்.

'புத்தம் சரணம் கச்சாமி" என்று செபிக்க வேண்டிய வாய்கள், "யுத்தம் சரணம் கச்சாமி" என்று போர்ப்பறை அறைகின்றன. "தர்மம் சரணம் கச்சாமி" என்று உச்சாடனம் செய்யவேண்டிய வாய்கள், "அதர்மம் சரணம் கச்சாமி" என்று போர் முரசு கொட்டுகின்றன. ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அமைச்சர்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

**- நக்கீரன் -**

# பகலும் இரவாகிவிட்டநாடு!பகலும் இரவாகிவிட்டநாடு!

-வே. பாலகுமாரன்-

அடேயப்பா! எப்படிப்பட்ட வெற்றி அது? 'யாப்பபட்டுண' தாம்பாளத்தில் வைக்கப்பட்டுச் சிங்களத்தின் மகாராணி – நவீன விகாரமகாதேவி – சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவிடம், சிங்களப்படைகளின் சேனாதிபதியால் வழங்கப்பட்டுவிட்டது. 2500 ஆண்டுகால வரலாற்றின் புதிய சாதனை – சிங்களவரின் இனப்பெருமை – சிங்கக்கொடியாக, பனைவளரும் பூமியிலே பறக்கிறது. கிடுகு வேலிக்குள் எட்டிப்பார்க்கும் தமிழ் மக்கள் சிங்கள அரசின் பக்கம். புலிகள் வன்னிக்குத் தப்பியோட்டம்–இனியென்ன? விண்ணிற்கும், மண்ணிற்கும் சிங்களம் குதிக்கவேண்டியவேளை: வெற்றிக்களிப்பில் மருமகளையும், மாமனையும் உச்சியில் தூக்கிவைத்துக்கொண்டாடும் நேரமல்லவா இது? முப்படைகளின் பிரதம தளகர்த்தரான சந்திரிகா அம்மையாரின் வெற்றிக் கதையிது. ஆனால், சிங்களத்தின் கதை எப்படியிருக்கிறது?

வரலாற்றுக் காலப் பகையை வென்றுவிட்டதாகக் கூறிக்கொள்ளும் சிங்களம், வெற்றிக் களிப்பிற் திளைப்பதாகத் தெரியவில்லை. வாணவேடிக்கைகளும், வரவேற்புகளும் அங்கு காணப்படவில்லை. 'கட்அவுட்' களும், களியாட்டங்களும் கூடத் தென்படவில்லை: வாழ்த்துக்கள், வரவேற்புப் பாக்கள் எதுவுமே இசைக்கப்படவில்லை. களைத்த முகத்துடன், அழுக்கு உடுப்புடன், கவலை தோய்ந்தவனாக அல்லவா சிங்களவன் காணப்படுகிறான்! பெரும் குழப்பகரமான அமைதி: அதுவும் புயலுக்கு முன்னையதான அமைதி. சூனியத்தை நோக்கி நகர்கின்ற நாடாகவே இன்னமும் சிறிலங்கா – ஏனெனில், அது இன்று பட்டப்பகலில் இரவைக்காணும் நாடல்லவா! எனவே, வெற்றிநாயகனாக, புது மாப்பிள்ளையாக உலாவரவேண்டிய 56வயது ரத்வத்த, இருட்டில் மறையும் திருடன் போல இன்றிருக்கிறார். காலையிற் கதாநாயகன். மாலையில் வில்லன்–இரட்டைவேடம் அவருக்கு. எவராலும் ஈட்ட முடியாத இராணுவ வெற்றியை ஈட்டிய தலைவிக்கோ "ஆளத்தெரியாத அம்மணி" என்று பட்டம். எப்படிப்பட்ட முரண்பாடு இது? இது மட்டுமா ஒரு முரண்பாடு: இன்னும் எத்தனையோ! இயற்கையின் சீற்றமும், வரலாற்றின் சீற்றமும் இணைந்ததால் வந்த வினையிது. இயற்கையின் சீற்றம் இன்னும் சில காலமே நீடிக்கும்: ஆனால் வரலாற்றின் சீற்றம்?–சிங்களத்தின் தலைவிதியைத் தலைகீழாக்கும் வரை நீடிக்கும்.

"கடந்த 15 வருட வரலாற்றில், ஏதாவது நெருக்கடியொன்றைச் சந்திக்காத மாதம் என்று ஒன்றிருக்கிறதா?" எனக் கழிவிரக்கத்திற் கேள்வி எழுப்புகிறார் 'சண்டே ஐலண்ட்' ஏட்டின் ஆசிரியர். "இப்போது எல்லாவற்றிக்கும் மேலாக இயற்கையுமல்லவா வஞ்சித்துவிட்டது" என்கிறார் அவர். இப்பொழுது மிகக் கூர்மையடைந்து சிங்களத்தில், அரசுக்கும் மக்களுக்குமிடையேயான முரண்பாடு தொழிலாளர், அரச ஊழியர் போராட்ட வடிவிலே மேலெழுகின்றது. இதற்கு இயற்கையும் துணைபோகின்றது. மொத்த மின் விநியோகத்தில் 85 விழுக்காடு. நீர் மின்வலு பொய்த்துவிட்டது. 100 வருட வடகீழ் பருவமழை பொய்த்தமை ஆகியவற்றின் அடிப்படையிற் பார்க்குமிடத்து, எதிர்வரும் செப்டெம்பர் வரையாவது மின் நெருக்கடி ஏதோ வகையில் நீடிக்கும் என்கிறார் ஆய்வாளர் ஒருவர். மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாகிவிட்டது இன்று சிங்களத்தின் பொருண்மிய நிலை. வாணிகத்துறையைப் பொறுத்தவரை குறிப்பாக உள்நாட்டு ஏற்றுமதிக் கைத் தொழிற் துறையில் – நாளாந்தம் 35கோடி நட்டம். சிறிலங்காவில் மொத்தமாக உள்ள 6400 கைத்தொழில் முயற்சியாளர்களில், 400 முயற்சியாளரே பெரிய கைத்தொழில் முயற்சியாளராவர்: ஏனைய 6000 பேர் நடுத்தர, சிறிய மட்டத்தினராவர். இவர்களிடம் ஏது பாரிய மின்பிறப்பாக்கிகள்(Generator)? மின் பிறப்பாக்கியைப் பயன்படுத்தும் பெரும் கைத்தொழில் முயற்சியாளருக்குக் கூட, நாளாந்தம் 25 விழுக்காடு நட்டம். பங்குச் சந்தை மிக மோசமான நெருக்கடியில்: பல தொழிற்சாலைகள் மூடும் நிலையில்: பல்லாயிரம் தொழிலாளர் வேலையற்றுப் போகும் நிலை என இவ்வாறாக இயற்கை வஞ்சித்ததால் ஏற்பட்ட விளைவு நீள்கின்றது.

> " அரசுக்கும் மக்களுக்கும் இடையேயான முரண்பாடு தொழிலாளர், அரசு ஊழியர் போராட்ட வடிவிலே மேலெழுகின்றது: இதற்கு இயற்கையும் துணை போகின்றது."

ஆனால், ஏற்கனவே போரால் பொருண்மியம் நலிந்துவிட்ட நிலையில், கூர்ந்து அவதானித்தால் **மீள முடியாத நச்சுவட்டம் ஒன்றில் சிங்களம் சிக்கி** விட்டமை புலப்படும். தொழிலாளரின் எதிர்ப்பு, வேதனஉயர்வு, மக்கள் வெறுப்புப் போன்றவற்றை அமைதிப்படுத்த, போர்ச் செலவு மிகக் குறைந்த மட்டத்தில் குறைக்கப்பட வேண்டும். அவ்வாறு குறைப்பதாயின், எப்போது முடிவுறும் என எவருக்கும் தெரியாத பெரும் போரொன்றைப் புலிகளோடு நடத்தவேண்டும் – அதற்கும், அரசை நாளாந்தம் கொண்டு நடத்தவும், பல்லாயிரம் கோடி வெளிநாட்டு உதவியாக –கடனாகப் பெறவேண்டும். அவ்வாறு பெற, கடன்தரும் முதலாளிய நாடுகள் சார்பில் உலக வங்கி விதிக்கும், தனியார் மயமாக்கற் திட்டத்திற்குச் சம்மதிக்க வேண்டும். அவ்வாறு தனியார் மயப்படுத்தும் போது, முதலாளியப் போட்டிகாரணமாகப் பல்வேறு ஊழல்களும் மோசடிகளும் தலைவிரித்தாடும் – பாதிக்கப்படும் ஊழியர் போர்க்கொடி உயர்த்துவர் – அதனைத் தடுக்கக் கொடிய சருவாதிகாரியாக அம்மையார் மாறி, அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடவேண்டும். அடக்குமுறை இறுதியில், அழிவுக்கே இட்டுச்செல்லும் என்பது வரலாற்று விதி.

இதுதான் இன்றைய சிங்களத்தின் கதை. எவ்வளவுதான் பின்னடைவு ஏற்பட்டாலும் புலிகளின் புதிய போருத்திகள், விரிந்து பரவும் போர் அரங்கு, போருக்குச் செலவிடும் பல்லாயிரம் கோடி ரூபாவில் ஒரு ரூபாயைத் தன்னும் குறைக்க முடியாத நிலையில் – போரும் முடியாது, பொருண்மியமும் மேம்படையாத நிலையில் – காரியத்தில் கண்ணாக இருக்கும் உலக வங்கியோ, சிக்கலுக்குரிய தனியார் மயமாக்கலை வேகமாக்க அழுத்தம் கொடுக்கின்றது. யாழ்ப்பாண வெற்றியைத் தனது அரசியல் முதலீடாக மாற்ற, LECO எனப்படும் லங்கா மின்சார நிறுவனத்தை விற்க முயன்றபோதே, நாட்டில் பகலும் இரவும் ஒன்றானது. ஏற்கனவே, இலாபமீட்டும் முக்கியமான துறைகளைத் தனியார் மயமாக்குவதைத் தடுப்பதற்கு, சிறீலங்காவின் பலமிக்க வங்கி, மின்துறை, புகையிரதப் பகுதி, காப்புறுதி, இரும்பு–உருக்கு, தொலைத் தொடர்பு, எரிபொருள் துறை போன்றவற்றின் ஊழியர் முன்னணியொன்றைக் கட்டிவிட்டனர். இவர்கள் இப்போது பாலாதம்புவின் துறைமுகத் தொழிலாளர் தெழிற்சங்கத்தோடு பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகின்றனர். இது சரிவருமிடத்து, ஏறத்தாழ 2இலட்சம் வலிமைமிக்க தொழிலாளர் அணியின் எதிர்ப்பை அம்மையார் சந்திக்க நேரிடும்.

இதற்கிடையில் பொதுசன ஐக்கிய முன்னணியில் கூட்டாளிக் கட்சியான ல.ச.ச.கட்சியின் தொழிற் சங்கத் தலைவர் **பட்டிவீரக்கோன்**, சந்திரிகா அரசின் தனியார் மயமாக்கல் இரகசியங்களை வெளிப்படுத்தி, பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றார். ஏற்கனவே, அவர் கடந்த மே மாதம் 29ஆம் திகதி மின்னூழியர் வேலைநிறுத்தம் தொடங்கிய அன்றுதான், 'லீக்கோவை' (LECO) குறைந்த விலையில் உடைமையாக்க முயன்ற நிறுவனம், உடன்பாட்டில் கைச்சாத்திட வர இருந்தது என்பதை அம்பலப்படுத்தி, சந்திரிகாவைப் பெருத்த இக்கட்டிற் சிக்கிவிடச் செய்தார். இப்போது – PERC எனப்படும் – தனியார் மயமாக்கலை ஒழுங்குபடுத்தும் நிறுவனத்தின் தலைவர் ராஜன் ஆசீர்வாதத்திற்கும், உலக வங்கியின் பிராந்திய நெறியாளருக்குமிடையே கைச்சாத்தான ஆவணமொன்றின் பிரதி தன்னிடம் இருப்பதாகவும் – அதில் 72 துறைகளைத் தனியார் மயமாக்கச் சம்மதம் தெரிவிக்கப்பட்டதாகவும், 'ஐ.தே.கட்சிக் காலத்திற் கூட, மொத்தம் 42 அரச நிறுவனங்களே விற்கப்பட்டன என்றும் கூறி, மேலும் சிக்கலை உருவாக்கவிட்டார். மிக விரைவில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தேசிய சேமிப்பு வங்கி, தொலைத்தொடர்பு நிறுவனம் (Telecom), புகையிரதத்துறை, சுகாதாரத்துறைகள், தனியார் மயமாகும் என அணுக்குண்டொன்றைப்போட்டு, அதிர்ச்சி அலைகளைப் பரவச் செய்திருக்கிறார். இதற்கிடையில் டி.யு.என்.எ.ஃவ் (DUNF) சிறிமானி அத்துலத் முதலியும் தன் பங்கிற்கு, தானும் சிங்களத் தலைவிதான் என்பதை உறுதிப்படுத்த முயல்வதால், அம்மையாருக்கு வேறு நெருக்கடி அதிகரித்து, 'ஆளத்தெரியாத அம்மணி', எனப் பட்டம் சூட்டப்படுகின்றது.

இத்தகைய நிலையிலே இன்று சந்திரிகா, யாரை, எதனை நம்பி ஆட்சி செய்கின்றார்? அம்மையாரின் ஆட்சி நீடிக்க, இனச் சிக்கலுக்குத் தீர்வாகத் தான் வைத்திருக்கும் சட்ட வரைவினை, ஈ.பி.டி.பி., புளொட் போன்ற தமிழ்க் குழுக்களை, எல்லாவற்றிக்கும் மேலாக யாழ்ப்பாண மக்களை நம்பியே, அவர் காலம் கழிக்க நேரிட்டு இருப்பது, வரலாற்றின் இன்னொரு நகை முரண்.

எனவே, சிங்களத்தில் நிலவும் எல்லா முரண்பாடுகளுக்கும் தாய் முரண்பாடான இனச்சிக்கலுக்குத்தான் தீர்வாக வைத்திருக்கும் 'அமைதிப்பொதி' யி[ன்] சட்டவரைவினைத் தூக்கிக் காட்[டி] உலகை ஏய்த்து உதவிபெறும் தந்திர[ம்] எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதே இன்று அரசியல் உலகில் எழுப்பப்படு[ம்] கேள்வி. எல்லாம் சரி இந்தியாவும், தமி[ழ்] நாடும் புலிகள் விடயத்தில் அமை[தி] காத்தாலும், அரசு சார்பான தமிழ் குழுக்களைக்கூட அமைதி படுத்தக்கூடிய தீர்வுத் திட்டத்தை அம்மையாரால் வைக்க முடியாதே ஏற்கனவே வைக்கப்பட்ட திட்டத்தை மகாசங்கமே எதிர்க்கிறதே! 1996–199[?] அம்மையாருக்குப் பெரும் ஆபத்தா[ன] ஆண்டு என்கிறார், சிங்க ளத்தின் மூத்[த] ஆய்வாளர் ஒருவர். தமது பொருண்மி[ய] நலன்களுக்காக மேற்குலகம் எடுத்[த] எடுப்பிலே, தகவல்களைச் சரிபாராது ஏதோ தீர்வுத் திட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டதுபோலவும், நடக்கும் போ[ர்] பற்றி – தமிழர்படும் அவலம் பற்றி மௌனம் சாதிப்பது எவ்வள[வு] முட்டாள்த் தனம் என்பது விரைவி[ல்] விளங்கும் என்கின்றது, கொழும்புவா[ழ்] தமிழர்களின் நடவடிக்கைக் குழு.

அம்மையாரின் ஏமாற்றும் ப[ண்பு] முறைமை எவ்வாறு அமைகின்றது? 1995ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 3ஆ[ம்] திகதி, தீர்வுப் பொதியின் தகவல்க[ள்] கசியவிடப்பட்டன: பின் சிங்களவரி[ன்] எதிர்ப்பைக் காட்டி அதிலிருந்து வழுவி நழுவி, அமைதிப் பொதியின் சட்ட வரைவு என ஒன்று, 1996 ஜனவரி 16[ஆம்] வெளியிடப்பட்டது. இன்னமுப[ம்] பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறுப்புக் கட்சிகளே, இவ்வரைவிற்கு அங்கீகாரமளிக்கவில்லை. டி.யு.என்.எ.ஃவ் மட்டுமல்ல, சிறிலங்கா சுதந்திரக் கட்சியி[ன்] முக்கிய உறுப்பினர் பலரே இப்போது இதற்கு ஆதரவளிக்கவில்லையென்பது[ம்] வெளிவரும் செய்தி. இதனாலே பொதுசன ஐக்கிய முன்னணிக்குள் இது பற்றி ஒருமைப்பாடுகாண, 1996 பெப்ரவரி 20ஆம் திகதிக் கூட்டத்திற்கான நாள் இன்னும் அம்மையாரின் நாட்காட்டியில் வர வேயில்லை. நாடாளுமன்றத் தெரிவுக்குழு நாடகம் எல்லார்க்கும் தெரிந்ததே. இதனாலே தான், தடம் புரண்டு – தறிகெட்டுத் தேசிய நீரோட்டத்தில் தலைகுப்புற வீழ்ந்து கிடக்கும் தமிழ்க் குழுக்கள் கூட சங்கடப்படுகின்றன. எனவே, "அமைதிக்கான சட்டவரைவு என்பது அண்டப் புழுகு, ஆகாயத் தாமரை, கோயபெல்ஸ் பொய்" எனக் காட்டமாகக் கண்டிருக்கிறது, "கொழும்புத் தமிழர் நடவடிக்கைக் குழு". கொதிப்புடன் இருக்கும் குமார் பொன்னம்பலமோ, கி.பி.2050 ஆம் ஆண்டில் கூட 'தெரிவுக்குழு' தெளிவான முடிவுக்கு வராது" என்கின்றார்.

> " சிங்களத்தில் நிலவும் எல்லா முரண்பாடுகளுக்கும் தாய் முரண்பாடான இனச்சிக்கலுக்குத் தான் தீர்வாக வைத்திருக்கும் 'அமைதிப் பொதி' யின் சட்டவரை வினைத் தூக்கிக்காட்டி, உலகை ஏய்த்து உதவி பெறும் தந்திரம், எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதே, இன்று அரசியல் உலகில் எழுப்பப்படும் கேள்வி."

எனவே, மிக விரைவில் – புலிக[ளின்] கதையும் முடியவில்லை: போரு[ம்] ஓயவில்லை: தீர்வும் சரிவரவில்லை: போட்டமுதலும் திரும்பப் போவதில்லை என, முழு உலகமும் உணரும்.

அப்போது :

நிரந்தரமாகவே பகலும்
சிறீலங்காவில்
இரவாகிவிடும்.

# பொருளாதார நெருக்கடிகள் சந்திரிகா அரசாங்கத்தை அசைக்குமா?

## போரில் அது, பெருந்தாக்கங்களை ஏற்படுத்துமா?

" தமிழீழப் போரின் தாக்க விளைவாக, சிங்கள தேசம் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டிருப்பது எல்லாரும் தெரிந்ததே. இந்தப் பொருளாதார நெருக் - கடியின் பாதிப்பினால், போர்க்களத்தில் தமிழர்களுக்குச் சார்பான மாற்றங்கள் நிகழ்ந்தே தீரும் என ஒருசாராரும்: இல்லை இல்லை, வெளிநாட்டு உதவிபெற்று அரசு தன் இழப்புகளை ஈடுசெய்யும் என இன்னொரு சாராருமாக எம் மக்கள், சந்தேகக் கருத்துக் கொண்டுள்ளனர். இதுபற்றி இந்தக் கட்டுரை ஆராய்கின்றது. "

சிங்கள அரசின் போர்ச்செலவு – வருடா வருடம் உயர்ந்தபடி – பெருந்தொகைப் பணத்தை விழுங்கி வருகின்றது. இதனால், சந்திரிகா அரசிற்குப் பெரும் நிதிப்பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, சிறிலங்காவின் பொருளாதாரக் கேந்திரநிலைகள் – அரசின் சொத்துக்கள் என்பனவற்றின் மீது நடாத்தப்படும் இராணுவத் தாக்குதல்களாலும் அதன் எதிர்விளைவுகளாலும், அரசுக்குப் பெருத்த நிதியிழப்பு ஏற்பட்டு வருகின்றது.

இவை தவிர, சம்பள உயர்வு கோரி – அடுத்தடுத்து – நடாத்தப்படும் வேலை நிறுத்தங்களும், அரச கம்பனிகளைத் தனியாருக்கு விற்க அரசு எடுக்கும் நடவடிக்கைகளைக் கண்டித்து மேற்கொள்ளப்படும் அரசு எதிர்ப்புப் போராட்டங்களும், பெருமளவு பண நஸ்டத்தை அரசிற்குக் கொடுத்து வருகின்றன.

இவைகாரணமாக, தீவிரமான ஒரு பொருளாதார நெருக்கடிக்கு முகங் கொடுக்கவேண்டிய இக்கட்டான நிலையில், சந்திரிகா அரசு உள்ளது. ஆயினும், இந்த உண்மையை எமது மக்கள் சந்தேகத்துடனேயே நோக்க விரும்புகின்றனர். அதாவது –

சந்திரிகா அரசு சந்திக்கும் இந்தப் பொருளாதார நெருக்கடிகள், சிங்களப் படைகளின் போர் நடவடிக்கைகளைச் சீர்குலைக்கும் அளவுக்குச் செல்லுமா அல்லது வெளிநாட்டு உதவிகள்மூலம், அரசு அந்த நெருக்கடியைத் தீர்த்துக்கொண்டு – காலம்பூராவும் – போரைத் தொடர்ந்து நடாத்துமா என்றவகையான ஐயங்களை, கணிசமான மக்கள் எழுப்புகின்றனர். இந்தக் கேள்விகளுக்கு விடைகூறுவதற்காக ஒரு நீண்ட விளக்கத்தை அளிக்கவேண்டியுள்ளது.

இன்றைய நிலையில், சிங்கள அரசின் பிரதான வேலை எதுவெனில், போர்செய்தல் என்பதேயாகும். அந்தளவுக்கு – அரசின் அனைத்துக் கடமைகளையும் பின்தள்ளிவிட்டு – 'போர் செய்தல்' முன்னுக்கு வந்துள்ளது.

1978ஆம் ஆண்டிற்குப் பின்னர் இன்றுவரை, சிறிலங்காவில் எந்த ஒரு பாரிய சமூக – பொருளாதார அபிவிருத்தித் திட்டமும் தொடங்கப்படவில்லை. சிறிய சிறிய திட்டங்களுடன் அரசு நின்றுவிடுகின்றது.

இதன் அர்த்தம், அபிவிருத்தியின் உச்சநிலைக்குச் சிறிலங்கா சென்றுவிட்டது என்பதோ அல்லது சிறிலங்கா நிபுணர் குழுவிடம் பிரமாண்டமான நல்ல திட்டங்கள் இல்லை என்பதோ அல்ல!

அப்படியாயின் என்ன காரணம்? பாரிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்குத் தேவையான மலையளவு பணத்தை, அரசினால் ஒதுக்க முடியாதிருப்பதே அதற்குரிய பிரதான காரணமாகும்.

இதன் அர்த்தம், சிறிலங்கா அரசிடம் பணம் இல்லை என்பது அல்ல. வெளிநாட்டு உதவிகள் – அரசு வருமானங்கள் என்று, அரசிடம் சுளை சுளையாகப் பணம் உண்டு. ஆனால், போரில் பெட்டி பெட்டியாகப் பணத்தைக் கொட்டிச் செலவளிப்பதால் – அரசு பணப் பற்றாக்குறையில் சிக்குண்டுள்ளது என்பதே உண்மையாகும்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பதுகளில், போர் தீவிரம் பெறத் தொடங்க, அரச நிதிவளத்தில் பெரும் பகுதியைப் போருக்கே செலவிடவேண்டிய கட்டாயம், அரசிற்கு எழுந்தது.

இப்போது, "போர்த்துறையில் சிறிலங்கா அபிவிருத்தி அடைந்து வருகின்றது!" ஆனால், சமூக – பொருளாதாரத் துறைகளில் அது படுபின்னடைவதையும் – அதனாற் பாரிய பிரச்சினைகளையும் எதிர்கொண்டுள்ளது.

இராணுவத்துறையை வளர்ப்பதற்காகச் சமூக – பொருளாதாரத் துறைகளைப் புறக்கணித்த நாடுகள், கெட்டுக் குட்டிச் சுவராகிப்போன கதைகள் வரலாற்றில் ஏராளம் உண்டு.

அனைவரது கண்ணுக்குள்ளும் குத்தும் சிறந்த உதாரணம், சோவியத் யூனியன் ஆகும்.

எதிராளியான அமெரிக்காவின் படை வல்லமைக்கு நிகராகச் சோவியத் யூனியன் வளர்ந்திருந்தது என்பதை, எல்லாரும் ஒப்புக்கொள்வர்.

ஆனால், பாதுகாப்புத்துறையைப் பிரமாண்டமாக வளர்க்கவேண்டும் என்பதற்காக அல்லது வளர்க்கவேண்டிய கட்டாயத்திற்குள் சோவியத் அரசு தள்ளப்பட்டதால், அது தனது சமூக – பொருளாதார நிலைகளில் மேம்பாடு காணமுடியாத அளவுக்குப் பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்தது. இதனால், சோவியத் நாட்டில் ஒரு அரசியற் குழப்பம் ஏற்பட்டது. அது, சோவியத் யூனியன் என்ற வல்லரசையே விழுங்கி – ஏப்பம் விட்டுவிட்டது! பொருளாதார நெருக்கடியும் அதனால் ஏற்பட்ட பல்வேறு வகையான அரசியற் குழப்பங்களும்தான், சோவியத்தின் வீழ்ச்சிக்குப் பிரதான காரணங்களாகும்.

ஒரு நாட்டில் ஏற்படக்கூடிய இராணுவ நெருக்கடிகளை அல்லது அரசியல் நெருக்கடிகளை, பொதுமக்கள் தங்களது கண்களாலேயே பார்ப்பார்கள்; எனவே, இராணுவ – அரசியல் நெருக்கடிகளை மக்கள் சுலபமாக விளங்கிக் கொள்வார்கள்.

ஆனால், ஒரு அரசு சந்திக்கும் பொருளாதார நெருக்கடி அவ்வாறானதல்ல; அது பொதுமக்களின் கண்களுக்கு இலேசிற் புலப்படாது.

ஒரு நாட்டின் பொருளாதார நெருக்கடி என்பது புற்றுநோயைப் போன்றது. வெளிப்பார்வைக்கு நோய் தெரியாது. ஆனால், உள்ளிருந்து அது பரவிக்கொண்டிருக்கும்; இறுதியில், திடீரென ஒரு நாள் அது உயிரையே வாங்கிவிடும். அதனாற்தான், பொருளாதார நெருக்கடி என்ற புற்றுநோய் தாக்கி – சோவியத் யூனியன் செத்து விழுந்த கடைசி நொடிப்பொழுதுவரை, அதன் சாவை எவராலும் எதிர்வுகூறவோ அல்லது நம்பவோ முடியாதிருந்தது.

புற்றுநோய்க் கிருமிகள் போல – வருடாவருடம் – சிறிலங்கா அரசின் போர்ச் செலவீனம் பெருகி வருகின்றது.

1ஆம் ஈழப்போர்க் காலத்தில் (83–89) 360 கோடி ரூபாவாக இருந்த அரசின் வருடாந்தப் போர்ச் செலவினம், 2ஆம் ஈழப்போர் (90–94) காலத்தில் 1500 கோடி ரூபாவாக உயர்ந்தது. 3ஆம் ஈழப்போரின் ஆரம்ப ஆண்டில் (1995) அது, 3500 கோடி ரூபாவாக அதிகரித்துவிட்டது.

இப்பெரும் செலவதிகரிப்பை வெளிநாட்டுக் கடன்கள்மூலமும் – அரசு பெறும் தேசிய வருமானத்தின்மூலமும் ஈடுகட்ட முயல்கின்றது என்பது உண்மை. ஆயினும், அந்த நிதியுங்கூட, அரசிற்குப் போதாதிருக்கின்றது என்ற உண்மையை எமது மக்கள் கவனத்தில் எடுக்கவேண்டும். அதனாற்தான், அரச நிறுவனங்களை வெளிநாட்டு முதலாளிகளுக்கு விற்று – அதன் மூலம் பணம் சம்பாதிக்கவும், பாதுகாப்பு வரி என்ற பெயரில் அனைத்துப் பொருட்களுக்குமான ஒரு விற்பனை வரியை விதித்ததன் மூலமும் மற்றும் பல்வேறு வரிச்சுமைகளை மக்கள் மீது சுமத்துவதன் மூலமும் தேவையான பணத்தைப்பெற, சந்திரிகா அரசு முயற்சி செய்கின்றது.

இந்த முயற்சிகள், சிங்களப் பொதுசனங்கள் மீது பொருளாதாரச் சுமைகளைச் சுமத்திவிட்டுள்ளன. இதுகாரணமாகச் சம்பள உயர்வு கோரியும், மேலும் பல சலுகைகள் கோரியும், சிங்கள மக்களில் ஒருபகுதியினர் அரச எதிர்ப்புப் போராட்டங்களில் இறங்கியுள்ளனர்.

இதேவேளை, சிங்கள மக்களின் வாழ்நிலையை மேம்படுத்தவல்ல சமூக – பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் நீண்டகாலமாகச் சீர்கெட்டிருப்பதால், சிங்கள மக்களது குடும்பப் பொருளாதாரமும் பாரிய சிக்கலைச் சந்தித்துள்ளது.

மக்களின் குடும்பப் பொருளாதாரத்திற்குக் 'குளுக்கோஸ்' கொடுக்கும் நிலையிற் சிறிலங்காவின் அரசுப் பொருளாதாரம் இல்லை. இந்த நிலையிற் போர் நீள நீள, அரசினதும் சிங்கள மக்களினதும் பொருளாதார நிலை மிகவும் நெருக்கடிக்கு உள்ளாகப் போகின்றது.

ஒரு கட்டத்தில் அது, பாரியதொரு அரசியல் குழப்பத்தைத் தென் இலங்கையில் தோற்றுவிக்கும். அத்தகையதொரு கட்டம் வரும்போது, போரிலும் பல திருப்புமுனைகள் நிகழ இடமுண்டு. ஒன்று, இரண்டு ஆண்டுகளுக்குள் அந்த நிலைமை வந்துவிடும் என்று நாம் கனவுகாணக்கூடாது. அதேவேளை, அந்த நிலை எப்போது வரும் என்று எவராலும் எதிர்வு கூறவும் முடியாது. ஆனால், ஒன்றுமட்டும் உலகப் பொது உண்மை. அது யாதெனில், பொருளாதாரம் என்பதும் ஒரு நாட்டினதும் –




→

## சிங்கள அரசாங்கத்தின் பொருளாதாரப் பலமே தமிழர்களுக்கு எதிரான போரின் படைபலமாகும் பொருளாதாரப் பலம் சிதறும்போதுதான், படைபலமும் சிதையும்!

அரசினதும் ஏன், குடும்பத்தினதும் முதுகெலும்பாகும். அந்த முதுகெலும்பு முறிக்கப்படுமானால், வீழ்ச்சி அல்லது அழிவு, நாட்டின் முற்றத்திற்கு வந்து – வாசற் கதவைத் தட்டிக்கொண்டிருக்கும். கடந்த 5 ஆண்டுகாலப் போர், சிங்கள அரசின் பொருளாதாரத்தைச் சிதைத்து, சிறிலங்காவின் முதுகெலும்பை நோய்க்கு உள்ளாக்கிவிட்டது. வெளிநாட்டு உதவிகள்மூலம் இந்தப் பொருளாதாரப் புற்றுநோய்க்கு, சந்திரிகா அரசு சில அறுவைச் சிகிச்சைகளை வெற்றிகரமாகச் செய்து, நோயைத் தற்காலிகமாகக் குணமாக்குவதில் வெற்றிபெற்று வருகின்றது என்பதை மறுப்பதற்கில்லை.

எனினும், வெளிநாட்டு உதவிகள் என்ற வாய்ப்பு, சிங்கள அரசிற்குத் தடைப்படுமாயின், தமிழினத்துடனான போரை நடாத்தும் வலிமையை – ஒரு குறுகிய காலத்துக்குள் – சிங்களப் படைகள் இழந்துவிடும். இந்த உண்மையை எல்லாரும் ஒப்புக்கொள்வர்.

எனவே, எவ்வளவு காலத்திற்கு அல்லது எதுவரை, சிங்கள அரசுக்கு வெளிநாடுகள் பணத்தை அள்ளிக்கொட்டிக் கொடுக்கப்போகின்றன என்ற கேள்விக்கு விடைகாண்பது சிறந்தது.

எமது மக்கள் முன்வைக்கும் அரசியல் நியாயங்களோ அல்லது தமிழ் மக்கள் சார்பாக எழுப்பப்படுகின்ற மனிதாபிமானக் குரல்களோ, சிங்கள அரசுக்கு வரும் வெளிநாட்டு உதவிகளைத் தடுத்து நிறுத்திவிடமாட்டா. 'தமிழருக்கு எதிரான போருக்கு' என, எந்த ஒரு மேற்குநாடும் நிதி உதவிகளை வழங்குவதில்லை. ஆனால், தாம் கொடுக்கும் உதவிகளில் பெரும்பகுதிப் பணத்தைச் சிங்கள அரசு தனது போர்த் தேவைகளுக்குப் பயன்படுத்துகின்றது என்ற உண்மையும் உதவிவழங்கும் நாடுகளுக்குத் தெரியும். அதை அவை கண்டும் காணாமலும் இருக்கின்றன.

ஏழை நாடுகளான மூன்றாம் மண்டல நாடுகள் சந்திக்கும் சில நெருக்கடிகளுக்கு – மனிதாபிமான ரீதியில் – மேற்குநாட்டு அரசுகள் உதவிவழங்கும் நடைமுறை ஒன்று உண்டு. இத்தகைய மனிதாபிமானச் சேவைகளைத் தவிர்ந்த மற்றைய உதவிகளுக்கு, அதாவது, உதவிகள் என்ற கோதாவில் வெளிநாடுகள் வழங்கும் பெருந்தொகைப் பணத்திற்கு, ஒரு திட்டவட்ட நோக்கம் உண்டு. அது உதவி வழங்கும் நாடுகளின் வர்த்தக நலன் சம்பந்தப்பட்டதாகும்.

தமது வர்த்தக நலன்களுக்கு அனுசரணையாக இருக்க, இலங்கைத்தீவின் அரசைச் சம்மதிக்கச் செய்வதற்காக அல்லது சம்மதிக்கக்கூடிய ஒரு கட்டாயச் சூழலை உருவாக்குவதற்காக, 'அன்பளிப்புகள் – நீண்டகாலக் கடன்கள், வட்டியில்லாத கடன்கள், அபிவிருத்தித் திட்டங்களுக்கான பணங்கள் – என்று உதவிகளை வழங்குவது என்பது, செல்வந்த நாடுகள் வகுத்துவைத்திருக்கும் ஒரு செயல்முறையாகும்.

ஏழை நாடுகளின் முன்னேற்றத்திற்கு உதவுதல் என்ற அம்சத்துடன், தமது வர்த்தக நலன்களையும் அடைந்துவிடுதல் என்ற வகையில் – இரட்டைக்குழல் துப்பாக்கியாக – வெளிநாட்டு உதவிகள் செயற்படுகின்றன.

சிறிலங்கா அரசின் திறந்த பொருளாதாரக் கொள்கையும் மற்றும் தனியார் மயப்படுத்தல் உறுதிமொழிகளுமே அதற்கு, வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொடுக்கும் அதிஸ்ட தேவதைகளாகச் செயற்படுகின்றன.

ஆனால், போரின் தாக்கங்கள் வர்த்தக மையமான கொழும்பையும் அதன் சுற்றுப்புறங்களையும் பெரிதும் பாதித்துவருவதால், வெளிநாட்டு முதலீட்டாளர்கள், சிறிலங்காச் சந்தையை அச்சத்துடனும் ஐயத்துடனும் நோக்க ஆரம்பித்துவிட்டனர்.

இந்த நிலை எப்படியாவது மாற்றப்படவேண்டும் என்று, உதவி வழங்கும் நாடுகள் விரும்புகின்றன. போரில் வெற்றி பெறுவதன்மூலம், கொழும்பிலும் அதன் சுற்றாடலிலும் அமைதிக்காற்றைத் தவழவிடமுடியும் என்ற சந்திரிகா அரசின் வாக்குறுதி, நிறைவேற்றப்படமுடியாத ஒன்றென, அனைத்து இராஜதந்திரிகளும் இன்று கருதுகின்றனர்.

இது ஒருபுறமிருக்க, சிங்களத் தொழிலாளர்கள் தொடர்பாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள், அதிருப்திப் பார்வை ஒன்றை வைத்திருக்கின்றனர். வேலைநிறுத்தப் போராட்டங்களை நடாத்தி, தமது உற்பத்திகளைப் பாதிக்கும் வகையில் அவர்கள் பொறுப்புணர்ச்சியற்றுச் செயற்படுவதாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எரிச்சலடைகின்றனர். இதேவேளை, வெளிநாட்டு முதலீட்டாளர்களை அல்லது அவர்களது பிரதிநிதிகளை, உள்ளூர்த் தொழிலாளர்கள் பயமுறுத்தியும், தாக்கியும் வரும் வன்முறைச் சம்பவங்கள் கொழும்பில் அடிக்கடி நிகழ்கின்றன.

இவை வெளிநாட்டு மூலதனக் காரர்களை உற்சாகமிழக்க வைக்கும். சிறிலங்காவில் "கைத்தொழில் பயங்கரவாதம்' நிலவுகின்றது என, ஒரு வெளிநாட்டு முதலீட்டாளர் குழு தன்னிடம் புகார் கூறியதாக, சிறிலங்காவின் கைத்தொழில் அமைச்சர் சி.வி. குணரட்ணா அவர்களே கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் கூறிக் கவலைப்பட்டுள்ளார். அண்மையில் இலங்கை மின்சார சபை ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தபோது, தமது மின்சார சபையின் மின் உபகரணங்களை அடித்து நொறுக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்விதம் முதலீடுகளை நாசம் செய்யும் வன்முறைவாதிகளாக, சிங்களத் தொழிலாளர்களே விளங்குகின்றனர் என்ற உண்மை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குக் கசப்பானதே.

இந்த வகையில், போரும் மூர்க்கக் குணங்கொண்ட சிங்களத் தொழிலாளர்களது செயல்களும், வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஓட ஓட விரட்டிக்கொண்டே இருக்கப்போகின்றன. இந்த நிலை தொடர்ச்சியாக இருக்குமானால், வெளிநாடுகளின் வர்த்தக நலனுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும். இந்தநிலையில், சிறிலங்கா அரசுக்கு உதவிகள் என்ற கோதாவில் சுளை சுளையாகப் பணத்தை அள்ளிவழங்க, உதவி வழங்கும் நாடுகள் தயாராக இருக்கமாட்டாதென்பது உறுதியாகும்.


இதேவேளை, அரசு நிறுவனங்களைத் தனியாருக்கு விற்கும் 'தனியார் மயப்படுத்தல்' திட்டத்திற்கு, உள்நாட்டில் பாரிய எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இந்த எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாது, அரச நிறுவனங்களை விற்றுவிட அரசால் முடியும். இவ்விதம் விற்கப்படுவதற்கென இருக்கும் அரசுடைமைகளின் மொத்தப் பெறுமதி, 2100 கோடி ரூபாக்கள் ஆகும். இது அரசின் ஒருவருடப் பாதுகாப்புச் செலவினத்தையே ஈடுசெய்யப் போதாது. இந்த நிலையில், எஞ்சியுள்ள அரசுச் சொத்துக்களையும் வெளிநாட்டு முதலாளிகளுக்கு விற்று, மேலும் சில ஆயிரம் கோடி ரூபாக்களை அரசு சம்பாதிக்க முடியும். அதுவும் ஒன்று, இரண்டு ஆண்டுகளில் செலவளித்து முடிந்துவிடும்.

அதன்பின்னர், 'காணிவிற்று வழக்குப்பேசிய கமக்காரனின்' நிலையில் இருக்கப்போகும் சிறிலங்கா அரசு, தனது போர்த் தேவைக்குவேண்டிய பணத்தை எங்கிருந்து பெறப்போகின்றது?

சிங்கள மக்களுக்கு உயிர்நிலையாக இருக்கும் 'இலவசங்கள்' மீது சிலவேளை, சிறிலங்கா அரசு கைவைக்கலாம். இலவச உணவு – இலவசக் கல்வி – இலவச மருத்துவம் – இலவச பாடப்புத்தகம் – இலவச சீருடை, இலவச மதிய உணவு, மற்றும் விவசாயப் பொருட்களின் விலைகளில் குறைப்புச் செய்யும் முகமாக, அரசால் ஒதுக்கப்படும் மானியச் செலவுகளையும் இல்லாது செய்வதன்மூலமும், ஆண்டுதோறும் ஒருசில ஆயிரம் கோடி ரூபாக்களை அரசால் சேமிக்க முடியும். ஆனால், இந்த இலவசத் திட்டங்கள்மீது கைவைத்தால், ஒருசில வாரங்களுக்குள்ளேயே சந்திரிகாவின் அரசு கவிழ்ந்துவிடும் என்று துணிந்து கூறலாம்.

தொடர்ச்சி 9 ம் பக்கம்...

**பொருளாதார நெருக்கடி புற்றுநோய் போன்றது; அது கண்பார்வைக்குத் தெரியாது - உள்ளிருந்து பரவும்; திடீரென ஒருநாள்...எதுவும் நிகழும்!**



# சர்வரோக நிவாரணியாக போரைக் கருதும் சந்திரிகா



ரெண்டு கொத்து அரிசி இலவசமாகத் தருவோம்"
சந்திரமண்டலம் சென்றாவது அரிசி கொண்டு
ருவோம்"

ன வாக்குறுதிகளை வழங்கி, 1970இல் ஆட்சிக் ட்டிலில் ஏறிய தற்போதைய பிரதமர் சிறிமாவோ ண்டாரநாயக்க, அவர் ஆட்சியில் ஏறியதும் ரைக்கொத்து அரிசியை மட்டுமே இலவசமாக ழங்கினார். ஆனால், பாணுக்கும் மாவுக்கும் மக்களை ண்டவரிசையில் நிற்க வைத்தமையால் அவர் 'ஆண்டுகள் அஞ்ஞாதவாசம் செல்ல நேர்ந்தது.

ஐந்து வருட ஆட்சிக்கு மக்களின் ஆணையைப் பற்று ஆட்சிப்பீடம் ஏறிய அவர், அரசியலமைப்புச் ட்டத்தில் உள்ள சிறு ஓட்டையைப் பயன்படுத்தி ழுஆண்டுகள் ஆட்சி புரிந்தார். தென்பகுதியில் டம்பெற்ற ஜே. வி. பி இன் முதலாவது கிளர்ச்சியை டக்கவும் தமிழர்களின் எழுச்சியை ஒடுக்கவும் அவசரகால நிலை ஏறத்தாழ அவரின் ஆட்சிக்காலம் முழுவதும் பிரகடனப் படுத்தப்பட்டிருந்தது. ஜே. வி. பி ளர்ச்சிக் காலத்தில் அவரின் ஆட்சியால் ஆயிரக் ணக்கான சிங்கள இளைஞர்கள் பலியிடப்பட்டனர். மிழ் இளைஞர்கள் சிறையிலிடப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர்.

இவற்றையெல்லாம் மறக்க, சிங்கள மக்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருடகால ஆட்சி தேவைப்பட்டது.

ஏழு ஆண்டுகால சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் சிங்கள மக்கள் உணவுக்குப் பட்ட பாட்டை மறக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் 17 ஆண்டுகால ஆட்சி தேவைப்பட்டிருக்கிறது.

இந்நிலையில், "மாவின் விலையைக் குறைப்போம்", பாணின் விலையைக் குறைப்போம்", "பருப்பின் விலையைக் குறைப்போம்" என மக்களுக்கும் "சனாதிபதி முறையை ஒழிப்போம்", "தனியார் மயமாக்கலை நிறுத்துவோம்", "அவசரகால நிலையை நீக்குவோம்", செய்திச் சுதந்திரம் வழங்குவோம்" எனத் தன்னோடு என்ற அவரின் தேர்தல் வாக்குறுதியை அவர் ஆட்சிபீடம் ஏறிய அன்றே மறந்துவிட்டமையை அவரின் நடவடிக்கைகள் நிரூபித்து வருகின்றன. ஆனால், அவரின் இந்த நடவடிக்கை, அவரின் ஏனைய வாக்குறுதிகளை நிறைவேற்ற ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்பது அவருக்கு நன்றாகவே தெரியும். ஆனால், இந்த வாக்குறுதிகளை சிங்கள மக்களை மறக்கச் செய்வதற்கும் போரையே அவர் கருவியாகக் கொண்டுள்ளார்.

ஆனால், இங்கு மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் மீறப்படுவது குறித்து எவரும் கவலை கொள்ளாத போதும்,

சந்திரிகாவோடு இணைந்துள்ள கட்சிகளுக்கு அவர் வழங்கிய வாக்குறுதிகள் அவருக்குச் சிக்கலையே தொடர்ந்தும் ஏற்படுத்தி வருகின்றன.
இதன் எதிரொலிகள், அடிக்கடி அமைச்சரவைக் கூட்டத்திலும்

அதற்கு வெளியேயும் எழும்பவே செய்கின்றன. 'சனாதிபதி முறை நீக்கம்' என்ற வாக்குறுதியை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவி சிறிமானி அத்துலத்முதலி தொடர்ந்தும் பற்றிப்பிடித்துக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த வாக்குறுதி 1995 யூலை 15ஆம் திகதி நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். ஆனால், 'சமாதானத்திற்கான போர்' நடத்த சனாதிபதிப் பதவி சந்திரிகாவிற்கு அவசியமாகியுள்ள நிலையில், அதனை விட்டுவிடச் சந்திரிகா தயாராக இல்லை என்பது சிறிமானிக்குப் பலத்த மனத்தாங்கல். அத்துடன், சமுர்த்தி வேலைவாய்ப்புக்களில் தமது கட்சி உறுப்பினர்கள் வேண்டுமென்று புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் அண்மைக்காலமாக முறையிட்டு வருகிறார். அத்துடன், சந்திரிகா பெருமையுடன் முன்வைத்திருக்கும் 'தீர்வுப்பொதி' குறித்தும் சிறிமானிக்குத் திருப்தியில்லை.
ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்காலத்தில் நிலவிய 'அராஜகம்' குறித்தும் 'அவசரகாலநிலை', 'செய்தித் தணிக்கை' என்பன குறித்தும் 'குதிகுதி' என்று குதித்த வாசுதேவ நாணயக்காரவிற்கு, தான் அங்கம் வகிக்கும் பொ. ஐ. முன்னணியின் செயற்பாடுகள், தனது முன்னைய 'நண்பர்களின்' முகத்தில் முழிக்கமுடியாத நிலையைத் தோற்றுவித்துள்ளது. இது தெரியாமல் சந்திரிகா சில முடிவுகளை எடுத்துவிடுகிறார் என்பதிலும் அவருக்கு வருத்தம் என அவருக்கு நெருங்கியவர்கள் கூறுகின்றனர். ஏனைய இடதுசாரித் தோழர்களைச் சந்திரிகா பொருட்படுத்துவதே இல்லை.

இதேவேளை, பொதுசன ஐக்கிய முன்னணி அமைச்சரவையில் அங்கம் வகித்துவரும் அமைச்சர் தொண்டமானின் செயற்பாடுகள், அரசாங்கத்திற்குப் பெரும் சங்கடத்தை விளைவித்து வருகின்றன. 500 மில்லியன் ரூபா நட்டத்தை ஏற்படுத்தியுள்ள பெருந்தோட்டத்துறை வேலைநிறுத்தத்தை இந்தியாவில் நின்று கொண்டு நடத்தியதும் தனது அமைச்சரவைச் சகாவிற்கு எதிராக அவரே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர முயன்றதும், அதற்கு எதிர்க்கட்சியினரிடம் ஆதரவு கோரியதும் அமைச்சரவையில் பலருக்கு அறவே பிடிக்கவில்லை.
இந்தப் பிரச்சினை தற்பொழுது சுமுகமாக தீர்க்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அரசானது "நரி, வலம் போனாலென்ன இடம் போனாலென்ன, பாய்ந்து பிடுங்காமல் போனால் சரி" என்ற நிலைப்பாட்டையே தொண்டமான் விடயத்தில் எடுத்துள்ளதாகக் கருதப்படுகிறது.

இந்நிலையில், பெரும் இடைஞ்சல் கொடுக்கும் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டுத் தேர்தலை நடத்தவும் மக்கள் ஆதரவு கிட்டுமா? என்ற அச்சநிலை சந்திரிகாவிற்கு ஏற்பட்டுள்ளது. உள்ளூராட்சித் தேர்தலையே நடத்த முடியவில்லை பாராளுமன்றத் தேர்தலா? வேண்டாம் விசப்பரீட்சை எனச் சந்திரிகா அரசு எண்ணுகின்றது.

எனவே, சனாதிபதி சந்திரிகா முன்னர் கூறியதுபோல, 60 வயது வரையாவது ஆட்சியில் நீடிக்க, "போர்" ஒன்றையே சர்வரோக நிவாரணியாகக் கொண்டுள்ளார் என்பதையே அவரது நடவடிக்கைகள் காட்டுகின்றன.

"இனப்பிரச்சினைக்குச் சமாதான வழிமூலமே தீர்வு" எனத் தேர்தல் வாக்குறுதி அளித்து ஆட்சிப்பீடம் ஏறிய சந்திரிகா, இன்று "போர் மூலமே இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு" எனக் கூறி, வாக்களித்த மக்களை மட்டுமல்ல, உலக நாடுகளையே ஏமாற்றி வருகிறார்.

இணைந்து நின்ற கட்சிகளுக்கும் தன்னை ஆதரித்த சில புத்திஜீவிகளுக்கும் வாக்குறுதியளித்து பதவிக்கு வந்த திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, படிப்படியாகத் தனது வாக்குறுதிகளை மறந்து வருகிறார்.

"இனப்பிரச்சினைக்குச் சமாதான வழி மூலம் தீர்வு"

*–வேலவன், தமிழீழம்*

## பொருளாதார நெருக்கடிகள்...

இதற்குச் சில நல்ல உதாரணங்கள் உண்டு. அரிசியின் விலையைச் சிறிது அதிகரித்த டட்லி சேனநாயக்காவின் அரசையும்; வைத்தியசாலையில் மருத்துவம் பார்ப்பதற்குரிய கட்டணமாக, 25 சதத்தை ஒவ்வொரு நோயாளரிடமும் அறவீடுசெய்த சிறீமாவோவின் ஆட்சியையும் சிங்கள மக்கள் வெறுத்து ஒதுக்கியிருந்தனர் என்பது, சிறிலங்காவின் வரலாறு. 77ஆம் ஆண்டு ஜே.ஆர். ஆட்சியைப் பிடித்ததும், 25 சத திட்டத்தை உடனடியாக ரத்துச் செய்தார். இது சிங்கள மக்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றது என்பதை, இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். எனவே, இலவசத் திட்டங்களின்மேல் கைவைக்கச் சந்திரிகா அம்மையார் துணிவாரா அல்லது அது நடக்கக்கூடிய காரியமா?

அப்படியாயின், போர்ச்செலவு அதிகரிப்பை சிறிலங்கா அரசால் எப்படிச் சமாளிக்க முடியும்?

5 வீதமாகத் தற்போது அறவிடப்படும் பாதுகாப்புவரியை 10 அல்லது 15 வீதமாக அதிகரிப்பதன்மூலமும், குறித்த ஒரு தொகைப்பணத்தை அரசு திரட்ட முயலலாம். இதைவிட, அனைத்துப் பொருட்களுக்கும் பிரத்தியேகமானமுறையில் விற்பனை வரிகளை விதித்தும் ஒருதொகைப் பணத்தை, ஆண்டுதோறும் பெற அரசு முயலலாம். இவ்விதம் நடந்தால், அது சாதாரண சிங்கள மக்களின் அன்றாட வாழ்க்கையையே, இமாலய நெருக்கடிக்குள் தள்ளிவிட்டுவிடும். இதைச் சகித்துக்கொண்டு சிங்கள மக்கள் – சும்மா இருக்கமாட்டார்கள்.

அத்துடன் முன்னைய ஆண்டுகள்போல, நாட்டின் அபிவிருத்திக்கென எழுந்தமானமாக – எந்த ஒரு நாடும் பணத்தைக் கொட்டிக் கொடுக்கும் நிலையில், இப்போது இல்லை. குடாநாட்டை ஆக்கிரமித்த பின்னர், அதன் புனரமைப்பிற்கு என்ற போர்வையில், பெருந்தொகை நிதியை யப்பானிடம் இருந்து சந்திரிகா அரசு பெற முயற்சித்தபோது, அது தோல்வியையே கொடுத்தது. சமாதானம் ஏற்பட்டால்தான் புனரமைப்பிற்கான பணத்தைத் தரமுடியும் என, யப்பான் வெளிப்படையாக அறிவித்துவிட்டது. எதிர்பார்த்த பெருந்தொகைப் பணம் கைகளிற்கு வராதுபோனமை, சிறிலங்காவிற்குப் பலத்த ஏமாற்றத்தை வழங்கிவிட்டது! இவ்விதம், கிடுகிடுவென உயர்ந்துசெல்லும் போர்ச்செலவைச் சமாளிக்க, இனிவரும் ஆண்டுகளில் சிறிலங்கா அரசு திக்குமுக்காட வேண்டிய நிலை, நிச்சயம் உருவாகும்.

86இல் 360 கோடி ரூபா; 93இல் 1500 கோடி ரூபா; 95இல் 3500 கோடி ரூபா என, வருடாந்த பாதுகாப்புச்செலவினம் உயர்ந்து செல்லும் போக்கைப் பார்க்கும்போது, இன்னும் 4 ஆண்டுகளில் – 2000 ஆண்டில் – அது, ஆண்டுக்கு பத்தாயிரம் கோடி ரூபா என்ற தொகையை எட்டலாம்.

இந்தப் பணமலையை அரசு எங்கிருந்து கிண்டி எடுப்பது? கிண்டி எடுக்கும் வழிகளையும், போரும் அதன் சுமைகளும் படிப்படியாகத் தடுத்துவிடும்.

போதிய நிதிவளம் இல்லாதுவிடின், தமிழினத்திற்கு எதிரான போரைத் தொடர்ந்து நடாத்துவதில் அரசிற்குப் பல சிக்கல்கள் தோன்றும்; அவை தமிழரின் விடுதலைப் போருக்குச் சார்பான களநிலைமையை உருவாக்கிவிடும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இராணுவ இலக்காக, அரசுப் பொருளாதாரம் குறிவைக்கப்பட்டுவிட்டது. இலக்கு வீழ்த்தப்படும்வரை உறுதியுடன் போராடவேண்டியது, தமிழினத்தின் வரலாற்றுக் கடமை!

# அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற

# நீதியான

தமிழ் மக்களுக்கு எதிராக, சிறிலங்கா அரசினால் நடாத்தப்படும் போரை முடிவுக்குக் கொண்டு வந்து ஒரு நிரந்தரமான, நீதியான சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்குடன், அவுஸ்திரேலிய மனித உரிமைகள் சங்கமும் அவுஸ்திரேலிய தென்துருவ தமிழர் சம்மேளனமும் இணைந்து ஒரு அகில உலக மாநாட்டை அவுஸ்திரேலியாவின் தலைநகரான கன்பரா மாநகரத்தில் கடந்த யூன் 27, 28-ஆம் நாட்களில் நடாத்தின. இரு நாட்களிலும் ஆறு கூட்டத் தொடராக நடைபெற்ற இம்மாநாட்டின் மூலம், தமிழீழத்தில் அல்லல்படும் தமிழ் மக்களின் அமைதிக்கான - சமாதானத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. உலகின் பலபாகங்களிலிருந்தும் குறிப்பாக தென் ஆபிரிக்கா, ஐரோப்பா, இலங்கை, மலேசியா, அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள், செய்தியாளர்கள், சட்ட அறிஞர்கள், நீதவான்கள், மனித உரிமை அமைப்பினர், அரசு சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு, இலங்கையில் ஒரு நீதியான சமாதானத்தின் முக்கியத்துவத்தையும் இச்சமாதானம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசித் தீர்ப்பதன் மூலமே கிடைக்கும் என்பதனையும் வலியுறுத்திக் கூறினர். தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் மத்திய குழு உறுப்பினரும் புலிகளின் வெளிநாட்டுப் பேச்சாளருமான திரு. லோறன்ஸ் திலகர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்து, தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானத்தை விரும்பாதவர்கள் என்று சிறிலங்கா அரசினால் செய்யப்படும் பிரச்சாரத்தைச் சர்வதேச அரங்கிலேயே பொய்யாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பிரவின் கோர்டன்
தென்ஆபிரிக்க பாராளுமன்ற உறுப்பினர்
(ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்)

**கா**லை 9.30 மணியளவில், அவுஸ்திரேலியாவின் மனித உரிமைகள் சங்கத் தலைவரும் தமிழ் மக்களின் நலன்களில் அக்கறைகொண்டு பலகாலமாக தமிழ் மக்களுக்காக தன்னலமற்ற சேவை செய்துவருபவருமாகிய, அதி வணக்கத்திற்குரிய ரிச்சர்ட் வூட்டன் (Richard Wooten)அவர்களின் ஆரம்ப உரையுடன் **"நீதியான சமாதானம்"** எனும் இச் சிறப்பு மாநாடு தொடங்கியது. அவுஸ்திரேலிய வெளிநாட்டு உதவிச் சபையின் தலைவர் **பில் ஆம்ஸ்ரோங்** (Bill Amstrong), அவுஸ்திரேலிய அரசைப் பிரதிநிதிப்படுத்தும் வகையில் சமூகமளித்திருந்த அவுஸ்திரேலிய வெளியுறவு வர்த்தக பாதுகாப்பு அமைச்சின் பாராளுமன்றக் குழுவின் தலைவரும் பாராளுமன்ற அங்கத்தினரும் தேசியக் கட்சி (National Party)யைச் சேர்ந்தவருமான **இயன் சிங்கிலயர்** (Ian Sinclair), அவுஸ்திரேலிய மனித உரிமைகள் சங்கப் பொறுப்பாளர் **திரு. அலெக்ஸ் கில்கர்** (Alex Kilgour) ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைக்க மங்களகரமாக ஆரம்பித்த மாநாடு, முதலில் இரண்டு நிமிட அமைதி வணக்கத்தை, தமிழீழத்தில் உயிர்த்தியாகம் செய்தோருக்கு செலுத்தியது.

இதைத் தொடர்ந்து, அவுஸ்திரேலிய தென்துருவ சம்மேளனத்தின் தலைவர் **பேராசிரியர் எலியசர்** அவர்கள் கலந்துகொண்டு வரவேற்புரை வழங்கியதுடன், உலகின் எல்லாப் பாகங்களிலும் நடைபெறும் மனித உரிமை மீறல்களைச் சுட்டிக்காட்டி, இலங்கையில் மனித உரிமை மீறல் மாத்திரமல்ல நாட்டில் வாழும் தமிழ் இனத்தைத் தாழ்வான இனமாக நடாத்துவதையும் விளக்கினார்.

## 1ஆம் நாள் மாநாடு

### 1வது கூட்டத்தொடர்

முதலாவது கூட்டத்தொடர் திரு. **பிறதெற்ரன்** (D. Bretherton) தலைமையில் "முரண்பாடுகளும் - ஆய்வுகளும்" என்ற தலைப்பில் ஆரம்பமானது. திரு. பிறதெற்ரன் அவர்கள் தனது தலைமை உரையில், "இங்கு ஏற்றிவைக்கப்பட்ட மங்கல விளக்குச் சுடர் தமிழ் ஈழமக்களின் இருளை அகற்றி ஒரு ஒளியைக் கொடுக்கும்" என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இவரைத் தொடர்ந்து, யேர்மன் பல்கலைக் கழகத்தின் ஆசிய சரித்திரபீடத்தின் பேராசிரியர் டக்மர் **கெல்மன் இராஜநாயகம்** அவர்கள், இலங்கைச் சரித்திரத்தை ஆதாரமாகக் காட்டி சிங்கள மக்கள் எவ்வளவுக்கு எவ்வளவு, இலங்கை தமது நாடென்று உரிமை கொண்டாடுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு தமிழர்களுக்கும் உரிமை உண்டு என்பதை ஆணித்தரமாகக் கூறினார். இலங்கையில் பிரித்தானியர் வருகைக்கு முன்னர் பல இராச்சியங்கள் இருந்ததைச் சுட்டிக்காட்டிய இவர், ஒற்றையாட்சி முறை வெளிநாட்டு ஆக்கிரமிப்பு சக்திகளால் இலங்கை மக்கள் மீது திணிக்கப்பட்டதை எடுத்தியம்பினார். தமிழ் மக்களும் சிங்கள மக்களும் வெளிநாட்டு ஆக்கிரமிப்பிற்கு முன்பு இருந்தவாறு தனித்தனியே தங்கள் இடங்களில் பூரண உரிமையுடன் வாழவிடப்படவேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

இவரைத் தொடர்ந்து, மலேசியாவிலிருந்து வந்திருந்த இலக்கிய நிபுணர் **பீர் முகம்மது** அவர்கள் மிக அழகான தமிழில் ஆழமான கருத்துடன் சொற்பொழிவாற்றினார். மற்றைய மொழிகளைத் தான் போற்றுவதாகவும் தனது தாய்மொழியாம் தமிழை வணங்குவதாகவும் கூறியது அவரது மொழிப்பற்றை வெளிப்படுத்தியது. **'அங்கேயும் இங்கேயும் இல்லாமல் இருப்பின், எங்கேயும் இல்லாமல் போய்விடுவார்கள்'** என்பதை வெகு கச்சிதமாக எடுத்துரைத்தார்.




இடமிருந்து வலமாக :-
ஜெனற் கன்ற் - அவுஸ்திரேலிய வெளிநாட்டு உதவி வழங்கும் சபையின் செயற்பாட்டுத் தலைவர்
பிறயன் வூல்வ் - பிரித்தானிய அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியச் செயலாளர்
பிரவின் கோர்டன் - ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பா.உ.
மார்க்கஸ் இயன்பீல்ட் - அவுஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர்

அடுத்ததாக, அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக் கழகத்தின் ஆசிய சரித்திரபீடத்தைச் சேர்ந்த மூத்த



பில் ஆம்ஸ்ரோங்
அவுஸ்திரேலிய வெளிநாட்டு
உதவிச்சபையின் தலைவர்.

**பேராசிரியர் கலாநிதி ஜோன் பேவர்** (John Paver)அவர்கள், இலங்கைச் சரித்திரம் சிக்கலான ஒன்றென்பதைச் சுட்டிக்காட்டியதுடன், இருதரப்பினர் ஒன்றாக வாழ முடியாவிடின் பிரிந்து வாழ்வதால் இருவரும் சந்தோசமாக வாழமுடியும் என்பதை, ஐரோப்பிய சமூகத்தில் பெருமளவில் நடக்கும் விவாகரத்தை உதாரணமாகக் காட்டி விளக்கினார். கணவன் – மனைவி சந்தோசமாக வாழ முடியாவிடின், "இருவரும் பிரிந்து சந்தோசமாக வாழலாம். அடிபட்டு உதைபட்டு ஒன்றாக வாழ்வதைக் காட்டிலும் பிரிந்து சந்தோசமாக வாழலாம். இது தமிழ் சிங்கள மக்களுக்கும் பொருந்தும்" என்பதனைக் கூறிய அவர், தமிழர்கள் சமாதானத்தை விரும்பும் மக்கள் என்பதையும் அடுத்தடுத்து அரசாட்சி புரிந்த சிங்கள அரசுகளின் அக்கறையற்ற தன்மையாலும், அடக்குமுறைகளாலும் வன்முறைக்குத் தள்ளப்பட்டதை ஆதாரங்களுடன் எடுத்துச் சொன்னார்.

முதலாவது கூட்டத் தொடரில் இறுதியாக உரையாற்றிய அகில இலங்கை காங்கிரஸ் தலைவர் **திரு. குமார் பொன்னம்பலம்** அவர்கள், "அடுத்தடுத்து பதவிக்கு வந்த சிங்களத் தலைவர்களால் தமிழர்கள் ஏமாற்றப்படாமல் தமிழரின் அடிப்படை

# அனைத்துலக மாநாட்டில்

# சமாதானம்

**அவுஸ்திரேலியாவின் தலைநகர் கன்பரா மாநகரத்தில், 'நீதியான சமாதானம்" எனும் தலைப்பின் கீழ் இரு நாட்கள் நடைபெற்ற அனைத்துலக மாநாட்டின் கருத்துத் தொகுப்பு.**

உரிமைகள் பாதுகாக்கப்பட்டிருப்பின், தமிழர்கள் இப்போதுள்ள ஒரு அவலமான நிலைக்குள்ளாகி இருக்கமாட்டார்கள்" என்பதையும் *"தமிழீழ மக்களுடன் மக்களாய் வாழ்ந்து அவர்களின் துன்பத்தில் பங்குகொள்ளும் தமிழீழ விடுதலைப் புலிகள்தான், தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள்"* என்பதையும் திட்டவட்டமாகக் கூறினார். அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசாமல் ஒரு நிலையான சமாதானம் உருவாகாது என்பதையும் எடுத்துரைத்தார்.

## 2ஆவது கூட்டத் தொடர்

இரண்டாவது கூட்டத் தொடரில் உரையாற்றிய முந்நாள் சிறிலங்கா தொலைக்காட்சி நிலையத் தலைவர் திரு. வசந்தராஜா அவர்கள், சிறிலங்கா அரசு



இயன் சிங்கிலயர்
அவுஸ்திரேலிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்.

தனது நாட்டின் நன்மை கருதி வடக்கு-கிழக்கில் நடைபெறும் தமிழ் மக்களுக்கு எதிரான போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து, நூறு வீதமான சிங்களவர்களைக் கொண்ட இராணுவத்தை வடக்கு-கிழக்கிலிருந்து அகற்றி, தமிழர்களின் ஒரே பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உடனடியாகப் பேச்சுவார்த்தையைத் தொடங்க வேண்டும் என்று வலியுறுத்தினார். சூரியக்கதிர் 1, 2, 3 என்னும் படையெடுப்புக்களால் புலிகள் இயக்கத்தை வெல்ல முடியவில்லை என்பதையும் எந்த ஒரு படையெடுப்பாலும் கெரில்லாத் தந்திரத்தில் உலகத்திலேயே உன்னதமாகச் செயற்படும் விடுதலைப் புலிகளை வெல்ல முடியாது என்பதையும் பல்வேறுபட்ட தனது ஆராய்ச்சிகளை ஆதாரமாகக் காட்டி தெளிவுபடுத்தினார். வெளிநாட்டுப் பண உதவி முழுவதும் வடக்கில் நடைபெறும் போரிற்குப் பயன்படுத்தப்படுவதையும் இலங்கை மக்கள் மேலும் மேலும் பலவகை வரிகளுக்கு உட்படுத்தப்படுவதையும் சுட்டிக்காட்டி, இவற்றிக்கு எதிராகத் தெற்கிலுள்ள மக்கள் சீறி எழும் காலம் மிகவிரைவில் ஏற்படும் என்பதை, அண்மையில் இலங்கையில் வெற்றிகரமாக நடாத்தப்பட்ட மின்சாரசபை ஊழியர்களின் வேலை நிறுத்தத்தை ஆதாரமாகக் காட்டி விளங்க வைத்தார்.

இவரைத் தொடர்ந்து, சுவீடன் உப்சலா பல்கலைக்கழகத்தின் சரித்திரப் பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் பீற்றர் சாக் தமிழ் பேசத் தயங்கும் தமிழ் மக்கள் வெட்கித் தலை குனியும் வகையில் அழகான தமிழில், "உங்களுடன் தமிழில் கதைக்க விரும்புகின்றேன். ஆனால் அது முழுமையாக முடியாதபடியால் ஆங்கிலத்திலே பேசுகின்றேன்" என்று தமிழில் கூறி தனது உரையை ஆங்கிலத்தில் ஆற்றினார். இவர், 1975ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாண மக்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டு இருப்பதையும் யாழ். பிரசைகள் குழுவில் ஓர் தீவிர அங்கத்தவராக இருப்பதையும் யாழ். பல்கலைக் கழகத்துடன் சுவீடன் பல்கலைக் கழகத்திற்கூடாக நெருங்கிய தொடர்பு வைத்திருப்பதையும் சுட்டிக் காட்டினார். "சிறிலங்கா அரசின் சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கை தமிழ் மக்களின் விடுதலைக்காக நடாத்தப்பட்டதொன்றல்ல, யாழ். ஆக்கிரமிப்பிற்காக நடாத்தப்பட்ட ஒரு கண்மூடித்தனமான படையெடுப்பு" என்பதனை ஆதாரங்களுடன் எடுத்துரைத்தார். தன்னுடைய கணிப்பின்பேரில், "தமிழீழ மக்களையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் பிரிக்க முடியாது என்பதையும் எந்தவொரு சமாதானமும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பங்குபற்றல் இல்லாமல் சாத்தியமில்லை" என்பதையும் அழுத்தமாகக் கூறினார்.

அடுத்ததாக, தமிழீழத்திலிருந்து வந்திருந்த அதி வணக்கத்திற்குரிய கலாநிதி இம்மானுவல் அவர்கள் தனது உருக்கமான வேண்டுகோளில், "எனது மக்களை வாழவிடுங்கள்"என்ற தலைப்பில் உரையாற்றியது அங்கு சமூகமளித்திருந்த அனைவரது கண்களிலும் கண்ணீரைக் கசிய வைத்தது. "நான் ஒரு அரசியல்வாதியாகவோ அல்லது ஒரு தலைவராகவோ இங்கு வரவில்லை. தமிழீழத்தில் அவதியுறும் மக்களின் பிரதிநிதியாக உங்கள் முன் வந்துள்ளேன்" என்று கூறிய அவர், சிறிலங்கா அரசினால் உண்மைகள் எவ்வாறு திரித்துக் கூறப்படுகின்றது என்பதை ஆதாரங்களுடன் தெளிவுபடுத்தினார். சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததிற்கு, தமிழீழ விடுதலைப் புலிகளை முற்று முழுதாக குற்றம் சாட்டுவது ஒரு அப்பட்டமான பொய் எனக்கூறினார். தமிழ் மக்கள் மேலுள்ள பொருண்மியத் தடையை நீக்குவதைச் சிறிலங்கா அரசு ஒரு சலுகையாகப் பேச்சுவார்த்தையின்போது பயன்படுத்தியதைச் சுட்டிக்காட்டினார். அத்தோடு, புலிகள் தரப்பில் தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் சமாதான பேச்சுவார்த்தையில் பங்குபற்றிய பொழுது, இவர்களுக்குச் சமமாக அரசதரப்பிலிருந்து ஒரு மந்திரி கூட கலந்துகொள்ளவில்லை. இதற்கு மாறாக அரச ஊழியர்களைச் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அனுப்பியது, அரசின் அக்கறையற்ற தன்மையை உணர்த்துவதாகக் கூறினார். பேச்சுவார்த்தை முறிவடைந்தமைக்கான காரணங்களை, இரு தரப்பினருக்கும் இடையில் பரிமாறப்பட்ட கடிதங்கள் மூலம் இலகுவாக அறிய முடியும் என்றும் இதை நன்குணர்ந்த புலிகள் காலக்கெடு கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்றும் கூறினார். சூரியக் கதிர் -1 நடவடிக்கையின்போது, 5 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்திருக்க ஒரு இலட்சம் மக்கள்தான் இடம்பெயர்ந்தனர் என்று கூறிய அரசு, இப்பொழுது 2 இலட்சத்து ஐம்பதினாயிரம் மக்கள் திரும்ப யாழ்ப்பாணத்திற்கு வந்துவிட்டனர் என்று கூறுவது தம்மைத் தாமே பொய்யர்கள் என்று புரிய வைத்துள்ளனர் என்றும் கூறினார். இடம்பெயரும் பொழுது அவதியுற்ற மக்களைப் பற்றி ஒன்றும் பிரசுரிக்காத சிறிலங்காப் பத்திரிகைகள், இராணுவம்




அதி.வண. றிச்சர்ட் வூட்டன்
அவுஸ்திரேலிய மனித உரிமைகள் சங்கத் தலைவர்

தமிழ் மக்களுக்குச் 'சொக்லேட்' கொடுப்பதையும் அவர்கள் சிரிப்பதையும் படம்பிடித்து முற்பக்கத்திலேயே போட்டுள்ளமை, அவர்கள் பத்திரிகைத் தர்மத்திற்கும் தமிழ் மக்களுக்கும் செய்யும் துரோகத்தனம் எனவும் சுட்டிக்காட்டினார்.


இவரது உரையுடன் 2ஆம் கூட்டத்தொடர் முடிவுற்றது.

## 3ஆவது கூட்டத் தொடர்

3ஆவது கூட்டத்தொடர் 'சமாதானம் – தடங்கல்கள் – சாத்தியக்கூறுகள்' என்ற தலைப்பில் அவுஸ்திரேலிய தனித உரிமைகள் சங்கத் தலைவர் திரு. அலெக்ஸ் கில்கரின் தலைமையில் நடைபெற்றது.

முதலாவதாக, தென்னாபிரிக்காவில் இருந்து வந்திருந்த திரு. ராஜா நாயுடு அவர்கள், பேச்சுவார்த்தை மூலம் நிரந்தரமான, நீதியான தீர்வு காணப்பட வேண்டிய கட்டாயத்தை வலியுறுத்தினார்.

தொடர்ச்சி 12 ம் பக்கம்...




இடமிருந்து வலமாக:-
ராஜா நாயுடு - தென்னாபிரிக்காவின் உலகளாவிய மத்தியஸ்தம் வழங்கும் சபையின் பிராந்தியத் தலைவர்
சுனில் ரட்ணபிரியா - சிறீலங்கா நவசமாசக்கட்சியைச் சேர்ந்தவர்
பன்னீர்செல்வன் - தமிழ்நாடு அவுட்லுக் எனும் தென்னாசிய வாரச்சஞ்சிகையின் தென்பிராந்தியத் தலைவர்
அனா பரராசசிங்கம் - தென்துருவத் தமிழர் சம்மேளனத்தைச் சேர்ந்தவர்.

# நீதியான...



பேராசிரியர். எலியேசர்
அவுஸ்திரேலிய தென்துருவ சம்மேளனத்தின் தலைவர்.

இவர் ஒரு சட்டத்தரணியும் தென் ஆபிரிக்காவில் இயங்கும் உலகளாவிய மத்தியஸ்தம் வழங்கும் சபையின் பிராந்தியத் தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தென் ஆபிரிக்காவின் விடுதலைப் போராட்டத்தின் மூலம் பல பாடங்களை நாங்கள் பெற்றுள்ளோம் என்று கூறிய அவர், இவற்றை இயலுமான அளவு இலங்கையின் சமாதானத்திலும் பங்குபடுத்தப்படல் வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். ''தென்னாபிரிக்காவிலும் போராட்டங்கள் நடந்தன. வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றன. அதேநேரத்தில் பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றதைச் சுட்டிக்காட்டி, இலங்கையிலும் அது நடைபெற வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் உண்மையுடன் உழைக்க வேண்டும்" என்றும் கூறினார். வெளிநாடுகளை முற்றுமுழுதாக நம்பமுடியாது என்பதை



பேராசிரியர்.டக்மர்.கெல்மன் இராஜநாயகம்
யேர்மன் பல்கலைக்கழக ஆசிய சரித்திர பீடம்

சீன - அமெரிக்க உறவுகளை உதாரணம் காட்டி விளக்கினார். சீனா பலவகையிலும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டாலும் மற்ற நாடுகள் கண்டிக்கும் அளவிற்கு சீனாவை அமெரிக்கா கண்டிக்காமல் விடுவதற்கான காரணம், அமெரிக்காவிற்கு சீனாவினால் கிடைக்கும் பொருண்மிய நன்மை என்பதை தெளிவுபடுத்தினார். பேச்சு வார்த்தைகள் மேல்மட்டத்தில் நடை பெறாவிட்டால் அது அர்த்தமற்றதாகிவிடும் என்பதைச் சுட்டிக்காட்டிய அவர், தென்னாபிரிக்காவில் முன்னாள் சனாதிபதி டிகிளார்க்குக்கும் தற்போதைய சனாதிபதி நெல்சன் மண்டேலாவிற்கும் இடையில் நடைபெற்ற இரகசியப் பேச்சவார்த்தையை ஆதாரமாகக் காட்டி "ஏன் புலிகள் தலைவர் பிரபாகரனும் சனாதிபதி சந்திரிகாவும் ஒரு தொடர்பை ஏற்படுத்தக்கூடாது" என வினாவினார். இப்படியான தொடர்புகள் நூற்றுக்குநூறு பலனளிக்கும் எனக்கூறிய அவர், முதலாவதாகத் தொடர்பு கொள்பவர் தான் பலவீனமானவர் என்று எண்ணத் தேவையில்லை என்பதையும் வலியுறுத்தினார். வெளிநாட்டில் வாழும் இலங்கைத் தமிழர்களும் சிங்களவர்களும் இதற்காக அயராமல் உழைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இவரைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்திருந்த 'அவுட் லுக்' எனும் தென்னாசிய வார சஞ்சிகையின் தெற்குப் பிராந்தியத் தலைவர் திரு. பன்னீர்ச்செல்வன் அவர்கள், தான் 1983 தொடக்கம் இன்றுவரை இலங்கையில் நடைபெறும் தமிழர்களின் போராட்டத்தைப் பற்றி எழுதி வருவதாகக் கூறினார். தன்னுடைய பார்வையில் ஒரு நீதியான நிலையான சமாதானம் தமிழீழ விடுதலைப் புலிகள், இந்திய அரசு, சிறிலங்கா அரசு ஆகிய மூன்று பகுதியினரும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதன் மூலமே ஏற்படும் என்று கூறினார். புலிகளைத் தவிர்த்த பேச்சுவார்த்தை ஒருநாளும் நிலையானதாக அமையாது என்று கூறிய அவர், ஜே. ஆர், பிரேமதாச, விஜேதுங்கா, தற்போதைய சனாதிபதி சந்திரிகா இவர்களில் யாரை எடுத்துக் கொண்டாலும் எல்லோரும் முதலில் திரு. பிரபாகரனுடன் பேச்சுவார்த்தையில் இறங்கியுள்ளனர். இது சிறிலங்கா அரசு, தமிழீழ விடுதலைப் புலிகளுக்குக் கொடுத்துள்ள முக்கியத்துவத்தையே காட்டுகின்றது. பேச்சுவார்த்தை 19-04-1995இல் முறிவடைந்தமைக்கு இலங்கை அரசு இலகுவாக தமிழீழ விடுதலைப் புலிகளையே குற்றம் சாட்டியது. எது எப்படி இருப்பினும் ஒரு நாட்டை வழிநடத்தும் சிறிலங்கா அரசு, புலிகளைவிட முக்கிய பொறுப்புணர்ச்சியுடன் நடந்திருக்கவேண்டும். அவர்கள் அப்படி நடக்கவில்லை என்பதில் இருந்து சமாதானத்தில் இருந்த அவர்களின் அக்கறையற்ற தன்மையை உணரக்கூடியதாக உள்ளதெனக் கூறினார். தமிழர்களை விடுவிப்பதாகச் சொல்லி, யாழ்ப்பாணத்தில் சிங்கக் கொடியையேற்றி, தமிழர்கள் எல்லோரையும் அடிமைத்தன உணர்ச்சிக்கு சிறிலங்கா அரசு தள்ளிவிட்டதைச் சுட்டிக்காட்டினார். இவ்வாறான செயல்கள் இரு இனங்களுக்குமிடையே மேலும் பிரிவினையை ஏற்படுத்துமே தவிர, ஒற்றுமையை ஒருநாளும் உருவாக்காது என்பதை தெளிவுபடுத்தினார். சூரியக் கதிர் 1, 2, 3 நடவடிக்கைகளால் சந்திரிகா 1987இற்கு முன்னிருந்த நிலையைத் திரும்பவும் ஏற்படுத்தியுள்ளார் என்றும் போர் நடவடிக்கைகளுக்காகப் பெருந்தொகைப் பணம் செலவிடப்படுகின்றது என்பதையும் கூறியதுடன், இவ்வாறு சென்றால் போர் முடிவுக்கு வருமா என்ற கேள்வியையும் எழுப்பினார். அதற்கான பதில் "தனக்குத் தெரியாது" என்று கூறி உரையை முடித்துக் கொண்டார்.

இதனையடுத்து, இலங்கையில் இருந்து வருகை தந்த நவசமசமாசக் கட்சியைச் சேர்ந்த திரு. சுனில் ரட்ணப்பிரியா அவர்கள், இலங்கையில் உள்ள



கலாநிதி. பிறதெற்றன்
முதலாவது கூட்டத்தொடருக்குத் தலைமை வகித்தவர்

தொழிலாளர்கள் சார்பில் தான் உரையாற்றுவதாகக் கூறினார். சந்திரிகா அரசு 180 பாகை திரும்பலை ஏற்படுத்தியுள்ளதையும் எந்தவொரு பிரச்சினையும் புலிகள் பிரச்சினையாகச் சிங்கள மக்களிடையே பிரச்சாரம் செய்யப்படுவதையும் தெளிவுபடுத்தினார். சிறிலங்காவில் உள்ள பொருண்மிய வீழ்ச்சியை மறைப்பதற்கு வடக்கு-கிழக்கில் நடைபெறும் தமிழ் மக்களுக்கெதிரான போரைப் பாவிப்பதை ஆதாரபூர்வமாக விளக்கினார். சமீபத்தில் நடைபெற்ற சிறிலங்கா மின்சாரசபை ஊழியர்களினதும் சிறிலங்கா வைத்திய சங்க அங்கத்தவர்களினதும் வேலை நிறுத்தங்களை, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நடந்த சம்பவங்கள் என்று சிறிலங்கா அரசினால் வர்ணிக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டினார். இம்முறை மே தின ஊர்வலங்களைப் புலிகள் தாக்கக்கூடும் என்ற காரணத்தைக் காட்டி தடை செய்யப்பட்டிருந்ததைக் கூறிய கலாநிதி ரட்ணப்பிரியா, நவசமசமாசக் கட்சி மட்டுமே துணிகரமாக மே தின ஊர்வலத்தில் பங்குபற்றியதையும் புலிகளால் அல்ல சிறிலங்காப் பொலிசாரினாலேயே ஊர்வலத்தில் பங்கு பற்றியவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டதையும் எடுத்துக் கூறினார். சிங்கள மக்கள் தமிழர்களின் நீதியான உரிமைகளை மறுப்பவர்கள் அல்லர் என்று கூறிய அவர், சந்திரிகா தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசி சமாதானம் செய்யப்போவதாகக் கூறி 62 வீத வாக்குகளால் சனாதிபதியாக தேர்ந்து எடுக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டினார். தங்களுடைய கட்சி 1975ஆம் தொடக்கம் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதாகவும் இலங்கை சிங்கள இனம், தமிழினம் மற்றும் எல்லா இனங்களுக்கும் உரித்தானது என்பதை முற்றுமுழுதாக ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவித்தார். தங்கள் தங்கள் நிலப்பரப்பில் சுயமாக வாழ இலங்கைவாழ் மக்கள் யாவருக்கும் உரிமை இருப்பதையும் →

JUN 27 '96 11:54AM D.G. PRESIDENTS OFFICE

OFFICE OF THE PRESIDENT

*Tuynhuys* *Private Bag X1000 Cape Town 8000 Tel: (021) 45-2225*

**MESSAGE FROM PRESIDENT NELSON MANDELA**

Peace, reconciliation and development are the most difficult challenges for our troubled world today. It is my profound belief that every effort to stop conflict, war and human misery must be applauded and supported.

It is our fervent wish and hope that the efforts of organisations such as the Australian Human Rights Foundation and all other endeavours to bring peace and a climate for a negotiated solution to the conflict in Sri Lanka, will achieve this goal.

May I wish your conference every success in creating a constructive and inclusive dialogue among all role players in order to create a climate where negotiations can thrive and the search for meaningful reconciliation enhanced.

NMandela

**Nelson Mandela**
**President**
**Republic of South Africa**

**June 1996**

# நீதியான...



பீர் முகம்மது
மலேசிய இலக்கிய நிபுணர்

தெளிவுபடுத்தினார். மகா சங்கத்தைச் சேர்ந்த சில புத்த குருமார்களே இலங்கை, பௌத்தர்களின் சொந்தம் என்று கூறிவருவதாகவும் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் இதை ஆதரிக்கவில்லை என்றும், தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் முழு சமஸ்டி அரசை உருவாக்க, தங்களுடைய கட்சி எப்பொழுதும் குரல் கொடுக்கும் என்றும் கூறினார்.

3ஆவது கூட்டத்தொடரின் இறுதியில் உரையாற்றிய, தென்துருவ தமிழர் சம்மேளனத்தின் செயலாளர் திரு. அனா பரராஜசிங்கம், தான் கொழும்பில் பிறந்து வளர்ந்தவர் எனவும் தனது பல நண்பர்களும் சிங்கள இனத்தவர்கள்



குமார் பொன்னம்பலம்
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர்

எனவும் கூறிய அவர், 1983 யூலைக் கலவரம் தனது போக்கை முற்றாக மாற்றிவிட்டதாகவும் இதைத் தொடர்ந்தே அவுஸ்திரேலியாவில் இருந்து தமிழீழ மக்களின் விடிவிற்காக உழைத்து வருவதாகவும் கூறினார். இலங்கைச் சரித்திரத்தை மிக விபரமாக விபரித்ததுடன், தமிழர்களின் உரிமை அடுத்தடுத்து வந்த சிங்களத் தலைவர்களால் எவ்வாறு மறுக்கப்பட்டது என்பதை ஆதாரத்துடன் விளக்கினார். "சிங்கள பௌத்த ஏகாதிபத்தியம் தலைதூக்கி இருக்கும்வரை நிலையான நீதியான சமாதானத்திற்கு இடமே இல்லை" என்பதை ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டினார்.



திரு.வசந்தராசா
முன்னாள் சிறிலங்கா தொலைக்காட்சி நிலையத் தலைவர்.

இவரது உரையுடன் முதலாம் நாள் மாநாடு நிறைவுபெற்றது.

## 2ஆம் நாள் மாநாடு

## 4ஆம் கூட்டத் தொடர்

2ஆம் நாள் மாநாடு, 28-06-96 வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் நாலாம் கூட்டத் தொடராக ஆரம்பமாகியது. இம்மாநாட்டுக்கு ஐக்கிய நாடுகள் சபையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதியாக 1982இலிருந்து கடமையாற்றிவரும் சட்டத்தரணி கரன் பார்க்கர் அவர்கள் தலைமை தாங்கினார்.

இம்மாநாட்டில் முதலாவதாக உரையாற்றிய அவுஸ்திரேலியாவின் வெளிநாடுகளுக்கான உதவிபுரியும் சபைகளின் செயற்பாட்டுத் தலைவர் ஜெனற் கன்ற் (Janet Hunt) அவர்கள் தனதுரையில், கூறினார். சிறிலங்கா அரசு ஒரு தீர்வை வலுக்கட்டாயமாக தமிழ் மக்களின் மேல் திணிக்க எத்தனிப்பதையும் சுட்டிக்காட்டினார். மனித உரிமை மீறல்கள் நிறுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் நீதியான சமாதானத்தின் முக்கியத்துவத்தையும் விளக்கினார்.

அடுத்ததாக, அவுஸ்திரேலிய மனித உரிமைகள் - சமஉரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும், அவுஸ்திரேலிய உயர்நீதிமன்ற நீதவானுமாகிய மார்க்கஸ் இயன்பீல்ட் (Marcus Einfield)அவர்கள் உரையாற்றினார். தனது குடிமக்களுக்கு எதிராகப் போரை நடாத்தும் முதலாவது அரசு இலங்கை அரசாகத்தான் இருக்கும் என்பதாகக் கூறிய அவர், மனித உரிமைகள் மீறலை தனது உள்நாட்டுப் பிரச்சினை என்று சிறிலங்கா அரசு கூறுவது, கிட்லர் அன்று யேர்மனியில் செய்தது போலாகும்

### ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் வாழ்த்துச் செய்தி!

தொல்லைகள் நிறைந்த இன்றைய உலகில் சமாதானம், நல்லிணக்கம், அபிவிருத்தி ஆகியவற்றை ஏற்படுத்துவதே நாம் எதிர்கொள்ள வேண்டிய மிகக் கடினமான சவால்களாகும். பிணக்குகள், போர்கள், மனிதஇனத்தின் பல் வேறு அவலங்கள் ஆகியவற்றை ஒழிப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அனைத்தும் பாராட்டப்படவேண்டியவையாகும்.

சிறிலங்காவில் சமாதானத்தை உண்டு பண்ணவும் அங்குள்ள பிரச்சனைக்குப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண்பதற்குச் சாதகமான சூழ் நிலையை உருவாக்கவும் அவுஸ்திரேலிய மனித உரிமைகள் நிறுவனம் போன்ற அமைப்புகளால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் பயனுள்ளவையாக அமைய வேண்டும் என்பதில், மிகவும் ஆர்வம் உடையோம். அம்முயற்சிகள் நாளையே பலனை அளிக்கும் எனவும் நம்புகிறோம்.

பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நடைபெறுவதற்கும் சம்பந்தப்பட்டவர்களிடையே நல்லிணக்கம் உருவாகுவதற்கும் இன்றியமையாத சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதில் உங்கள் மாநாடு வெற்றிகாண வேண்டுமென மனமார வாழ்த்துகிறேன்.

நெல்சன் மண்டேலா
ஜனாதிபதி (ஒப்பம்)
தென் ஆபிரிக்க குடியரசு
யூன் 1996.

இலங்கையில் பத்திரிகைத் தணிக்கை அமுலில் இருப்பதினால் சரியான உண்மை நிலையைத் தங்களால் அறிய முடியாமல் உள்ளதைச் சுட்டிக்காட்டினார். மனித உரிமைகள் கடுமையாக மீறப்படுவதை வன்மையாகக் கண்டித்த இவர், போரினால் ஒரு தீர்வு உண்டாக முடியாது என்பதையும் எடுத்துக்கூறினார். தமிழ் மக்களையும் நாட்டு நிலைமையையும் மனத்திற்கொண்டு, தமிழீழ விடுதலைப் புலிகளும் சிறிலங்கா அரசும் உடனடியாகப் போரை நிறுத்தி பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் போரிற்காக பாவிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டிய இவர், அரசு இப்பிடியான நிலையில் தொடர்ந்தும் போரைக் கொண்டு நடாத்த முடியாது என்பதையும் விளக்கினார்.

இவரைத் தொடர்ந்து, பிரித்தானியாவில் இருந்து வருகை தந்த இலங்கை சார்ந்த, பிரித்தானியாவில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தின் செயலாளர் திரு. பிறயன் வூல்ப் (Bryan Wolfe) உரையாற்றுகையில், தற்போது வடக்கிலும் - கிழக்கிலும் நடாத்தப்படும் போரிற்கு 2.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படுவதாகவும் அது சிறிலங்கா அரசின் மொத்த வரவு செலவில் 22 வீதம் எனவும் எடுத்துக் என்று கூறினார். இன்று வடக்கு-கிழக்கிலும் ஏன் தெற்கிலும் கூட பல மனித உரிமைகள் மீறல்களும் சர்வாதிகாரப் போக்கும் இலங்கை அரசினால் பொறுப்பற்ற விதத்தில் செயற்படச் செய்தது கவலைக்குரியதொன்றாகும் என்று கூறினார். "தமிழர்களுக்கென்று பாரம்பரிய பூமி உண்டு. மொழி கலாச்சாரம் என்பவையும் உண்டு. இவை மதிக்கப்பட வேண்டும். அவர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படல் வேண்டும். சிறிலங்கா அரசு வடக்கிலும் கிழக்கிலும் இருந்து இராணுவத்தை அகற்றி, சமாதானப் பேச்சுவார்த்தைக்கான வழியை வகுக்க வேண்டும். ஒரு பொறுப்புள்ள அரசு இவற்றை உடனடியாகச் செய்து தமிழ் மக்கள் மீதான பொருண்மியத் தடையை நீக்கி ஒரு சுமூகமான நிலையைக் கொண்டுவரவேண்டும்" என்றும் கேட்டுக் கொண்டார். தமிழர்களின் போராட்டம் நீதிக்குட்பட்டதென்றும் எத்தனையோ வெளிநாட்டு மத்தியஸ்தம் சிறிலங்கா அரசினால் நிராகரிக்கப்பட்டது என்றும் விளக்கிய அவர், அவுஸ்திரேலிய அரசு இலங்கைத் தமிழ் மக்களுக்கு துரோகம் செய்துவிட்டதாகவும் சாடினார்.

4ஆம் கூட்டத்தொடரின் இறுதியில் தென்னாபிரிக்காவில் இருந்து வந்திருந்த ஆபிரிக்க தேசிய காங்கிரசைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் திரு. பிரவின்



பேராசிரியர். ஜோன் பேவர்
அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழக ஆசிய சரித்திர பீடம்

கோர்டன் (Pravin J Gordhan) அவர்கள், இலங்கையில் நடைபெறும் தமிழர்களின் போராட்டத்தையும் தென்னாபிரிக்காவில் தற்போதைய சனாதிபதி நெல்சன் மண்டேலாவினால் நடாத்தப்பட்டு வெற்றிகண்ட போராட்டத்தினையும் ஒப்பிட்டு உரையாற்றினார். தங்களுடைய போராட்டத்தில் படித்த பாடங்கள், தமிழர்களின் போராட்டத்திற்கு மிகவும் உதவியாக இருக்குமென்றும் இவற்றைத் தமிழீழ விடுதலைப் புலிகள் உற்றுநோக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். போரினால் ஒருதீர்வு ஏற்படாது என்பதை இருதரப்பினரும் உணர்ந்து, ஒருவருக்கொருவர் தொடர்புகளை ஏற்படுத்தி அதன்மூலம் பேச்சுவார்த்தைகளை ஏற்படுத்தலாம் என்பதைச் சுட்டிக்காட்டினார். பேச்சுவார்த்தையின் போது, ஒருவரையொருவர் நம்புவது மிகவும் அவசியம் எனவும் இது உடனடியாக ஏற்படாது எனவும் தெளிவுபடுத்தினார். இதேநேரத்தில், ஆ.தே.காங்கிரஸ் வெளிநாட்டுப் பிரச்சாரத்தில் மிக மும்முரமாக ஈடுபட்டிருந்ததையும் எடுத்துக்காட்டிய அவர், தமிழீழ விடுதலைப் புலிகள் வெளிநாடுகளின் மதிப்பைப் பெற பெருமுயற்சி எடுக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார்.

4ஆம் கூட்டத்தொடரின் இறுதியில் தென்னாபிரிக்க சனாதிபதியும், ஆபிரிக்க தேசிய காங்கிரசின் தலைவருமான மேன்மைதங்கிய திரு. நெல்சன் மண்டேலா அவர்களிடமிருந்து வந்த ஆசிச் செய்தியை வாசித்தார்.

## 5ஆம் கூட்டத் தொடர்

மாநாட்டின் 5ஆம் கூட்டத்தொடர் திரு. பிரவின் கோர்டன் தலைமையில் சிறிய நாடுகளின் போராட்டம் என்ற தலைப்பில் ஆரம்பமாகியது.

இத்தொடரில் முதலில், நியூசிலாந்து மாசே (Massey) பல்கலைக்கழகப் பேராசிரியர் மார்கிரெட் ராவிக் (Margaret Trawick) அவர்கள் அழகான தமிழில் தன்னுரையை ஆரம்பித்தார். தமிழில் உரையாற்றுகையில், "தலைவர் வேலு



பேராசிரியர். பீற்றர் சாக்
சுவீடன் உப்சலா பல்கலைக்கழக சரித்திரபீடம்

ப்பிள்ளை பிரபாகரன் யார் என்ன சொன்னாலும் நின்று அவதானமாகக் கேட்டு, கேட்டவற்றை சிந்தையில் →

# நீதியான...


அதி.வண.கலாநிதி இம்மானுவல்
தமிழீழம்.

கொண்டு செயற்படுவாராம். நீங்களும் அவரிடம் கேளுங்கள் அவர் கட்டாயமாச் செய்வார்." எனக்கூறினார். பின் தனது உரையை ஆங்கிலத்தில் தொடர்ந்தார். தொடர்ந்து உரையாற்றுகையில், தான் இவ்வாண்டு பங்குனி மாதத்தில் மட்டக்களப்புக்குச் சென்றிருந்ததாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் சிலரைச் சந்தித்து உரையாடியதாகவும் கூறினார். தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு விடுதலை வீரர்கள் என்றும் அவர்களைப் பயங்கரவாதிகள் என்று கூறுபவர்கள் அவர்களைப் பற்றி நேரில் சென்று அறியாதவர்கள் என்றும் விளக்கினார். அவர்கள் தியாக தீபங்கள் என்பதற்கு அவர்களது கழுத்தில்


சட்டத்தரணி கரன் பாக்கர்
ஐ.நா சபையின் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதி

தொங்கும் 'சயனைட்' குப்பியே ஆதாரம். அவர்கள் தங்களால் செய்ய வேண்டியவற்றைச் செய்துவிட்டார்கள். இனிமேல் செய்யப்படவேண்டியது முக்கியமாக வெளிநாட்டில் வாழும் தமிழ் மக்களாலும் மற்றும் தமிழ் அபிமானிகளாலுமே என்பதை வெளிப்படுத்தினார். தனது பார்வையில் புலிகள் சிங்கள மக்களை வெறுப்பவர்கள் அல்லர். அவர்கள் சம்பளத்திற்கு வேலை செய்யும் சிங்கள இராணுவத்திடம் கோபம் கொள்ளவில்லை. அவர்களுக்குக் கொலை செய்வதற்கு விருப்பமில்லை. ஆனால், அப்படியான ஒருநிலைக்குத் தள்ள ப்பட்டதாலேயே ஆயுதம் தூக்கிப் போராடுகிறார்கள்.

"தமிழீழம் என்பது ஒரு துண்டு நிலம் அல்ல. தமிழர் என்ற ஒரு தேசிய இனம், ஒரு வரையறுக்கப்பட்ட


கலாநிதி சிறிஸ்கந்தராஜா
சிட்னி ஈழத்தமிழர் சங்கத் தலைவர்.

தனது சொந்தப் பிரதேசத்தில் வாழ்வதையே 'தமிழீழம்" என்று சொல்லலாம்" என்ற விடுதலைப் புலிகளின் ஆழமான கருத்தை அழுத்தமாக எடுத்துரைத்தார். "நாங்கள் ஒரு வீரர் இருக்கும்வரை போராடுவோம்" என்று கூறுகிறார்கள். அதனால் நீங்கள் அவர்களையும் அவர்களுடைய போராட்டத்தையும் காப்பாற்ற வேண்டுமென்று மிகவும் உருக்கமாகக் கேட்டுக் கொண்டார். இவர்கள் கூற்றுக்கள் யாவும் சீதா என்ற தமிழீழ விடுதலைப் புலி வீராங்கனையுடன் நடந்த கருத்துப் பரிமாறல்கள், செவ்விகள் என்பன மூலம் பெறப்பட்டவை எனவும் தெரிவித்தார்.

அடுத்ததாக, அமெரிக்காவில் இருந்து வருகை தந்த சட்ட வல்லுனர் கரன் பாக்கர் அவர்கள் தனதுரையில், "ஐ. நா சபையின் சட்டதிட்டங்களின்படி தமிழீழ விடுதலைப் புலிகளை ஒரு விடுதலைக்காகப் போராடும் இராணுவம் என்று கூறமுடியுமே தவிர, பயங்கரவாதிகள் என்று கூற முடியாது" என்பதை ஆதாரபூர்வமாக விளக்கினார். வடக்கு-கிழக்கில் ஒரு கலவரம் நடக்கவில்லை. ஒரு கிளர்ச்சி நடக்கவில்லை. ஒரு உண்மையான போரே நடைபெறுகின்றதென்பது சிறிலங்கா அரசு பாவிக்கும் இராணுவ உபகரணங்களில் இருந்து புலனாகின்றது என்ற உண்மையை எடுத்துரைத்தார். ஒரு போரில் நடைபெறுவது போல குண்டுகள் மழையாகப் பொழிகின்றன, எறிகணைகள் எட்டுத் திக்கும் வெடித்துச் சிதறுகின்றன, கனரக வாகனங்கள் வீடுகள், வாசல்கள் தோட்டங்களை அழிக்கின்றன. இவற்றை ஒரு போரில்லாமல் வெறும் கிளர்ச்சி என்று கூறமுடியுமா எனவும் வினாவினார். இவரின் உரையுடன் 5ஆம் கூட்டத்தொடர் நிறைவுற்றது.

## 6ஆம் கூட்டத்தொடர்

இரண்டாம் நாள் மாநாட்டின் இறுதிக்கூட்டமாக நடைபெற்ற 6ஆம் கூட்டத் தொடரில், "தமிழர்களின் இன்றைய நிலை" என்ற தலைப்பில் கருத்துரைகள் வழங்கப்பட்டன. இதில் முதலாவதாக உரையாற்றிய சிட்னி ஈழத்தமிழர் சங்கத் தலைவர் கலாநிதி சிறிஸ்கந்தராஜா அவர்கள், சிங்கள அரச பயங்கரவாதத்தினால் தனது குடும்பத்திற்கு ஏற்பட்ட துன்பங்களை விளக்கினார். மேலும் பேராசிரியர் துரைராசா அவர்களின் அழைப்பின்பேரில் இரு ஆண்டுகளுக்கு முன் யாழ் பல்கலைக்கழகத்திற்குச் சென்றபொழுது தமிழீழ விடுதலைப் புலிகளால் மிகவும் உன்னதமாக நடாத்தப்பட்டு வந்த குடிசார் ஆட்சியைக் கண்டு வியப்புற்றதாகவும் இப்படிப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளை ஒரு பயங்கரவாதக் கும்பல் என்று கூறுபவர்கள் தங்களுடைய அறியாமையினாலேயே இவ்வாறு கூறுகிறார்கள் என்றும் தெரிவித்தார்.

அடுத்ததாக, உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் உலகளாவிய கூட்டின் அரசியல் ஆலோசகர் சட்டத்தரணி உருத்திரகுமாரன் அவர்கள், தமிழர்களின் சுயநிர்ணய உரிமையின் முக்கியத்துவத்தை விளக்கி உரையாற்றினார். இரண்டு விதமான சுயநிர்ணய உரிமைகள் உள்ளதெனக் கூறிய அவர், ஒன்று வெளியான சுயநிர்ணய உரிமை என்றும் மற்றையது உள்ளக சுயநிர்ணய உரிமை என்றும் பிரித்து விளக்கினார். வெளியான சுயநிர்ணய உரிமையில், ஒரு இன மக்கள் பிரிந்து வாழ அனுமதிக்கப்படலாம் என்றுகூறிய அவர், உள்ளக சுயநிர்ணய உரிமையில் பாரம்பரிய பிரதேசங்களில் ஒரு சமஸ்டி ஏற்படுத்தி வாழமுடியுமென விளக்கினார். "சந்திரிகா அரசு, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைக் கொடுக்க மறுப்பதும் தமிழரை ஒரு தேசிய இனமாக மதிக்க மறுப்பதுமே பேச்சு வார்த்தைகள் முறிவடைந்தமைக்கும் பின்னர் ஆரம்பிக்க முடியாமல் இருப்பதற்குமான காரணங்களாகும்" என்பதை சுட்டிக்காட்டினார். சிறிலங்கா அரசின் சமாதானத் தீர்வு, இராணுவ ஆயுதங்களை வெளிநாடுகளில் பெறுவதற்காகக் காண்பிக்கப்பட்ட ஒரு ஏமாற்றுவித்தை எனவும் கூறினார். சிறிலங்கா சனாதிபதிக்கு வடக்கு-கிழக்கு மாநிலங்களின் சபைகளைக் கலைக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கும் வரை இவ்வாறான தீர்வினால் ஒரு பயனும் இல்லை என விளக்கியதோடு, வெளிநாட்டு முதலீடுகள் மத்திய அரசின் ஊடாகவே மாநில சபைகளுக்குக் கொடுக்கப்படும் என்ற கட்டுப்பாட்டையும் நிலம்பற்றிய பூரண அதிகாரம் மத்திய அரசிடம் இருப்பதையும் பிரதான குறைகளாக எடுத்துக்காட்டியதோடு, இவ்வாறான ஒரு தீர்வு அவசியமா என்ற கேள்வியையும் எழுப்பினார்.

"தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானத்தை ஒருபோதும் எதிர்த்ததில்லை என்பதை வலியுறுத்திய திலகர் அவர்கள், சமாதானம் என்பது நிலையானதாகவும், நீதியானதாகவும் தமிழரின் சுயநிர்ணய உரிமையை மதிப்பதாகவும் இருக்க வேண்டும்" என்றார்.

"ஐ. நா சபையின் சட்டதிட்டங்களின்படி தமிழீழ விடுதலைப் புலிகளை ஒரு விடுதலைக்காகப் போராடும் இராணுவம் என்று கூறமுடியுமே தவிர, பயங்கரவாதிகள் என்று கூற முடியாது" – சட்டத்தரணி. கரன் பாக்கர்

மாநாட்டின் இறுதிக்கூட்டத் தொடராகிய 6ஆம் கூட்டத் தொடரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினரான திரு. லோறன்ஸ் திலகர் அவர்கள் உரை நிகழ்த்தினார். "தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானத்தை ஒருபோதும் எதிர்த்ததில்லை என்பதை வலியுறுத்திய திலகர் அவர்கள், சமாதானம் என்பது நிலையானதாகவும், நீதியானதாகவும் தமிழரின் சுயநிர்ணய உரிமையை மதிப்பதாகவும் இருக்க வேண்டும்" என்ற கோட்பாட்டையும் வலியுறுத்திக் கூறினார். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சனாதிபதி சந்திரிகா மேல் ஆரம்பத்திலேயே சந்தேகம் இருந்ததாகத் தெரிவித்த அவர், அதற்கான காரணத்தையும் தெளிவு படுத்தினார். "சனாதிபதி சந்திரிகாவின் தந்தையார் எஸ்.


பேராசிரியர் மார்கிரெட் ராவிக்
நியூசிலாந்து மாசே பல்கலைக்கழகம்

டபிள்யு.ஆர்.டி. பண்டார நாயக்காவே 1956இல் சிங்களம் மாத்திரம் என்ற சட்டத்தைக் கொண்டுவந்து பிரிவினைக்கு வித்திட்டவர். இதன் பின்னணியிலேயே 1958இல் வெடித்த இனக் கலவரத்தின் போது நூற்றுக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். அவர்களது சொத்துக்களும் சூறையாடப்பட்டன. சனாதிபதியின் தாயார் ஆட்சியிலேயே 'தரப்படுத்தல்" முறை தமிழ் மாணவர்களுக்காகவே கொண்டுவரப்பட்டது. இதனால் விரக்தியடைந்த மாணவர்களே ஆயுதப்


சட்டத்தரணி. உருத்திரகுமாரன்
தமிழீழ விடுதலைப்புலிகளின் உலகளாவிய கூட்டின் அரசியல் ஆலோசகர்.

போராட்டத்தில் ஈடுபட்டார்கள்" என்பதையும் சுட்டிக்காட்டினார். எனினும் சனாதிபதி சந்திரிகா மேலைத்தேயத்தில் உயர்கல்வியை கற்றவர் என்பதனாலும்



திரு. லோறன்ஸ் திலகர்
மத்திய குழு உறுப்பினர்
தமிழீழ விடுதலைப்புலிகள்

அவரது கணவர் விஜயகுமாரணதுங்கா தமிழீழ விடுதலைப் புலிகளின் நியாயபூர்வமான கோரிக்கைகளை ஆதரித்தமையினாலுமே இவருடன் பேச்சு வார்த்தைக்குப் ஒப்புக் கொண்டதை திரு. திலகர் தெளிவாக எடுத்துக்கூறினார். ✷

# சிறுகதை

## போராளியின் பேனாவிலிருந்து



# கூட்டிவி மனிதர்

உமாநீதவன்

அந்தப் பிரதேசத்தை ஆக்கிரமித்துப் பரந்து நின்று மனிதப் பலியெடுக்கவென டாங்கிகள், கவச வாகனங்களுடன் உறுமிக்கொண்டிருந்த இராணுவத்தினருக்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்த போராளிகளின் தாக்குதல் மையப் பணியகம் அது. இராணுவத்தினரின் எறிகணைகள் அங்கிங்கென நினைத்த இடங்களிலெல்லாம் விழுந்து, விழுந்து மின்னலென வெளிச்சங்களையும் இடியென முழக்கங்களையும் எழுப்பிக் கொண்டிருந்தன. வாயில் காப்பகழி ஒன்றினுள் நான் நின்று கொண்டிருந்தேன். நேரம் இரவு பதினொருமணி

> "உங்களுக்கும் எத்தினையோ கடமையள், வேலையள் இருக்கும். குறைநினைக்காதீங்கோ. நீங்கதான் வந்து அந்தப்பிணங்களுக்கு ஏதாவது உதவிசெய்ய வேணும். நான் அதுகளுக்குக் கிட்டின சொந்தம்தான். என்ர குடும்பம் எங்கையெண்டே தெரியாது. சிதறி ஓடுப்பட்டு எங்கையேனும் இருக்குதுகளோ, செத்திச்சுதுகளோ?"

இருந்திருக்கும், என்னை விடு, என்னை விடு என்று கெஞ்சுமாப் போல் கிறீச்சிச், கிறீச்சிச் என ஒலியெழுப்பிக்கொண்டு ஒரு சைக்கிள் வந்து கிட்டத்தில் நின்றது. அது மிகப்பழைய சைக்கிளாக இருந்திருக்க வேண்டும். அதிலிருந்து ஒருவர் இறங்கி மெல்ல மெல்ல நொண்டி நொண்டி அடியெடுத்து வைத்து வாயிலடியில் வந்து நின்று மூக்கைச் சீறிக் கொண்டார். சற்று நிதானித்துப் பின் "டோச்"சை அடித்து அவதானித்தேன். ஒரு வயது போன ஐயா. கறுத்து மெலிந்த உடலமைப்பு. சாறத்தை மடித்துக் கட்டியிருந்தபடியால் அவர் போட்டிருந்த செயற்கைக் காலைக் காண முடிந்தது. தோளிலிருந்த துண்டைக் கையிலெடுத்தார். "பொதுமக்களே இல்லாத இப்பிரதேசத்தினுள் இந்த நேரத்தில் இவர் ஏன் வந்து இவ்விடத்தில் நிற்க வேண்டும். உளவாளியாக அன்றிக் களவாளியாக இருக்கலாமோ" என்று நினைத்துக்கொண்டேன். "இல்லை. அப்படியிருக்காது" என்று எனக்குள் மறுத்துக்கொண்டு அவரின் அருகில் சென்றேன். மடித்துக் கட்டியிருந்த



சாறத்தை அவிழ்த்து விட்டுக்கொண்டு தேம்பத் தொடங்கினார். பிறகு சிறுபிள்ளை போல இழுத்து இழுத்து, அழுதழுது பின்வருமாறு ஒப்புவித்தார்.

"தம்பி நேற்று அடுத்த கிராமத்தில 'ஷெல்' விழுந்து ஒரு வயசுபோன தாயும், மகளும் அவாவின்ர பிள்ளையும் செத்துப் போச்சுதுகள். உதவிக்கு ஆக்களில்லாம நேற்றிலயிருந்து மூண்டு பிணங்களும் அநாதரவாக் கிடக்குது. அயலும், மற்றச் சொந்தக்காரரும் உதவிக்கு வராம ஆமிக்கும் 'ஷெல்'லடிக்கும் பயந்து ஓடி விட்டுதுகள். உங்களுக்கும் எத்தினையோ கடமையள், வேலையள் இருக்கும். குறைநினைக்காதீங்கோ. நீங்கதான் வந்து அந்தப்பிணங்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேணும். நான் அதுகளுக்குக் கிட்டின சொந்தம்தான். என்ர குடும்பம் எங்கையெண்டே தெரியாது. சிதறி ஓடுப்பட்டு எங்கையேனும் இருக்குதுகளோ, செத்திச்சுதுகளோ? முந்தியும் 'ஷெல்' விழுந்துதான் என்ர ஒரு காலைக் கொண்டுபோட்டுது. என்னாலயும் தனிய ஒண்டும் செய்யேலாது தம்பி."

நான் எனது பொறுப்பாளருக்கு விடயத்தை எடுத்துச்சொல்லி அனுமதி எடுத்துக்கொண்டு ஐயாவுடன் புறப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய்தேன். ஸ்கூட்டருக்கு மண்ணெய் இருந்தது. 'சூப்பி' க்கு 'ரின்னர்' இருக்கவில்லை [பெற்றோல் இல்லாத காரணத்தால் மோட்டார் சைக்கிள்கள் மண்ணெய்யில் ஓடுவதே வழக்கமாகி விட்டது. முதலில் 'ரின்னர்' சொட்டு விட்டே இயக்க வேண்டும். 'ரின்னர்' வைத்திருக்கும் குப்பியை 'சூப்பி' என்று கதைத்துக் கொள்வதே வழக்கமாகிவிட்டது.] அதனையும் எடுத்து, கொஞ்சம் கொஞ்சமாக விட்டு, ஊதி பெரிய கஸ்ரப்பட்டு ஸ்கூட்டரை இயக்கி எடுத்துக் கொண்டு ஐயாவுடன் அவரது கிராமம் நோக்கிப் புறப்பட்டேன்.

அது கடற்கரைக் கிராமம், இராணுவத்தினர் அங்கும் கடலால் வந்து தரையிறங்கியிருக்கக்கூடிய சாத்தியம் இருந்தது. எங்கிருந்தும் அவர்கள் தாக்கக்கூடும் என்ற நினைப்பு என்னுள் இருந்தது. ஸ்கூட்டருக்கு 'லைற்' இல்லை. அதற்குள் போடவும் முடியாது. இடைக்கிடை 'டோச்சை' அடித்து மெது மெதுவாகவே ஸ்கூட்டரை ஓட்ட முடிந்தது. தெரியாத பாதை: ஐயா வழிகாட்டினார். எறிகணைகள் விழுந்து பெரிய பெரிய குன்றும் குழியுமாகப் பாதை சீரழிந்திருந்தது. இருளின் பயங்கர அமைதியை இரைந்து: கடகடத்துக் – குலைத்துக் கொண்டு ஸ்கூட்டர் அவற்றில் விழுந்தெழுந்து ஊர்ந்தது. இராணுவத்தினர் பதுங்கியிருந்து பாய்ந்து பிடித்து விடுவார்களோ என்ற பயமும் எதற்கும் முகங்கொடுக்கிற துணிவும் சேர்ந்து என்னை நிற்கவைத்து, எனது T56–2துப்பாக்கியை 'பட்'நிமிர்த்தி 'சேம்பர்' ஏற்றி சுடுநிலைக்குக் கொண்டுவர வைத்தன். இதற்கிடையில் ஸ்கூட்டரின் இயக்கம் நின்றுவிடவே திரும்ப அவனை இயக்குவதில் முனைந்தேன். அது இயங்காமல் சிணுங்கிச் சிரித்துக் கொண்டிருந்தது. சினங்கொள்ள வைத்தது. வீடு பக்கத்தில்தான் என்றார் ஐயா. அவ்விடத்திலிருந்து ஸ்கூட்டரை உருட்டிக்கொண்டே ஐயாவுடன் நடந்தேன். ஸ்கூட்டர் ஏதோ பயந்து வெருண்டது போல மணலில் புதைந்து புதைந்து உருளமறுத்தது. வலுக் கட்டாயமாக உருட்டி இழுத்துக் கொண்டு போனேன்.

எட்டத்தில் வெடிச்சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன. நாய்கள் ஊளையிட்டு அங்குமிங்கும் ஓடித்திரிந்தன. மனிதர்கள் யாரையுமே காணவில்லை கிராமத்துக் கொட்டில்களும், வளவுகளும் வெருண்டு முழுசிக்கொண்டு இருளில் பதுங்கி ஒளித்திருக்குமாப் போல் மௌனித்து இருந்தன. அதுவரை அவ்விடத்திற்கு இராணுவத்தினர் வந்ததாகத்தெரியவில்லை. 'இது தான் தம்பி இடம்' என ஐயா காட்டினார். ஸ்கூட்டரை நிப்பாட்டிவிட்டு 'டோச்' யையும் துப்பாக்கியையும் கையிலெடுத்துக் கொண்டுவளவுக்குள் சென்றேன். 'டோச்'சை சுழற்றி அடித்து நோட்டமிட்டேன்.

படலைக்கு அருகிலிருந்த கிழட்டுப் புளியமரத்தின் பெருங்கிளைகள் இரண்டு பாறிச்சரிந்து கிடந்தன. இலைகளும் சிறு சிறு கெட்டுகளும் உதிர்ந்து கருகிக் குவிந்திருந்தன. எங்கிருந்தோ சில வண்டுகள் ஒன்று விட்டொன்று இரைந்து கொண்டேயிருந்தன. கொட்டிலின் கூரை பிய்ந்து தொங்கி உரத்து எதையோ சொல்லிக் குழறுவது போலிருந்தது. பக்கத்திலிருந்த குசினியின் தட்டி சரிந்து அலுமினியச் சட்டி பானைகள் நெளிந்து ஓட்டைகள் விழுந்திருந்தன. தட்டி மூலையிற் கொழுத்துப் பெருத்திருந்தது போன்ற ஒரு பூனை, வித்தியாசமாய்ச் சுருண்டு கிடந்தது. அது செத்து ஊதிக் கிடந்திருந்திருக்கிறது என்றே இப்போது எண்ணத்தோன்றுகிறது. முற்றத்தில் உரித்த, உரிக்காத, வெட்டிய, வெட்டாத வெங்காயங்கள் சிதறி இறைந்து கிடந்தன. சரிந்து கிடந்த தட்டிக்கும் வேலிக்கும் இடையே ஒரு ஐம்பது வயது மதிக்கத்தக்க ஆச்சியின் உடல் நீட்டி நிமிர்ந்து கிடந்தது. உயிர் வெளியேறிப் பறந்து காயம் எது வென்று அறிய முடியவில்லை: முயலவுமில்லை. சூழவும் இரத்தம் ஊறிக்காய்ந்திருந்தது. வெள்ளை நூற்சாறி நிறம் மாறியிருந்தது. முழித்திருந்த கண்களைச்சுற்றி எறும்புகள் ஊர்ந்து வட்டமடித்துக் கொண்டிருந்தன. ஊன்வெடில் கலந்த பிணவாடை எழத்தொடங்கியிருந்தது. அருகே ஒரு அப்பு குந்தியிருந்து ஆச்சியின் கைகளைத்தடவிக் கொண்டிருந்தார் அடைத்த தொண்டையைச் செருமிக் கொண்டிருந்த மாதிரியும் இருந்தது. ஆனால், கண்ணீர் வரவில்லை. முதல் நாளிலிருந்து அழுதழுது கொட்டி வற்றிப்போயிருக்க வேண்டும். "கடசி நேரத்தில எல்லாரும் விட்டுவிட்டுப் போயிட்டீகளே, அது என்னையும் கொல்லியிருக்கலாமே" என்றவிசும்பல் வார்த்தைகள் மட்டும் என்னை ஈர்த்துக் கொண்டதாலோ, என்னவோ தெளிவாய்க் கேட்டன. "இவர் ஆச்சியின்ர கணவர் தம்பி" என்று ஐயா சொன்னார். அப்புவால் எதையும் அவதானிக்கவோ, எதுவும் செய்யவோ முடிந்திருக்கவில்லை, அப்போது.


'டோச்'சைத் திருப்பி அடித்தேன். முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு அக்காவின் உடல் பக்கவாட்டிற் கிடந்தது. கொட்டிலின் மண்சுவர் விழுந்து கால்களை மூடியிருந்தது. இரண்டு கைகளும் பிடுங்குப்பட்டு ஒரு பக்கமாய்க் கிடந்தன இருதயம் வெளியிற் தெரியுமளவிற்கு மார்பு பிரிந்து கிடந்தது. கிழிந்து தொங்கிய முழுச்சட்டை இரத்தத்தில் ஊறிக்காய்ந்து விறைத்திருந்தது.

இப்போதும் எனக்கு நேற்றுக்கண்டது போல நினைவிருக்கிறது. கொட்டில் விறாந்தையில் விளையாட்டு முடிந்ததும் பிள்ளைகள் தூக்கியெறிந்து விட்டுப் போகிற பொம்மை போல் பதினைந்து வயதையே கண்டிருக்கக்கூடிய ஒரு தங்கையின் உடல் விசுக்குப்பட்டுக் கிடந்தது. இளஞ்சிவப்புக் கட்டைச் சட்டை இடையிடையே கருஞ்சிவப்பாகியிருந்தது. சட்டை, கை, கால்களை நிமிர்த்திச் சரிப்படுத்தி விட்டேன். வெள்ளையும், சிவப்பும், மஞ்சளும் கலந்த நிறம். நிச்சயம் அந்தப்பிள்ளை மிக அழகானதாகவே இருந்திருக்க வேண்டும். தலைசளிந்து முறுகித் திருகுப்பட்டிருந்ததினால் முகத்தைச் சரியாக என்னால் அடையாளம் காணமுடியவில்லை. ஆகவே அது பற்றி என்னால் கூறமுடியவில்லை ஆச்சியின் மகள் அந்த அக்கா என்றும் அக்காவின் மகள் அந்தத் தங்கையென்றும் ஐயா மூலம் அறிந்து கொண்டேன். மூன்று சந்ததியே அங்கு சரிந்து கிடந்தது. அப்போது என்காதுகளில் ஒலித்துக்கொண்டேயிருந்த சில்வண்டுகளின் சினம் தரும் இரச்சல், சோகத்துயர்தரும் முகாரியாய்த் தொனிமாறி என் செவிப்பறைகளில் ஊடுருவி இருதயத்தில் மோதிக்கரைவது போலிருந்தது.

> "நீங்கள் செத்துப் போயிருந்தாலும் இண்டைக்கு இதே நிலைமைதான். சுயநலத்திலேயே ஊறிப்போயிருக்கிறயளே, அயலவர்களுக்கு, செத்தவர்களுக்கு ஒரு சிறு உதவி கூடச் செய்ய முன்வராமல் நீங்கள் மனிசரெண்டு ஏன் இருக்கிறியள். எங்கள நினைச்சுப்பாருங்கோ உங்களுக் காகத்தானே எத்தினையோ துன்பங் களையும் சுமந்து கொண்டு போராடிக் கொண்டிருக்கிறம்"

எல்லாவற்றையும் பார்த்துவிட்டு ஆட்கள் யாரையாவது உதவிக்குத்

தொடர்ச்சி 18 ம் பக்கம்...



நாவண்ணன்

# த்தனை

# வித்துக்கள்

**அத்தியாயம் 8 இன் தொடர்ச்சி**

அதன் கண்ணிலிருந்து நீர் வடிந்தது–

நாய் அழுமா? ஜிம்மி அழுதது!

இனிமேல்– எவரும், எவரையும் "நாயிலும் கீழவர்" என்று திட்டாதீர்கள். திருத்திக் கொள்ளுங்கள்,

"சந்திரிகாவிலும் கீழவர்" என்று.

இனியவன் எழுதியுள்ள இந்தச் செய்தியை வரிக்குவரி படித்து முடித்தபோது, முற்பிறவியில் கூட, இனவெறி பிடித்த சிங்கள அரசியல்வாதியின் வீட்டிலோ அல்லது நரமாமிசம் உண்பதற்கு 'பிரித்' ஓதி அனுப்பும் எந்தப் பிக்குவின் 'பன்சல' விலோ ஜிம்மி நாயாகத்தானும் பிறந்திருக்காது என்று நம்பினேன். ஜிம்மியும், ஐயாக்கிளி வாத்தியாரின் அந்த அன்பு ஜீவனும் மனிதத்தில் – மானுடத்தில் – மனித நேயத்தில் பன்மடங்கு உயர்ந்து நிற்பதாகவே தோன்றியது.

இந்த நாட்டின் பொருண்மிய மேன்மைக்காக, 150ஆண்டுகளுக்கு மேலாக மலைச்சாரல்களில் தம்மைப் பசளைகள் ஆக்கிவிட்ட மலையகத் தமிழர்களுக்கு உரிமை வழங்க மறுக்கும் பேரினவாதிகளுக்கு, இந்த ஜீவன்களுக்கு உரிய நன்றி உணர்வில் காற்பங்குகூட இருந்திருக்கக் கூடாதா?–

"சிங்களத்தைச் சிங்களவர் பேசாவிடில், அம் மொழி அழிந்துவிடும்" என்று ஆங்கில மோகங்கொண்ட சிங்கள அரசியல்வாதிக்கு – தேசிய மொழிப்பற்றை ஊட்டிவிட்ட தமிழர்களின் தொண்டைகளுக்குள் சிங்களம் மட்டும் சட்டத்தை பலவந்தமாகத் திணிக்கத் துணிந்த பேரினவாதிகளுக்கு, இந்த ஜீவன்களுக்கு உள்ள நன்றி உணர்வில் ஒரு துளியாவது இருந்திருக்கக்கூடாதா?

காற்றின் மாற்றத்துக்கு ஏற்ப கரைகளை மாற்றி வந்து, தமிழர்தம் கடற் கரைகளில் குடிசை போட்டு வாழ்ந்து, வலை இழுத்து வயிறு நிரப்ப வாசல் திறந்துவிட்ட தமிழினத்தின் பெருந்தன்மைக்குப் பிரதி நன்மையாக, வாழையடி வாழையாய் இம் மண்ணில் வாழ்ந்த பரம்பரையைக் குடியெழுப்பி பரதேசிகளாய்த் துரத்திவிட்டு, நாடோடி மீனவர்க்கு நம்மவர் நிலத்தைச் சீதனமாய்க் கொடுக்கத் துணிந்த சிறுமதிச் சிங்கள வாதிகளுக்கு இந்த ஜீவன்களின் நன்றி அறிவில் நாலில் ஒரு பங்கு – வேண்டாம் – நாற்பதில் ஒரு பங்காவது இருந்திருக்கக்கூடாதா?

சிங்கள அரசின் நிர்வாகத்தில் நம்பிக்கைக்குரிய உயர்பீடங்களில் பொறுப்பாளர்களாய்– நிர்வாகிகளாய்– அந்தரக்கச் செயலாளர்களாய்– ஆளுவோரின் மூளைகளாய்ச் செயற்பட்ட தமிழர்களது பிள்ளைகளின் மூளைகளை, மூளி ஆக்க முனைந்து தரப்படுத்தல் கொண்டுவந்த தன்னலவாதிகளுக்கு, இந்த ஜீவன்களின் நன்றிப்பெருக்கில் துளியாவது இருந்திருக்கக்கூடாதா?

யாழ்ப்பாணத்தில் உற்ற நண்பர்களாய், ஒரு தாய் பிள்ளைகள்போல் ஒரு தட்டில் உண்ட பல்கலைக்கழகத்து சிங்கள மாணவர்கள்– 1977 ஆவணி கலம்பகத்தில் வழியில் உண்பதற்குக் கட்டுச்சாதமும் கட்டிக் கொடுத்து, ஆபத்து ஏதுமின்றி அனுப்பிவைத்தபோது, நன்றியோடு விடைபெற்றுச் சென்ற அவர்கள்– அநுராதபுரத்தில், "யாழ்ப்பாணத்தில் புத்த பிக்குகள் கொல்லப்பட்டனர், விகாரைகள் தகர்க்கப்பட்டன, சிங்கள மாணவிகளின் அங்கங்கள் அரியப்பட்டன, அவர்கள் அவசங்கை செய்யப்பட்டனர்" என்று பேசும்படியாக அவர்களது நன்றியுணர்வுக்கும், நட்புறவுக்கும் நஞ்சூட்டிவிட்ட நாச சக்திகளுக்கு, இந்த ஜீவராசிகளின் நன்றி உணர்வில் அற்ப சொற்பமாவது இருந்திருக்கக்கூடாதா?

"போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்" என்ற பொன் மொழி வேந்தர்கள்– பொய்யாமொழி நாயகர்கள்!– காலத்துக்குக் காலம் தூண்டிவிட்ட இனக்கொலைகளால் நண்பனுக்கு எதிராக நண்பனை– அயலவனுக்கு எதிராக அயலவனை– எஜமானுக்கு எதிராக ஊழியரை– உயிர்காக்கும் வைத்தியனுக்கு எதிராக நோயாளியை– நன்றி மறந்து கொலைஞர்களாய், கொள்ளையராய், காமுகராய் செயற்படவைத்த கொடுமைகளை என்னவென்று சொல்வது!

தமிழர்கள்தாம் போகட்டும், நாம் போராடப் பிறந்தவர்கள்– உயிர்கொடுப்புகள் எமது உரிமை– கடமை.

அமைதி– சமாதானம் வேண்டி, அசையாத நம்பிக்கையுடன் அணியணியாகச் சென்று வாக்குகளை அள்ளிக் கொடுத்தார்களே சிங்கள ஏழைகள்– அப்பாவிகள்! அவர்கள் தம் பிள்ளைகளைப் பந்துகளாய்– பகடைக்காய்களாய்– பலிக்கடாக்களாய்– ஏமாற்றி யுத்த முனைக்கு அனுப்பி, அவர்கள் இரத்தமும் தசையும் ஈழ மண்ணில் சிதறிவிழுகின்ற அவலக்காட்சிகளைக் கண்டுங்கூட, குருதியில் 'குடி' அரசு நடாத்தும் பதவிவெறிப் பாதகர்களுக்கு இந்த ஜிம்மிக்கு ஏற்பட்ட பாச உணர்வுதானும் ஏற்பட வேண்டாமா?



சிங்களப் பேரினவாதிகள், தாம் ஆளும் காலத்தின் ஆயுளை நீடிப்பதற்கு–தாம் வாழும்காலத்தின் வரலாற்றில் இடம்பெறுவதற்கு–காலம் காலமாய்க் கையாண்டுவந்த கலை ஈழத் தமிழர்களின் இரத்தத்தில் குளிப்பதுதான்.

"ஆண்ட ஐ.தே.கட்சியென்ன, தன் அப்பனே தப்பிழைத்தான்" என்று உத்தமி வேடம் போட்டு, அதி உத்தம ஜனாதிபதி உப்பரிகையில் உட்கார்ந்து கொண்டார் சந்திரிகா. ஆட்சிக்கு வந்ததும் அடுத்த யூலை 15இற்கு முன் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சிமுறையை அகற்றி–நாடாளுமன்ற ஆட்சிமுறையைக் கொண்டுவருவேன் என்று வாக்களித்து, வாக்கு வாங்கி நாற்காலியில் ஏறி உட்கார்ந்த பின்னர்தான் அதன் உன்னதம் தெரிந்தது. அதைவிட்டால் வரக்கூடிய உபத்திரவம் புரிந்தது!

நாளும் நெருங்க நெருங்க மக்கள் நாடிபிடித்துப் பார்க்கத் தொடங்க– பதவி போகப்போகிறதே என்ற பதற்றம் பண்டாவின் மகளுக்கு. சிங்கள மக்களின் சிந்தையைத் திருப்ப என்ன" வழி.......? இருக்கவே இருக்கிறது முந்தையர் படிப்பித்த தந்திரம்.......!

பௌத்த குருமாரும், பதவியில் இருப்போரும் ஆட்டுவித்தபடியெல்லாம் ஆடுகின்ற சிங்கள பௌத்தர்களுக்குப் போர்ப்போதையை ஊட்டி, தனது பதவி முக்காட்டைப் பத்திரப்படுத்தினார்.

'வெண்தாமரை இயக்கம்' என்ற போர்வையின் வெறியை ஊட்டி, தனிநாடு கோரும் தமிழரைத் தறிப்பது ஒன்றேதான் தாயகக் கடன் என்றார்.......!

பிரான்ஸ் தேசப் பட்டதாரியின் பசப்புக்கு, பரிதாபத்துக்குரிய சிங்கள இனம் மீண்டும் ஏமாந்தது.

தமிழன் அறிவுக்குக் கொள்ளி வைத்தவரான பிரதமர் அம்மாவும்– ரத்தவெறி பிடித்த மாமா ரத்வத்தவும்....... தத்துவங்கள் பேசித் தம்வசப்படுத்த மதி மயங்கிப் போனார் மகா உத்தமி.

"கொடுத்த வாக்குறுதியை யூலை 15இற்கு முன்னர் நிறைவேற்று" என்று குரல் கொடுக்கத் தொடங்கிய சிங்கள மக்களைத் திசைதிருப்பக் கையாண்ட சந்திரிகாவின் திரு விளையாடல்' தான் 'முன்னோக்கிப் பாய்தல்' ஆக்கிரமிப்பு நடவடிக்கை.

09. 07. 1995 ஞாயிறு காலை 6. 00 மணிக்கு, மாதகலிலிருந்து பொன்னாலை, மூளாய், வட்டுக்கோட்டை ஊடாக ஓர் அணியும் தெல்லிப்பழையிலிருந்து அளவெட்டி சண்டிலிப்பாய், துணைவி, சங்கரத்தை ஊடாக இன்னுமொரு அணியும் புறப்பட்டு இணைந்து, அராலியை அடைந்து, யாழ்ப்பாணத்தை நோக்கி முன்னேறுவதே இந்தப் பாய்ச்சல் நடவடிக்கையின் படம். அமெரிக்க இராணுவ வல்லுநர்களின் ஆலோசனையின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கை இது.

புலி பதுங்கி நின்றது, பாய்ச்சலுக்கு ஆயத்தமாகவே →

புலி பதுங்கி நின்றது, பாய்ச்சலுக்கு ஆயத்தமாகவே என்பதைப் புரியாத நிலையில், அதைப் பலவீனமாகக் கருதி எழுபத்தெட்டுச் சதுர கிலோமீற்றர் கைப்ப



ற்றப்பட்டது என்று ஆர்ப்பாட்டம் – ஆரவாரம் கொழும்பில்! 13ஆம் திகதி பகல் 1. 00 மணிக்கு இணைந்த படையினரின் மகிழ்ச்சி, 14ஆம் திகதி பகல்

மக்களுக்கு உரை நிகழ்த்திய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா–

"அழகான சுவையான மாம்பழம். அதற்குள்ளே இப்பொழுது புழு ஒன்று புகுந்து அரித்துக்கொண்டிருக்கிறது. அந்தப் புழுவை வெளியே எடுத்து அழிக்கும் முயற்சியில் மாம்பழம் நசுக்கப்படுவதை தவிர்க்க முடியாமல் உள்ளது. எங்கள் நாடு எவ்வளவு அமைதியாக இருந்த நாடு! இப்பொழுது இரத்த ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. வெகுவிரைவில் புலிகளிடமிருந்து எல்லாரையும் விடுவித்து நாம் அமைதியைக் கொண்டு வருவோம்" என்றார்.

எங்கள் அழகான நாடான ஈழம் எனும் மாம்பழத்தில் புகுந்து நின்றப் பேரினவாதப் புழுவான சிறிபால கூறிய கதை, அவருக்கும் அவர் போன்றோருக்குமே பொருத்தமானது.

வத்தோடு போட்டிபோட்டுச் செய்துகொண்டிருந்தனர். ஆமாம்....... வீடுகளை உடைத்து விலையுயர்ந்த பொருட்களைச் சூறையாடுவது, சிங்களச் சிப்பாயை விடச் சொந்தச் சகோதரர்களின் பொருட்களுக்கு இவர்கள் உரிமை கொண்டாடுவது நியாயமானது என்பது இவர்களது சித்தாந்தம்.

கல்வளைப் பிள்ளையார் கோயிலுக்கு ரத்வத்த வருகைதந்தபோது, அவர் கண்ட கண்கொள்ளாக் காட்சிகளில் ஒன்று கோழி ஒன்று குறுக்கால் ஓடியமை.

கல்வளைப் பிள்ளையார் கோயிலில் குழுமியிருந்த மக்களிடம் பேசுகையில், "கோழிகளுக்குக் கூட நாம் குந்தகம் செய்யவில்லை' என்று தமது கொல்லாமைக்கு விளக்கம் கூறினார்.

கோயிலுக்கு அண்மையில், ஒரு வீட்டில் உள்ள கூட்டில் இருந்த இருநூறு கோழிகளில்– அந்த மூன்று நாட்களிலும்– 150 கோழிகளை, அவர் அனுப்பிவைத்த கோழிக் கள்வர் தின்று ஏப்பமிட்டதைச் சொல்லிக்காட்ட யாருக்குத் துணிவு வரும்? "கோழி திருடிய கள்ளனும் கூட இருந்து" பெருமை ப்பட்டுக்கொண்டி ருந்தான். அளவெட் டியில் இன்னு மொரு வீட்டில் கோழிகளே இல்லாத கூட்டில், 200 கோழிகள் மூன் று நாளில் கூடி வாழத் தொடங்கியது எப்படி? பாவம் ரத்வத்த! கமராவுக்கு முன் நடிக்க வந்த கதாநாயகன் தானே? கேட்பவர்கள் கடை வாய்க்குள் சிரித்துக் கொண்டனர்.




1.00 மணியோடு பனியென மறைந்தது – காரணம், தமிழர் படையணி திரண்டது.

சிறிலங்கா இராணுவத்தின் வியூகம் புலிகளால் சிதறடிக்கப்பட்டது. "ஜயவேவா" கோஷம்" மகே அம்மே!" ஓலமாக மாறி ஒலித்தது.

அவர்கள் வெற்றி பெற்றுவிட்டதாக எந்தளவுக்குப் பெருமைப் பட்டுக்கொண்டார்களோ, அவர்களைவிடப் பெருமைப்பட்டுக் கொண்டவர்கள் அரசாங்கத்தின் ஒட்டுண்ணிகள்தான். காட்டிக்கொடுத்துக் கஞ்சி குடிக்கும் கூட்டத்துக்குத்தான் களிப்பு அதிகம்.

# வீழ்ந்தன

இந்த ஒரு நாள் ஆட்சியை, 78சதுர கிலோ மீற்றருக்குள் நடாத்துவதற்காகத்தான் தமிழ் மக்களில் 239 அப்பாவிகளை –பொதுமக்களை சிங்கள அரசு பலிகொண்டது. நூற்றுக்கும் அதிகமான சிங்களச் சிப்பாய்களைப் பலிகொடுத்தது சந்திரிகா அரசு! அநுரத்த ரத்வத்த, நிமால் சிறிபால டி சில்வா போன்ற அரச நடிகர்கள் ஆலயங்களில் காளாஞ்சி வாங்கியும், அடுப்படியில் அகப்பை பிடித்துக்கொண்டும் நடித்த நாடகங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒளிபரப்பிய ரூபவாகினிக்கு, "புளுகுப் பெட்டி" என்று சிங்களவர்களே புதுப் பெயர்கொடுத்தனர்.

ஜனாதிபதி சந்திரிகாவும் ஐ.தே.க சாதிக்காததைத் தான் சாதித்துவிட்ட உற்சாகத்தில், சிவில் நிர்வாக உத்தியோகத்தரை அனுப்பி 'தடல் புடல்' ஆயத்தங்கள் செய்யத்தொடங்கி, 14ஆம் திகதியோடு தடால் என்று மண்கவ்வினார்.

ஹொகான் தலுவத்த, உடுகம்பொல, அநுரத்த ரத்வத்த, நிமால் சிறிபால டி சில்வா போன்றவர்கள் எல்லாம், "இன்னும் சில நாட்களில் நாம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிவிடுவோம்– புலிகளின் பிடியிலிருந்து அனைவரும் விடுவிக்கப்படுவார்கள். சட்டமும் ஒழுங்கையும் நாம் நிலைநாட்டப் போகின்றோம்" என்று தமது பிடிக்குள் இருந்த மக்களுக்கு நம்பிக்கையூட்ட முயற்சித்துக் கொண்டிருந்தனர்.

கும்பளாவளைப் பிள்ளையார் கோவிலில் கூடியிருந்த

அதனால்தான் "நானே ராஜா நானே மந்திரி" பாணியில் அவர்கள் நடவடிக்கைகள் அமைந்திருந்தன!

உளவுப் பிரிவினர் என்று தம்மை அறிமுகப்படுத்திக்கொண்டு, பிரபாநாத் என்பவரின் தலைமையில் ஒரு கும்பல் விசாரணையில் ஈடுபட்டது. ஊரவரின் பெயர்களை எல்லாம் உச்சரிப்புப் பிசகாமல் கூறி விசாரணை செய்தனர். "உங்கள் ஊரில் யார் யார் புலிகள்? உங்கள் குடும்பங்களில் எத்தனை புலிகள்?" என்பனவே அவர்கள் விசாரணைகளாக அமைந்தன. விசாரணை செய்வதை விட, இன்னும் ஒரு முக்கிய சமூகத்தொண்டை, தம் மக்களுக்கு இராணு

நான்கு நாட்களுக்கு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவோம் என்று அரசும், இராணுவத் தலைமைகளும் வீராப்புப் பேசித்திரிந்த அதேவேளை, இவர்கள் கூட்டிவந்த காவற்படைகள் பாவம், நாம் எந்த நேரத்திலும் ஓடுவதற்குத் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று முன் எச்சரிக்கையாகவே இருந்தார்கள். இவர்களிலே கூட்டிவந்தவர்களுக்கும் நம்பிக்கையில்லை.

ஆனபடியாற்றான் மாலையாகிவிட்டால் ஆலயத்தின் பிரதான வாயிலைப்பூட்டி, சாவியை உள்ளே இருப்பவர்கள் வைத்துக்கொள்ள வேண்டும். அதன்பின்னர் பாதுகாப்புப் படையினர் எவரும் உள்ளே செல்லக்கூடாது என்பது உயரதிகாரிகளின் கட்டளை. அத்தனை நம்பிக்கை அவர்கள்மீது! இது கல்வளைப் பிள்ளையார் கோயிலில் நடந்தது.

தொடரும்...



## இருட்டில் மனிதர்...

தேடிப்பார்ப்பதெனக் கிராமத்திற்குள் அலைந்தேன். முதலில் ஒரு நடுத்தரவயதுடையவரைக் கண்டு காரணத்தைச் சொல்லிக் கூட்டிக்கொண்டு நடந்தேன். கதை கேட்டேன். சத்தத்தினைக் காணவில்லையெனத் திரும்பிப் பார்த்தேன். ஆளையே காண வில்லை. 'டோச்'சைத் தூரத்திற்கு அடித்துப் பார்த்தேன். ஒரு முடக்கில் ஓடி மறைந்து கொண்டிருந்தார். சரி போகட்டும் என்று திரும்பவும் முயன்றேன். இரண்டு பேர் கிடைத்தார்கள். இருவரும் வயது போனவர்கள். இருவருக்கும் விடயத்தைச் சொல்லி உதவிக்கு வருமாறு வேண்டினேன். "ஐயோ தம்பி எனக்குப் பிணத்தைக் கண்டாலே குலைபதறும். ஒத்துவராது. காய்ச்சல் வரும். நான் வரமாட்டேன்" என்றார் ஒருத்தர். ஆமிக்காறங்கள் வரப்போறாங்கள் கனசாமான்களெல்லாத்தையும் அப்புறப்படுத்தவேணும். என்னை விடுதம்பி" என்றார் மற்றவர். எப்படிச் சொல்லியும் கேட்கவில்லை. எனக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. "நீங்கள் செத்துப் போயிருந்தாலும் இண்டைக்கு இதே நிலைமைதான். சுயநலத்திலேயே ஊறிப் போயிருக்கிறயளே, அயலவர்களுக்கு, செத்தவர்களுக்கு ஒரு சிறு உதவி கூடச் செய்ய முன்வராமல் நீங்கள் மனிசரெண்டு ஏன் இருக்கிறியள். எங்கள நினைச்சுப்பாருங்கோ உங்களுக்காகத்தானே எத்தினையோ துன்பங்களையும் சுமந்து கொண்டு போராடிக் கொண்டிருக்கிறம்" என்று ஏசினேன். அவர்கள் ஒன்றும் பேசவில்லை. வருவதாகக் கூறினர்.

இரண்டு பேரையும் கூட்டிக்கொண்டு வண்டில் எடுப்பதற்காக இன்னொரு வீட்டுற்குச் சென்றேன். முற்றத்தில் மின்மினிப்பூச்சிபோல ஒரு சிறு ஒளித்துண்டு மேலும் கீழுமாய் ஓடிக் கொண்டிருந்தது. கிட்டப்போனேன். ஒரு ஐயா பீடி குடித்துக் கொண்டிருந்துவிட்டு திடுக்கிட்டு எழுந்தார். "நான் ஆமியாக்கும் எண்டு நினைச்சுப் பயந்திட்டன். என்ன தம்பி" என வினவினார். அவரிடமும் விடயத்தைச் சொல்லி வண்டிலைத் தந்துதவுமாறு கேட்டேன். "இதை மட்டும் கேக்காத தம்பி. இது வீட்டு வேலை, வயல் வேலை செய்யிற வண்டில். இதில் பிணத்தை ஏத்தக்கூடாது. நான் சம்மதிக்க மாட்டன்" என்று எரிந்து விழுந்தார். அவரது உயிருக்கோ உடமைகளுக்கோ உத்தரவாதமில்லாத அந்த நெருக்கடி மிகுந்த நிலையில் கூட அவர் இந்தப்பிடிவாதத்தை இறுகப் பற்றியிருந்தார். எனக்கு அழுவதா, சிரிப்பதா, பறிப்பதா ஒன்றும் செய்யப் புரியவில்லை. அந்த நடுச்சாமத்திலும் எத்தனையோ விளக்கங்களை எடுத்துச் சொல்லி, வெகு பிரயத்தனப்பட்டு இறுதியாய் அரை மனத்துடன் சம்மதிக்க வைத்தேன். மாடுகளையும் பூட்டிக் கொண்டு தானும் வருவதாக வெளிக்கிட்டார். எல்லா ஒழுங்குகளுடனும் மீளவும் அந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தேன்.

தட்டி பிடுங்கப்பட்டது. படலை முறித்து எடுக்கப்பட்டது. தேடிப்பிடித்து அடுத்த வீட்டில் தீப்பெட்டியும் எடுக்கப்பட்டது. முதலில் ஆச்சியின் உடலைத் தட்டியில் வளர்த்தி, அந்த ஒடுக்கமான வண்டிலில் கொண்டுபோய்ப் போட்டோம். படலையில் அந்த அக்காவின் உடலையும், கைகளையும் கிடத்தி வண்டிலில் ஆச்சிக்கு மேலே போட்டோம். கடைசியாய் அந்தத் தங்கையின் உடலைத்தூக்க முயன்றோம். நான் கைகளைப் பிடித்துத் தூக்கினேன். ஒருகை கழன்று எனது கையில் வந்தது. பொம்மையின் கை மூட்டுக் கழன்று விடுவதுபோல அவளது வளவளத்த சின்னக்கைகளையும் சளித்து முறிந்திருந்த தலைப்பகுதிகளையும், உடலையும் வண்டிலில் அந்த அக்காவிற்கு மேலே அடுக்கினோம்.

வண்டில் மாடுகள் அதுவரையில் பேசாமல் அமைதியாக நின்றன. 'டோச்' வெளிச்சத்திற்குக் கண்கள் நீலமாய் மினுங்கத் தூங்கி வழிந்தன. வழமைபோல வைக்கோலையோ அன்றி விறகையோ எதையோ ஏற்றுகிறார்களாக்கும் என அவை நினைத்திருக்கக்கூடும். ஒரு வேளை இந்தக் கும்மிருட்டிலும் நிம்மதியாக நித்திரை கொள்ள விடுகிறார்களில்லையே என்று திட்டித் தீர்த்திருக்குமோ?

இழுத்த திசையில் மாடுகள் வண்டிலை இழுத்து வந்தன. அந்தக் கிராமத்தின் கடற்கரையை அண்டிய ஒரு வெட்டையைச் சென்றடைந்தோம். அது சிலவேளை ஒரு விளையாட்டு மைதானமாகக் கூட இருந்திருக்கலாம். அந்த இருட்டில் ஒன்றுமே தெரியவில்லை. கிராமத்தின் எட்டத்துத் தொடுவான் விளிம்பில் எதிரியின் "பராலைற்" வெளிச்சங்களின் துண்டுகள் தெரிந்தன. அந்த வெட்டையில் மூன்று உடல்களையும் இறக்கி ஓரிரு கட்டைகள் போட்டு அடுக்கினோம். அருகிலிருந்த வேலிகளைப் பிடுங்கிச் சாற்றினோம். தென்னை ஓலைகள், தென்னை மட்டைகள் பனை ஓலைகள், கங்குமட்டைகள் போன்றவற்றைப் பொறுக்கிக் குவித்தோம். மழைபெய்து நனைந்து ஈரலிப்பு முற்றாகக்காயாமல் அவை இருந்தன.

நான் கூட்டிச் சென்றிருந்த வயது போன ஐயாக்களுள் ஒருவர், "நாளைக்கு நாங்களும் இப்படித்தானே" என்று சொன்னார். "என்ன ஐயா காய்ச்சல் வரஇல்லையா" என்று மற்றவரைக் கேட்டேன். "இல்லைத் தம்பி பிணத்தப் பாக்கிறபயம் போட்டுது. ஆனா மனநோய் வரும்போல கிடக்குது" என்றார். வண்டில்கார ஐயா சொன்னார் "தம்பி மன்னிச்சுக் கொள்ளுங்கோ புரிஞ்சு கொள்ளாம உங்களோட கனக்கக் கதைச்சுப் போட்டன் நீங்களே எத்தின வேலைகளைவிட்டுட்டுச் சண்டைக் களத்திலயிருந்து வந்து இதைச் செய்யேக்க நாங்கள் இந்தச் சின்ன உதவியைக்கூடச் செய்யாட்டால் பிறகென்ன. செத்ததுகள் எனக்குச் சொந்தம் தான் தம்பி. இப்பத்தான் எனக்குத் தெரியும்."

"அப்பு கொள்ளிய வையுங்கோ" என்று தீப்பெட்டியைக் கொடுத்தேன். அவர் அழுது கொண்டே குந்தியிருந்தார் அவரால் அப்போது எதுவுமே முடிந்திருக்கவில்லை. "நீயே கொழுத்திவிடு ராசா" என்றார். மற்றவர்களும் அப்படியே சொன்னார்கள் நான் பல தடவைகள் தீக்குச்சியைத் தட்டித்தட்டிப் பற்ற வைத்தேன் எரியவில்லை பின்னர் ஸ்கூட்டரிலிருந்து 'சூப்பி' 'ரின்னரை' எடுத்து சுற்றிவர ஊற்றிப் பற்றவைத்தேன். மிளாசி எரியத் தொடங்கியது. வெப்ப வெளிச்சத்துடன் தீயின் நாக்குகள் எழுந்து எழுந்து இருளிற் கரைந்து மறைந்தன. தீயின் ஒளியில் அப்பு சிவப்பாகவும், மங்கலாகவும் தெரிந்தார். வெய்யிலிற் துடிக்கிற புழுப்போல துடித்தப் புரண்டு கதறிக்கொண்டிருந்தார். சத்தம் வெளிவரக் கஸ்ரப்பட்டு முறுகியது. அப்புவின் தொண்டை அடைத்துவிட்டது. சொற்கள் தொண்டைக்குள்ளேயே இறுகிக் கழுத்து வீங்கிக்கொண்டிருந்தது. "என்னையும் தூக்கி நெருப்பிலேபோடு" என்பது போலிருந்தது அவரது செய்கை.

நான் போர் முனைக்குத்திரும்ப ஆயத்தமானேன். "சண்டை நடந்து கொண்டிருக்குது நான் போக வேணும். இதில நிக்காதீங்கோ வெளிச்சத்துக்கு அவங்கள் 'ஷெல்' அடிப்பாங்கள். அப்புவைக் கவனமாக் கூட்டிக்கொண்டு போங்கோ" என்று கூறிவிட்டு அவர்களிடமிருந்து விடைபெற்றேன். "இந்தச் சின்ன வயசில உங்கட நிலமை இப்படிப் போச்சுது, கவனம் தம்பி" என்றார் வண்டிற்கார ஐயா. கைமணிக்கூட்டில் நேரத்தைப் பார்த்தேன். நள்ளிரவு தாண்டி ஒரு மணியாகியிருந்தது. அண்ணாந்து மேலே பார்த்தேன். ஒன்றும் தெரியவில்லை. இருள் வெளிதவிர மழைமேகம் கவிந்து போயிருந்திருக்க வேண்டும். ஸ்கூட்டரை இயக்கி ஏறியிருந்து 'டோச்'சைப் பிடித்துக்கொண்டு முறுக்கத் தொடங்கினேன். பள்ளம் புட்டிகளில் ஸ்கூட்டர் எகிறிப்பாய்ந்து, கும்மிருட்டைப் பிளந்து கிளித்துக்கொண்டு பறந்தது. தோளிற் கொழுவியிருந்த துப்பாக்கி முதுகில் அடித்துக்கொண்டிருந்தது. அப்போதும் சரி அதன் பிறகு நின்ற சண்டைக் களங்களிலும் சரி அந்தச் சம்பவம் என்னுள் நிழலாடிக் கொண்டேயிருந்தது. என்னை உந்தித் தள்ளிக் கொண்டேயிருந்தது. என்னுள் சோகத்தையும் வளர்த்துக் கொண்டேயிருந்தது. இப்போதும் அப்படித்தான்.

> "தம்பி மன்னிச்சுக் கொள்ளுங்கோ புரிஞ்சுகொள்ளாம உங்களோட கனக்கக் கதைச்சுப் போட்டன் நீங்களே எத்தின வேலைகளைவிட்டுட்டுச் சண்டைக்களத்திலயிருந்து வந்து இதைச் செய்யேக்க நாங்கள் இந்தச் சின்ன உதவியைக்கூடச் செய்யாட்டால் பிறகென்ன."

## அறுவடை ஆரம்பம்

போர்ச் செலவீடு அதிகரிப்புக் குறித்து ஆய்வாளர்கள், எதிர்க்கட்சியினர் மட்டுமல்ல, ஆளும் கட்சியினரே பெரிதளவு பேசத் தொடங்கிவிட்டனர். போர்ச் செலவீடு அதிகரிப்பால் உற்பத்தித் துறையைப் பெருமளவு பாதித்துள்ளதோடு வேலை வாய்ப்பிற் பெரும் தாக்கத்தை விளைவிப்பதாக, அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கூறும்நிலை வந்துள்ளது. அத்தோடு, அதிகரிக்கும் செலவீட்டைத் தொடர்ந்தும் தாங்கமுடியாது எனவும் எச்சரிக்கும் கட்டத்திற்குச் சென்றுள்ளனர். அதிகரிக்கும் பாதுகாப்புச் செலவீடு காரணமாக நாடு பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இப் பாதுகாப்புச் செலவீனம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.5 வீதமாகும். சிறிலங்கா இதனை நீண்ட காலத்திற்குத் தாங்கிக் கொள்ள முடியாது. மேலும் விவசாய உற்பத்தி குறைந்து இருக்கின்றது. இந்த ஆண்டு மின்வெட்டுத் தொடர்கின்றது. எனவே, சென்ற ஆண்டு வளர்ச்சி வீதமான 5.5 சதவீதத்தை அடைவது சாத்தியமாக இருக்காது என்ற அமைச்சர் பீரிசின் கூற்றுச் சிறிலங்கா எதிர்நோக்கும் பொருண்மிய நெருக்கடியை வெளிப்படுத்தப் போதுமானதாகும். இதனை மேலும் வலியுறுத்துமாப் போன்று பாதுகாப்புச் செலவீடுகள் அதிகரிக்கும் காரணமாக வேலை வாய்ப்பு விடயத்தில் அரசு தனது குறிக் கோளை எட்ட முடியவில்லை என்ற சனாதிபதி சந்திரிகாவின் பேச்சு உள்ளது. சிறிலங்காவின் இராணுவச் செலவீடானது, 80களின் ஆரம்பத்தில் இருந்து அதிகரிக்கும் போக்கிற் காணப்பட்டாலும் 80களின் இறுதி ஆண்டுகளிற் செலவை அதனால் ஈடுகொடுக்கக் கூடியதாகவே இருந்தது. இதன் காரணமாக நெருக்கடிகளை ஓரளவு அரசினாற் சமாளிக்கக் கூடியதாக இருந்தது. ஆனால், 90களின் ஆரம்பத்தில் 2ஆம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்ததும் இராணுவச் செலவீடு, விரைவாக அதிகரிக்கும் போக்கைக் காட்டத் தொடங்கியது. விரலுக்கு மிஞ்சிய வீக்கம் ஆக அது மாறத் தொடங்கிய அதேவேளை, தனியார் மயமாக்கல் என்ற ரீதியில் விற்பனை செய்யப்பட்ட அரசின் உடமைகள் போரின் செலவை ஓரளவு தணிப்பதாக இருந்தது. ஆனால், 3ஆம் கட்ட ஈழப்போரின் தொடக்கத்திலேயே 90களின் மத்தியிற் சிறிலங்கா இராணுவச் செலவீடு கட்டுக்கடங்காது போனது. 1995இல் 3300 கோடி ரூபாய் ஆகவும், 1996இல் 4000 கோடி ரூபாய்க்குக் கூடுதலாகவும் செலவு இருந்தது. இது உள்நாட்டு உற்பத்தியின் 6.5 வீதத்திலும் அதிகமானதாக இருந்தது. இதே சமயம் பொருண்மியத்திலும் அதிகரித்த பாதுகாப்புச் செலவீனம் என்ற ரீதியில் மட்டுமல்ல – போர், வேறு பல வழிகளிலும் பாதித்துள்ளது. அது அபிவிருத்திக்கான நிதியிற் பெரும் வெட்டை ஏற்படுத்தியுள்ளது. உல்லாசப் பயணத்துறையில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தியதோடு, வெளிநாட்டு மூலதன வருகையில் பெரும் வீழ்ச்சியையும் கொண்டுவந்தது. இவற்றோடு பொருண்மிய இலக்குகளின் மீது மேற் கொள்ளப்பட்ட பெரும் தாக்குதலினாற் பல ஆயிரம் கோடி ரூபாய் இழப்பையும் ஏற்படுத்தியது. இதைத்தவிர ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தில் தனியார் மயமாக்கல் மூலம் கிடைத்த நிதியும் தற்பொழுது வீழ்ச்சி கண்டுள்ளது. 95இல் சந்திரிகா அரசு, தனியார் மயமாக்கியதோடு, தற்போது அரசிடம் சில முக்கிய துறைகள் தவிர வேறு ஒன்றும் இல்லை என்று சொல்லாம். இத்துறைகளையும் விற்றுத் தனியார் மயமாக்கி அரசு பணம் திரட்டுவதிலும் அதற்குத் தொழிலாளர் மத்தியிற் பலத்த எதிர்ப்பும் எழுந்துள்ளது. இதனாற் பல போராட்டங்களும் அதனாற் பெரும் பொருண்மிய இழப்புக்களும் ஏற்பட்டு வருகின்றது. ஆனால் சந்திரிகா அரசானது, போர் எவ்வளவு தூரத்திற்கு பொருண்மியத்தை ஒரு நெருக்கடியான கட்டத்திற்கு கொண்டு செல்லும் எனக் கணிப்பீடு எதையும் செய்யவில்லை. போர் குறித்து அவர்கள் கொண்டிருந்த தவறான கணிப்பீடும்; அதனால் மேற்கொண்ட தவறான முடிவுகளுமே நெருக்கடி நிலை தீவிரமாகுவதற்குக் காரணமாகும். இதனைச் சுருக்கமாகக் கூறுவதானால், இராணுவத்தை விரிவாக்கம் செய்ததும் யாழ். குடாநாட்டைக் கைப்பற்றியதும் போரைக் குறுகிய காலத்தில் முடிவுக்குக் கொண்டுவரும் என அரசு மேற்கொண்ட முடிவும் தவறாகும். ஆனால், தற்பொழுது போர் சந்திரிகா அரசின் இழிவடைந்த நிலைப்பாட்டைப் மாற்ற உதவவில்லை. அதாவது, யாழ். நகர் கைப்பற்றப்பட்டாலும் போர் முடிவுறவும் இல்லை; புலிகள் பலவீனப்படவும் இல்லை. மாறாக, சந்திரிகாவுக்கு எதிர் பாராதளவு பொருண்மிய நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், யாழ். நகரைப் பிடித்தபோது சந்திரிகாவுக்குப் புகழாரம் சூட்டிய பேரினவாதிகள், யாழ். நகர் மீது தொடுத்த படையெடுப்பினால் விளையப்போகும் பாதிப்புக்களைப் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள் என்பது நிச்சயம்.




# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் ஆறு

( தொடர்ச்சி )

எங்கே நாம் ரோம சாம்ராஜ்யத்தோடு போரிட்டோமோ, அதே இடத்திலேயே இரண்டாயிரம் வருடங்களின்பின் இப்போ நாம் பிரிட்டிஸ் சாம்ராஜ்யத்தோடு மோதுகிறோம்."

அரி பென் கானான், டேவிட் பென் அமியை விட சிறிது உயரமாக நின்றான். அவன், ஒரு அளவுக்கதிகமாக உற்சாகம் காட்டும் மகனைப் பார்க்கும் ஒரு தகப்பனைப்போல், சிறு புன்னகையுடன் நோக்கினான்.

நாம் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பதே ஒரு புதுமைதான். நாங்கள் ரோமர்களையும், கிரேக்கர்களையும், ஏன் உரிட்லரையும் மீறி வாழ்கிறோம். நாங்கள் எங்களை அடக்கியாள முயன்ற அடக்குமுறையாளர்களையும் மீறி வாழ்ந்துவிட்டோம்.

மிகுதிக் கதையையும் சொல் டேவிட். பார்கொச்பா புரட்சியின் பின், ரோம சைனியங்கள் திரும்பி வந்து, நகரத்துக்குப் பின் நகரமாக எங்கள் மக்களைப் படுகொலை செய்தது. பெய்ரார் (Beitar) நடந்த இறுதி யுத்தத்தில் கொலையுண்ட எமது பெண்களினதும், குழந்தைகளினதும் சிவப்பு இரத்த ஆறு இரு மைல்வரை ஓடியது. தலைவர்களில் ஒருவராகிய அக்கிவா (Akiva)வின் தோலை உயிருடன் உரித்தனர். பார்கொச்பா ரோமுக்குக் கொண்டு செல்லப்பட்டு சிங்கத்திற்கு இரையாக்கப்பட்டார். அல்லது அது இன்னொரு புரட்சியின் பின் சிங்கத்துக்கு இரையாகிய பார்கியோராவா? (Bargiora) இந்தப் புரட்சிகள் என்னைத் தடுமாற வைத்துவிடும். ஆமாம். வேதாகமும் எமது சரித்திரமும் அருமையான கதைகளாலும், வசதிக்கேற்ற புதுமைகளாலும் நிரம்பிக் கிடக்கின்றன. ஆனால் இன்றுள்ளதுதான் நிதர்சனம். சூரியனை நிலையில் நிறுத்தவும், சுவர்களைச் சரிந்து விழப்பண்ணவும் யோசுவாக்கள் (Joshuva) (ஒரு வேதாகம கதை நாயகன்–யூதரை அடிமைத் தனத்திலிருந்து மீட்டவர்) கானானியர்களின் தேர்கள் சேற்றில் சிக்கிக் கொண்டது போல், பிரிட்டிஸ் டாங்கிகள் புதைய மாட்டா? பாரோவின் சேனைகளை விழுங்கியது போல், பிரிட்டிஸ் கடற்படையைக் கடலும் விழுங்காது. புதுமைகள் நடக்கும் காலம் போய்விட்டது, டேவிட்."

"அது போகவில்லை, நாம் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பதே ஒரு புதுமைதான். நாங்கள் ரோமர்களையும், கிரேக்கர்களையும், ஏன் உரிட்லரையும் மீறி வாழ்கிறோம். நாங்கள் எங்களை அடக்கியாள முயன்ற அடக்கு முறையாளர்களையும் மீறி வாழ்ந்துவிட்டோம். பிரிட்டிஸ் சாம்ராஜ்யத்தையும் மீறி வாழ்வோம்.

"நல்லது டேவிட் ஒன்று மட்டும் எனக்கு யூதர்களைப் பற்றிச் சொல்ல முடியும். விவாதிப்பது எப்படியென்று எங்களுக்குத் தெரியும். வா நாங்கள் நித்திரை கொள்வோம்."

### அத்தியாயம் ஏழு

"உங்களுடைய முறை சேர்," பிரெட் கால்ட்வெல் மீண்டும் ஞாபகமூட்டினார்.

"ஆமாம், என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று கூறியபடி பிரிகேடியர் சுதர்லாண்ட், சதுரங்கப் பலகையை அவதானித்தபின் தனது காலால் காயொன்றை முன்னுக்கு நகர்த்தினார். கால்ட்வெல் ஒரு குதிரைப் படைக் காயை வெளியே கொண்டு வந்ததும் அதற்கு எதிராகத் தனது குதிரைப்படைக் காயை எதிர் வியூகமமைத்தார். பிரிகேடியர், சுங்கான் நூர்ந்து போய்விடவே, "இதை உடைக்க வேண்டும்" என்று ஆத்திரத்துடன் முணுமுணுத்துவிட்டுத் திரும்பவும் பற்ற வைத்துக் கொண்டார்.

சைரன்களின் நிதானமான கீழ் ஸ்தாயி கீச்சிட்ட ஓசையைக் கேட்டதும் இருவருமே பார்வையை உயர்த்தினர். சுதர்லாண்ட் சுவர் மணிக்கூட்டை ஏறிட்டுப் பார்த்தார். இது சட்டவிரோதக் கப்பலான "டோர் ஒவ் ஹோப்" பிலிருந்து கொண்டு வரப்பட்ட அகதிகளாக இருக்கவேண்டும்.

நம்பிக்கையின் கதவுகள்..........(Door of Hope), சீயோனின் கதவுகள்..........(Gates of zion), வாக்களிக்கப்பட்ட பூமி.......... .(Promised Land), டேவிட்டின் நட்சத்திரம்..........(Star of david) கால்ட்வெல் கேலி தொனிக்க உச்சரித்தார் "எனக்கு ஒன்று மட்டும் சொல்ல முடியும். தடையைத் தாண்டி அகதிகளைக் கொண்டு செல்ல முயலும் கப்பல்களுக்கு அவர்கள் கவர்ச்சியான பெயர்களைக் கொடுக்கிறார்கள். சுதர்லாண்டின் நெற்றிச் சுருக்கங்கள் விழத்தொடங்கின. அவர், தான் அடுத்துச் செய்ய வேண்டிய காய் நகர்த்தலைப் பற்றி, சதுரங்கப் பலகையை ஆராய முற்பட்டாலும், சைரனின் ஓசை அவரது காதுகளை விட்டு நீங்குவதாயில்லை. அவர், தந்தநிறமான சதுரங்கக் காய்களை நோக்கிக் கொண்டிருந்தாலும் மனதில் இயந்திரத்துப்பாக்கிகள், கவச வண்டிகள் சூழச் சென்று கொண்டிருக்கும் வாகனத் தொடரில் வேதனையோடு செல்லும் முகங்களை உருவகப்படுத்த முயன்று கொண்டிருந்தார். கால்ட்வெல் உமக்கு ஆட்சேபனை இல்லையென்றால் நான் படுக்கைக்குச் செல்ல விரும்புகிறேன். ஏதாவது பிரச்சினையா?"

"இல்லை குட்நைட்" சொல்லிவிட்டுத் தன் அறைக்குள் சென்ற பிரிகேடியர், கதவுகளை மூடிவிட்டுப் புகைக்கும் மேலங்கியைத் தளர்த்திக் கொண்டார், சைரன்கள் தாங்கமுடியாத அளவுக்கு பலமாகக் கிறீச்சிடுவது போல்தோன்றியது. அவர் அச்சத்தைக் குறைக்க யன்னலை அறைந்து சாத்தினாலும் அது கேட்டுக் கொண்டேயிருந்தது.

புரூஸ் சுதர்லாண்ட் கண்ணாடி முன் நின்றபடி தனக்கு என்ன நிகழ்கிறது என்று சிந்தித்தார். சுதர்லாண்ட் மேட்டு நிலங்களைப் பிறப்பிடமாகக்கொண்டவர். இங்கிலாந்தைப் போலவே, நீண்ட கால சரித்திரமுடைய கௌரவமான தொழில்களின் தொடரில் இன்னொரு கௌரவமான இடத்தில் இருக்கிறார். ஆயினும், சைப்பிரசில் இருந்த கடைசிச் சில வாரங்களில் என்னவோ நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஏதோ ஒன்று அவரைச் சின்னாபின்னமாக்குகிறது. அவர் கண்ணாடிக்கு முன் நின்று தன்னுடைய நீரோட்டமான கண்களையே பார்த்துக்கொண்டு, இந்த நாசம் எங்கே தொடங்கியது என்று யோசித்தார்.

சுதர்லாண்ட் எந்தக் குழுவிலும் வைத்திருக்கக் கூடிய நல்ல மனிதன், என்று ஈற்றின் (Eton- பிரபல ஆங்கில நாட்டு சர்வகலாசாலை) சர்வகலாசாலையின் ஆண்டறிக்கை குறிப்பிட்டுள்ளது. சுதர்லாண்ட் ஒரு நல்ல மனிதன், நல்ல குடும்பம், பொருத்தமான கல்வி, பொருத்தமான தொழில். இராணுவத்திலோ? நல்ல தெரிவு எனப் பெயர் பெற்றான் இந்த புரூஸ் கிழவன். சுதர்லாண்ட் குடும்பத்தவர்களான நாம் பல நூற்றாண்டுகளாக இராணுவத்தில் சேவையாற்றி வந்துள்ளோம்.

திருமண பந்தமும் தகுந்ததே. நெடி அஸ்ரன் (Neddie Ashton), கேர்ணல் அஸ்ரனுடைய மகள். ஒரு சிறந்த தெரிவுதான். நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவள் அந்த நெடி அஸ்ரன். விருந்தினர்களை உபசரிப்பதில் தேர்ந்தவள் அந்தப்பெண். தகுந்த ஆட்களுக்குச் சரியான கௌரவமளிப்பாள். உன்னுடைய தொழில் வெற்றிக்குப் பெரிதும் உதவுவாள். அருமையான ஜோடி, சுதர்லாண்டுகளும் அஸ்ரன்களும்.

தனது தோல்வி எங்கே இருக்கிறது, சுதர்லாண்ட் சிந்தித்தார். நெடி அழகிய குழந்தைகளைப் பெற்றுத் தந்தாள். அல்பேர்ட், சுதர்லாண்ட் பரம்பரையின் பெருமையைக் காப்பாற்றக் கூடியவன். ஏற்கனவே தகப்பனாரின் பழைய ரெஜிமெண்டில் கப்டனாகிவிட்டான். மார்த்தாவோ தனக்கென அழகிய குடும்ப வாழ்க்கையை அமைத்துக் கொண்டுவிட்டாள்.

பழைய சிந்தனைகளில் மூழ்கியிருந்த அவர், அலுமாரியைத் திறந்து தனது இரவு உடையை அணிந்து கொண்டார். தனது தாடைப்பகுதியின் கொழுப்பு மடிப்புகளைத் தட்டிப் பார்த்துவிட்டு, ஐம்பத்தைந்து வயதிற்கு இது பரவாயில்லை என நினைத்துக் கொண்டார். இன்னும் அவரில் இளமை மீதமிருந்தது.

சமாதான காலத்தில் இராணுவ சேவையில் மெதுவாக, சிரமமாகப் பெற்ற முன்னேற்றத்தைப் பார்க்க, 2வது உலகமகா யுத்தத்தின்போது மிக விரைவாக மேலுக்கு வந்தார். இந்தியா, கொங் கொங், சிங்கப்பூர் மத்தியகிழக்கு நாடுகள் ஆகிய இடங்களில் சேவையாற்றினார். அவருடைய உண்மையான திறமையை வெளிக்காட்ட ஒரு யுத்தம் தேவையாகவிருந்தது. ஒரு தனித்துவம் வாய்ந்த காலாட் படைக் கொமாண்டராக (Commander) மிளிர்ந்தார். 2வது உலகப் போரில், நேசநாட்டுப் படையினரின் ஐரோப்பிய வெற்றி நாள் (V-E-Day) அவரைப் பிரிகேடியராகக் கண்டது. அவர் படுக்கையறைக் காலணிகளை அணிந்து கொண்டு தாழ்வான ஒரு இருக்கையில் அமர்ந்து, விளக்கைக் குறைத்துவிட்டுக் கொண்டு நினைவலைகளில் மூழ்கிப்போனார்.

நெடி எப்போதும் ஒரு நல்ல மனைவியாக விளங்கினாள். அவள் ஒரு நல்ல தாயாகவும், பிரமிக்கத்தக்க விதத்தில் விருந்தினரை உபசரிப்பவளாகவும், காலனித்துவ இராணுவ சேவையின் அதிகாரியின் மனைவியாக இருப்பதற்குச் சகலதகுதிகளும் பெற்றவளாகவும் விளங்கினாள். அவர் மிகவும் அதிஸ்டசாலியாக இருந்தார். எமக்கிடையில் எப்போ விரிசல் விழத்தொடங்கியது? ஆமாம், பல வருடங்களுக்கு முன் சிங்கப்பூரில்தான் தொடங்கியது என ஞாபகப்படுத்திக் கொண்டார்.

இவரது களவுறவு பற்றிய ஆதாரங்களோடு நெடி குற்றம்சாட்டியபோது, அவள் கண்களில் அதனால் ஏற்பட்ட பாதிப்பு நன்றாகவே பிரதிபலித்தது.

"இது என்னை ஆழமாகப் பாதிக்கவில்லையென்று என்னால் கூறமுடியாது." உடலில் ஊறியுள்ள பெருமை, அழ இடம் கொடுக்கவில்லை. அவள் மேலும்

**லியோன் யூரிஸ்**

சொன்னாள், "நான் மன்னிக்கவும் மறந்துவிடவும் தயாராயிருக்கிறேன். குழந்தைகளைப்பற்றி யோசிக்க வேண்டியிருக்கிறது. உங்களுடைய தொழிலைப்பற்றியும், குடும்ப கௌரவங்களைப் பற்றியும் யோசிக்க வேண்டும். நான் உங்களுடன் தொடர்ந்தும் வாழ முயற்சிக்கிறேன், ஆனால், அந்தப் பெண்ணை மீண்டும் சந்திக்க முயலக்கூடாது. அத்தோடு சிங்கப்பூரிலிருந்து மாற்றலுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

"நான் மன்னிக்கவும் மறந்துவிடவும் தயாராயிருக்கிறேன். குழந்தைகளைப்பற்றி யோசிக்க வேண்டியிருக்கிறது. உங்களுடைய தொழிலைப்பற்றியும், குடும்ப கௌரவங்களைப் பற்றியும் யோசிக்க வேண்டும். நான் உங்களுடன் தொடர்ந்தும் வாழ முயற்சிக்கிறேன், ஆனால், அந்தப் பெண்ணை மீண்டும் சந்திக்க முயலக்கூடாது."

"நான் அவளைத் திரும்பச் சந்திக்க மாட்டேன் நெடி" புரூஸ் சுதர்லாண்ட் உறுதியளித்தார்.

தொடரும்

# எங்களின் விமானமும் என்றோ ஓர் நாள் வரும்





அன்றொருநாள்
அளவெட்டியில் நாங்கள்
அதிரடி செய்தோம்
சமர் முடிந்தது
பத்து நிமிடத்தில்,
விழுப்புண் பட்ட
எங்கள் தோழர்கள்
ஒரு மருத்துவமனை வாசலில்.........

இன்றும்
நாங்கள் அங்கு
சமர் புரிந்தோம்
அன்று போலவே
இன்றும்

எங்கள் தோழர்கள்
விழுப்புண் பட்டார்கள்
முன்பு போல நாங்கள்
அன்று வந்த வீதியால்
வரமுடியவில்லை
வழியெங்கும்
சிங்களப்பேரரக்கர் படைகள்.........

இன்று
நாங்கள் அங்கு
பல மணித்தியாலங்கள்
காத்திருந்தோம்
காரிருள் வரும்வரைக்கும்
வந்த பின்பே

கடல் மீது படகில் வந்தோம்
மருத்துவமனைக்கு

எங்களிடம்
விமானமில்லை
விழுப்புண்பட்ட எம் தோழரை
தூக்கிச் செ ல்ல
அதனால்
நாங்கள் சோர்ந்து விடவில்லை
எங்களின் விமானமும்
என்றோ ஓர் நாள் வரும்
எங்களைத் தூக்கிச்செல்ல. ✳





போராளியின் பேனாவிலிருந்து

- தமிழ்மாறன் -


T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 980 F: 22381040

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
Tel: 718-657-9463
Fax: 718-523-7399

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Grt. Hertoginnein - 106
2517 EL Den Haag, Nederland
Tel: 070-348 1963, Fax: 070 362 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden.

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8